# பெண்ணிய இயங்கியல் –
# பன்மைத்துவ உரையாடல்கள்

# Feminist Dialectics and Pluralistic Dialogues


**அரங்க.மல்லிகா**

**ர. சுரேஷ்**

**ப. சசிரேகா**

**தி. உமாதேவி**

**Editors**

R. Mallika
R. Suresh
P. Sasireha
T. Uma Devi

R. Mallika
Associate Professor and Head,
Department of Tamil,
Ethiraj College for Women,
Chennai-600008, Tamil Nadu, India

Dr. P. Sasireha
Assistant Professor,
Department of Tamil,
Cauvery College for Women,
Tiruchirappalli-620018, Tamil Nadu, India

Dr. R. Suresh
Assistant Professor,
Department of Tamil,
Erode Arts and Science College,
205, Chennimalai Road, Rangampalayam,
Erode-638009, Tamil Nadu, India

Dr. T. Uma Devi,
Professor,
Department of Modern Indian
Languages and Literary studies,
University of Delhi,
New Delhi-110009, India

Title: Feminist Dialectics and Pluralistic Dialogues

Date: 10-05-2022

Edition: 1

ISBN 9789393522115 ISBN 9789393522122 (eBook)

https://doi.org/10.34256/fem1

© Editors & Authors. This book is an open access publication. **Open Access** This book is licensed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (http://creativecommons.org/licenses/by/4.0/), which permits use, sharing, adaptation, distribution and reproduction in any medium or format, as long as you give appropriate credit to the original author(s) and the source, provide a link to the Creative Commons license and indicate if changes were made.

The images or other third party material in this book are included in the book's Creative Commons license, unless indicated otherwise in a credit line to the material. If material is not included in the book's Creative Commons license and your intended use is not permitted by statutory regulation or exceeds the permitted use, you will need to obtain permission directly from the copyright holder.

The use of general descriptive names, registered names, trademarks, service marks, etc. in this publication does not imply, even in the absence of a specific statement, that such names are exempt from the relevant protective laws and regulations and therefore free for general use.

The publisher, the authors and the editors are safe to assume that the advice and information in this book are believed to be true and accurate at the date of publication. Neither the publisher nor the authors or the editors give a warranty, expressed or implied, with respect to the material contained herein or for any errors or omissions that may have been made. The publisher remains neutral with regard to jurisdictional claims in published maps and institutional affiliations.

This Tamil Aivu Kalanjiyam imprint is published by the registered company IOR PRESS.

The registered company address is: 5/11, Perumal Kovil Street, Naickenpalayam, Coimbatore-641020 Tamil Nadu, India.

# அணிந்துரை

பெண்ணியம் என்பது பெண்கள் சம உரிமைபெறவும், சம வாய்ப்பைப் பெறவும், சம கடமையாற்றவும் இயக்கமாக நெறிப்படுத்துவதற்கு அமைக்கப்பட்ட ஒரு இயக்கம் ஆகும். உளவியல் பூர்வமாகவும், மார்க்சிய தத்துவ அடிப்படையிலும், பின்நவீனத்துவ பார்வையிலும், கட்டவிழ்ப்பு கொள்கையோடு பெண்களின் உரிமைகளை, பொறுப்புகளை திறனாய்வு செய்யக்கூடிய ஒரு கோட்பாடு பெண்ணியமாக வளர்ந்திருக்கின்றது. இதில் பாலியல், பாலியல் சார்ந்த சாதி, மத, இன ஆதிக்க அணுகுமுறைகளைக் களைந்து ஆண்களின் மேலாண்மை உளவியல் கட்டமைப்பைக் கட்டுடைத்து ஆணும் பெண்ணும் சமம் என்பதற்கான புரிதலை சமூகத்தில் உறுதிப்படுத்தக் கூடிய ஒரு இயக்கம், சிந்தனை ஆகும். பல்வேறுபட்ட வாய்ப்புகள், தொழில்சார்ந்த பங்கேற்பு, கல்வியில் சம அந்தஸ்து பெறுதல், வேலைவாய்ப்பில் சமமான கூலி பெறுதல், குடும்பத்தில் மன அழுத்தங்கள் இன்றி இயல்பான மனுஷியாக நடத்தப்படுவதற்கு உரிய அங்கீகாரத்தைக் கோருதல் என்பதாக நாம் இதனைப் புரிந்து கொள்ளலாம். இந்த அடிப்படையில் இலக்கியம் என்பது சமூகத்தினுடைய மதிப்பீடுகளின் பிரதிபலிப்பு. இந்தப் பிரதிபலிப்பு ஒரு சார்பானதாக இருக்கும்போது அதனை விசாரணைக்கு உட்படுத்துவதும், சமூக சிந்தனையோடு அணுகுவதற்கும் உரிய நிகழ்வுகளின் அல்லது வரலாறுகளின் அல்லது மனிதச் செயல்பாடுகளின் மூலமாக பதிவாகும் இலக்கியங்களை பெண்ணினுடைய பார்வையிலிருந்து பெண்ணினுடைய மொழி வாயிலாக அறிந்து கொள்வதிலிருந்து, ஆண்களுக்கு பெண்ணின் மன உணர்வுகளை சரியாக புரிந்துகொள்ள செய்வதிலிருந்து நாம் ஒரு மாற்று இலக்கியத்தை மடைமாற்றம் செய்து புரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. அதன் காரணமாக இதுவரை எழுதப்பட்ட பெண் நலம் புனைந்துரைத்தல் வழியாக எழுதப்பட்ட ஆண்களினுடைய இலக்கியத்தை பெண்ணியத் திறனாய்வுக்குள் பார்க்கும் பொழுது முற்றிலும் அது தந்தைமைச் சமூக ஆண் மன உணர்வுகளின் அடையாளமாகவே இருந்து வருகிறது என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இப்படி ஆண் மேலாதிக்க சிந்தனைகளை விசாரணைக்கு உட்படுத்தி, பெண் தனக்கான

அனுபவங்களை தன்னிலை சார்ந்து விவாதிக்க கூடிய ஒரு மாற்றத்தை பெண்ணிய எழுத்துக்கள் உருவாக்கித் தந்திருக்கின்றன. பெண் எழுத்து பெண்ணை எழுதுதல், பெண்மையை எழுதுதல், பெண் தன் நிலையை எழுதுதல் என்பதாகப் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை இளந்தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கான ஒரு முயற்சியாக பெண்ணியம் சார்ந்த கருத்தரங்கங்கள் ஏராளமாக இந்தியச் சூழலிலும் பன்னாட்டுச் சூழலிலும் நடைபெற்றுவருகின்றன. கொரானா கோவிட்19 நெருக்கடி கால சூழலில் இணைய வழியாக நடந்து கொண்டிருக்கக் கூடிய பல பெண்ணிய கருத்தரங்குகள் மக்கள் மத்தியில் ஒரு புதிய பரிணாமத்தை காட்டி இருக்கின்றது என்றாலும் பெண்மை இலக்கியம், பெண்ணிய இலக்கியம் என்பதற்கான வரையறை இன்னும் ஆய்வாளர்களால் சரியாக புரிந்துகொள்ளப்படவில்லை. பெண்ணிய இலக்கியங்கள் ஆண்களின் பார்வையில் உதாரணமாக தி.ஜானகிராமன், ஜெயகாந்தன் போன்றவர்கள் பாலியல் சார்ந்த பெண் விடுதலை உணர்வை இலக்கியங்களில் படைத்திருக்கிறார்கள் என்றாலும் பெண்ணியத் திறனாய்வு கண்கொண்டு ஆய்வு செய்யும்போது ஜெயகாந்தன் போன்றவர்கள் பெண் விடுதலைக்கு எதிரானவர்களாகவே மதிப்பிடப்படுகிறார்கள். பாரதியோ, பாரதிதாசனோ பெண்ணுரிமை பேசி இருக்கிறார்கள் என்றாலும் பெண்ணின விடுதலையை பேசவில்லை என்பதை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். இவ்விடத்தில் இதுவரையில் பெண்ணியம் சார்ந்து வெளிவருகின்ற ஆய்வுக்கட்டுரைகளை பார்க்கும்போது அவை பெண்மை சார்ந்த ஆய்வாகவே இருக்கின்றன. இதனை மாற்றி பெண்ணியம் என்பது சாதி, மத, இன வேறுபாடுகளிலிருந்து விடுவித்து அகவிடுதலை வேட்கைகளை, அகம் சார்ந்த அந்தரங்க அரசியலை பெண்ணிய அரசியலாக முன்வைக்க வேண்டிய தேவையை ஆய்வாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். பெண்ணிய அரசியல் என்பது பெண்மை குணங்களையும், பெண் தன்னிலை அதிகாரத்தையும் சமமாகப் பார்த்து தனக்கான நுண்ணரசியலை, தேர்வு உரிமையை, சமூகப் பொறுப்புணர்வை மதிப்பீடுகளாகத் தரக்கூடிய இலக்கிய புனைவுகளை பெண் எழுத்துக்கள் புதுப்பிக்க வேண்டும். இந்த இடத்தில் தான் பிரென்சுப் பெண்ணிய தத்துவவியலாளர்கள் ஹெலன் சீக்சு, ஜூலியா கிறிஸ்தவா போன்றவர்களின் பெண்மொழி ஆய்வுகள் பெண்ணரசியலைப் புரிந்துகொள்ள உதவும். இந்த சிந்தனைகளின் அடிப்படையில் “பெண்ணிய இயங்கியல் – பன்மைத்துவ உரையாடல்கள்” எனும் பொருண்மையிலமைந்த இந்நூல் தொகுப்பில் இடம்பெற்ற கட்டுரைகளை பார்க்கும் பொழுது பெண்ணிய அழகியல் சார்ந்த மதிப்பீடுகள் இன்னும் ஆழமாகச் செய்யப்பட

வேண்டும் என்பதை கட்டுரையாளர்கள் முன்னெடுத்திருக்கின்றார்கள் என்றாலும் அவர்கள் கடக்க வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது. கட்டுரைகளை வழங்கிய அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைப் பதிவு செய்து கொள்கின்றேன்.

முனைவர் அரங்க.மல்லிகா,

இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்,

தமிழ்முதுகலை மற்றும் உயராய்வுத்துறை,

எத்திராஜ் மகளிர் கல்லூரி.

# உள்ளடக்கம்


| No | Table of Contents | Pg. No |
|---|---|---|
| 1 | *நவீனப் பெண்கவிஞர்களின் கவிதைகளும் பெண்மொழியும்*<br>*ப. கல்பனா, பா. இரவிக்குமார்* | 1-21 |
| 2 | *பெண் சிசுக்கொலை என்னும் இன ஒழிப்பு*<br>*சே. செந்தமிழ்ப்பாவை* | 22-40 |
| 3 | *பெண்ணியம் – கருத்தியல்*<br>*வி. இலட்சுமி* | 41-53 |
| 4 | *மொய்விருந்து பண்பாடும் ஆண் இயங்கியலும்*<br>*பா. தென்றல்* | 54-66 |
| 5 | *சங்க இலக்கியங்களில் பெண்பாலினம்*<br>*ம. செல்வ ரோசரி புஷ்பா* | 67-72 |
| 6 | *சமூகவியல் பார்வையில் பெண்ணியம்*<br>*செ. முத்துநகை* | 73-80 |
| 7 | *பெண்மய்யத் திறனாய்வு – நோக்கும் போக்கும்*<br>*வெ. நிர்மலா* | 81-88 |
| 8 | *சங்க காலப் பெண்களின் கல்வியும் செயல்பாடும்*<br>*ஜா. அருள் சுனிலா* | 89-104 |
| 9 | *சாதியத்தால் நொறுக்கப்படும் பெண் பாலினம்*<br>*ச. கல்பனா* | 105-118 |
| 10 | *சித்தர் பாடல்களில் பெண்ணுடல்*<br>*தோ. நிஷா* | 119-129 |
| 11 | *யேசு காவியத்தில் பெண்கள்*<br>*இ. அல்போன்சாள்* | 130-143 |

# நவீனப் பெண்கவிஞர்களின் கவிதைகளும் பெண்மொழியும்

# Modern Tamil Women Poetry and Feminine Voices

**ப. கல்பனா [அ,*], பா. இரவிக்குமார் [ஆ]**

[அ] தமிழ்த்துறை, பாரதி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை–600108, இந்தியா.

[ஆ] சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி–605014, இந்தியா.

B. Kalpana [a,*], B. Ravikumar [b]

[a] Department of Tamil, Bharathi Women's College (Autonomous), Chennai–600108, India.

[b] Subramania Bharathi School of Tamil, Pondicherry University, Puducherry–605014, India.

Email: kalpanagraj@gmail.com

DOI: https://doi.org/10.34256/fem11

## Abstract:

When we analyze the Tamil literary history, we can understand that the number of Tamil women poets is less. But the situation changed during the later half of the twentieth century. Women poets started writing poetry against male chauvinism, and they wrote poems to establish their self-identity. This essay carefully analyses the social situation, the historical and political background, and the context where women poets wrote their writings. This essay also tries to give the statistics of the books published, especially the books about Feminism, and the Anthology of Tamil women poems. In Tamil context, so far Tamil fictions have raised questions about Myths, Epics and puranas. This essay claims that even in new poetry, Tamil women poets have raised questions on Myths and Puranas. Women Poets like Geetha Sukumaran, Sasikala Babu, Bala Bharathi, Leena Manimekalai, Thamarai have written poems in numerous numbers. This essay analyzes the content and context of those poems. This essay, tries to answer questions like what in

Feminine Voice? How it differs from male language? and what are the elements in Feminine Voice that varies from male poetry? With a thorough understanding of the principles of Feminism, this essay analyzes the Feminine writing in Tamil poetry which is written against male chauvinism. This essay also deeply analyzes about the mythological ideas constructed by the Male-chauvinistic society, and how the women writers uses them to de-construct those ideas, and how they construct the Female Language to establish their identity.

**முன்னுரை:**

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே தமிழ்ச் சூழலில் 'பெண்ணியம்', 'பெண்நிலைவாதம்', 'பெண்மொழி' போன்ற கருத்தாக்கங்கள் கூர்மைப்படத் தொடங்கின. தமிழ் இலக்கிய வரலாற்றில், சங்கப் பெண்கவிஞர்களைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், 'ஆண்டாள்', 'காரைக்கால் அம்மையார்', 'ஔவையார்' போன்ற கவிஞர்களே பெண்கவிஞர்களாக எஞ்சுகின்றனர். ஆனால், இருபத்தோராம் நூற்றாண்டில், கடந்த இருபது வருடங்களாக மிகுதியான கவிஞர்களின் கவிதைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஆணாதிக்கச் சொல்லாடல்களைக் கலைத்துவிட்டு, இப் பெண்கவிஞர்கள் புதிய பாடுபொருள்களில், புதிய மொழியில் கவிதைகளைப் படைத்து வருகின்றனர். இக்கட்டுரை, தமிழ்ச் சூழலில், நவீனப் பெண்கவிஞர்கள் கவிதைகளைப் படைக்கத் தொடங்கிய வரலாற்றுப் பின்னணியை அறிமுகப்படுத்துவதுடன், அவர்களுடைய கவிதைகளின் பாடுபொருள்களையும் பெண்மொழியையும் ஆராயும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான நீண்ட பாரம்பரியம் கொண்ட தமிழ்க்கவிதை வெளியில், 'பெண்' குறித்து ஏராளமான பதிவுகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. எனினும், 'பெண்மொழி' யைப் பேச அவை எந்த அளவுக்கு முயன்றுள்ளன என்பதே இன்றைய நவீனப் பெண்ணியலாளர்கள் எழுப்பும் இன்றியமையாத வினாவாகும். பொதுவாக, மொழியைக் கையாளும் அதிகாரம் யார்வசம் உள்ளதோ, அவரது கண்ணோட்டத்தை ஒட்டியே

மொழியும் வடிவமைக்கப்படுவதைக் காணமுடிகின்றது. தாய்வழிச் சமூக அமைப்பு, தந்தைவழிப்பட்டதாக மாறிய பின்னர், பொருளாதாரம், அரசியல், சட்டம், சமயம் எனப் பல துறைகளிலும் ஆண்களே ஆதிக்கம் செலுத்தியதால் மொழி ஆண்வயப்பட்டதாக மாறிற்று.

பெருமையும் உரனும் ஆடூஉ மேன (தொல்.பொருள்.களவு. 7)

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்

நிச்சமும் பெண்பாற் குரிய (தொல்.பொருள்.களவு. 8)

தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்

எண்ணுங்காலை கிழத்திக் கில்லை (தொல்.பொருள். 116)

என இரட்டைநிலைப் போக்குகள் கவிதை மரபில் இடம்பெற ஆண்மொழியே அடிப்படையாக அமைந்தது. வரலாற்றில் ‘தாய்வழிச் சமூகம்’ என்பது முற்றிலுமாக அழித்தொழிக்கப்பட்டுத் தந்தையை முதன்மையாகக் கொண்ட பெருமன்னர், நிலவுடைமை, முதலாளித்துவச் சமூகங்கள் செயல்பட்ட சென்ற பல நூற்றாண்டுகளாகப் பெண்ணுக்கான இடம் என்பது, அவளது வீட்டுக்குள்ளும் அவ் வீடு சார்ந்த அலுவல்களுக்குள்ளும் ஒடுங்கிச் சிறைப்பட்டிருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகின் பல நாடுகளிலும் நவீனத்துவச் சிந்தனைகள் எழுச்சிபெற்றன. இந்த எழுச்சி, விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் நீக்ரோக்களுக்கும் தலித்துகளுக்கும் பிற ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களுக்கும் பயன்பட்டது போலவே, பெண்களுக்கும் உதவிற்று. இதன் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் பெண்கள் பெறாத வாக்குரிமை, சொத்துரிமை, கல்வியுரிமை, திருமண உரிமை, மணவிலக்கு உரிமை, கல்வி கற்கும் உரிமை எனப் பலவற்றையும் பெண்கள் பெற்றனர். மேற்சுட்டிய உரிமைகளைப் பெற்றதன் உடன் நிகழ்வு, அல்லது உடன் விளைவு ‘பெண் சிந்தனை முறைமை’ உருவாக அடிப்படைக் காரணியாக அமைந்தது.

‘ஆண் எதையும் எப்படியும் எழுதலாம். பெண், இதை மட்டுமே, இப்படி மட்டுமே எழுதலாம்; எழுத வேண்டும்’ என்று கூறப்படும் அனைத்தையும் உடைத்து நொறுக்கும்போதுதான் பெண்ணுக்குள் ஒரு சக்திவாய்ந்த மொழி

உருவாகும். மொழியில் காணப்படும் பால் வேறுபாடுகள், ஆணை மையமிட்டதாக அமைந்த மரபுவழி வந்த மொழிக்கூறுகள் இவற்றை நுட்பமாக ஆராயும்பொழுது, மொழியைப் பயன்படுத்துவதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டையும் பெண்ணியத் திறனாய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தமிழ்க்கவிதை மரபைப் பொருத்தவரையில், ‘எழுத்து’ முதன்மையளித்த அகவயக் கவிதைகளையும், ‘வானம்பாடி’ அழுத்தம் கொடுத்த புறவயக் கவிதைகளையும், சமகாலச் சமுகத் தேவைகளுடன் இணைத்து அகப்புறக் கவிதைகளாக மடைமாற்றம் செய்ததில், தொண்ணூறுகளுக்குப் பிறகு வெளிவந்த பெண் கவிஞர்களின் கவிதைகளுக்கும் தலித்தியக் கவிதைகளுக்கும் பெரும்பங்கு உண்டு.

தமிழ் இலக்கிய வரலாற்றில், பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை பெண்கவிஞர்களின் பங்களிப்புகள் குறைவு. சங்க காலத்தில் ‘ஔவையார்’, ‘வெள்ளிவீதியார்’, ‘ஆதிமந்தியார்’ என ஏறக்குறைய நாற்பது பெண்கவிஞர்கள் இருந்ததாக அறிகிறோம். பக்தி இலக்கிய காலத்தில் ‘ஆண்டாள்’, ‘காரைக்காலம்மையார்’ என்று விரல்விட்டு எண்ணக்கூடிய பெண்கவிகளையே காண்கிறோம். காலமும் சூழலும் ‘பெண்ணெழுத்து’ என்ற பாகுபாட்டைத் தற்காலத் தமிழிலக்கியப் பரப்பில் சாத்தியப்படுத்தியுள்ளன. இந் நிலையில், சுகுமாரன் அவர்களின் பின்வரும் கருத்து கவனத்தில் கொள்ளத்தக்கது.

தமிழ்க்கவிதைக்கு நீண்ட மரபு உண்டெனினும் பெண்ணெழுத்து, ‘தற்கால நிகழ்வு’. எனவே, முன்மாதிரிகள் இல்லாதது. பெண்கள் இதுவரை நடைமுறையிலிருந்த கவிதைமரபை மறுஉருவாக்கம் செய்வதோடு தங்களது மொழியையும் படைக்க வேண்டியிருக்கிறது. இந்தப் புத்துருவாக்கம்தான் விமர்சனங்களையும் சர்ச்சைகளையும் எழுப்புகிறது. இலக்கியம் என்ற பரந்த வெளியை ஆண்களே அடைத்துக் கொண்டிருக்கும் சூழலில், பெண் தனக்கான இடத்தை நிறுவிக்கொள்ளும் இயல்பான செயலாகவே பெண்ணெழுத்து மதிப்பிடப்பட வேண்டும் (சுகுமாரன், “பெண்கவிதைமொழி”, *புதுக்கவிதையில் பெண்கவிஞர்கள்*, ப. 241)

தமிழின் வளமான கவிதை வரலாற்றில், தனித்த அழகியலும்

ஆளுமையும் கொண்டிருந்த பெண்ணின் மொழியை விட்டுவிட்டேனும் கேட்க முடிந்திருக்கிறது. தமிழ்ப் புதுக்கவிதையின் வரலாறு, 1937-ஆம் ஆண்டு ந. பிச்சமூர்த்தி காலகட்டத்திலிருந்து தொடங்குகிறது. அதே காலப்பகுதியில்,

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலப் பெண்கவிஞர்களாக ஹா.கி. வாலம், பண்டிதை அசலாம்பிகை ஆகிய இருவரும் விளங்கினர் (இரா. பிரேமா, (தொகு.), *விடுதலை வேண்டினும்-பெண்கவிதை உலகம்*, ப. vii).

எனினும், அவ்விருவரும் புதுக்கவிதை வடிவத்தை எந்த அளவிற்கு உள்வாங்கி எழுதினர் என்பது ஆராய்ச்சிக்குரியது. மேலும், இன்று நாம் விவாதிக்கும் 'பெண்மொழி' குறித்த புரிதல் அவர்களுக்கு இருந்ததா என்பதும் ஐயத்திற்குரியது.

அறுபதுகளுக்குப் பின்னர், சிறுபத்திரிகைகளின் எழுச்சி காரணமாகக் கவிதைகளைப் படைத்த 'தேவமகள்', 'ரோகினி', 'இரா. மீனாட்சி' முதலிய பெண்கவிஞர்கள் முதற்கொண்டே நவீனப் பெண் கவிதைகள் தோற்றம் கொள்கின்றன. 1970இல் 'நெருஞ்சி' என்னும் தொகுப்பு மூலம் அறிமுகம் ஆகிறார் இரா. மீனாட்சி. எனவே, நவீனப் பெண்கவிதைகளுக்கான வரலாறு எழுபதுகளில் தொடங்குகிறது எனலாம்.

எனினும், தொண்ணூறுகளுக்குப் பிறகுதான் புதிய வேகத்துடன் தமிழில் பெண்கவிதை உருவெடுக்கிறது. ஈழப்பிரச்சனையின் விளைவாகத் தமிழர்கள் புலம்பெயர்ந்தபின்னர், தமிழில் எண்ணிக்கையிலடங்காத பெண்கவிஞர்களின் கவிதைகள் தோன்றின. பெண்கல்வி, பொருளாதாரநிலை உயர்வு, தற்சார்பு, வேலைவாய்ப்பு, பயணங்கள் முதலியன பெண்ணின் இயங்குவெளியை விரிவுபடுத்தியமையும் பெண்கவிதைகள் அதிகம் உருப்பெறக் காரணங்கள் எனலாம். தமிழில் பெண்கவிஞர்கள் படைப்புகள் அதிகம் வெளிவர உதவிய காரணிகளை முதலில் சுருக்கமாகத் தொகுத்துக் கொள்ளலாம்.

- 'பாரதியார்', 'பெரியார்' முதலானவர்கள் அறிவித்த பெண்விடுதலைக் கருத்தாக்கங்கள்.
- 1975-ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரை சர்வதேச மகளிர் ஆண்டாக அறிவிக்கப்பட்டமை.

- ‘நிறப்பிரிகை’, ‘சுபமங்களா’, ‘காலச்சுவடு’, ‘கணையாழி’ போன்ற இதழ்களில் இடம்பெற்ற பெண்ணியம் குறித்த விவாதங்கள்.
- ‘ஹெலன் ஸீக்சூ’, ‘எலைன் ஷோவால்டர்’, ‘ஜூலியா கிறிஸ்த்தவா’, ‘சிமந்தோ பெளவர்’ போன்ற உலகப் பெண்ணியவாதிகள் தமிழில் அறியப்பட்டமை.
- 1986இல் வெளிவந்த *சொல்லாத சேதிகள்* என்ற ஈழக் கவிதைத் தொகுப்பு.
- வ. கீதா மொழிபெயர்த்த *அன்னா அக்மதோவா* என்னும் பெண்கவிஞரின் தொகுப்பு.
- ‘கமலாதாஸ்’, ‘தஸ்லிமா நஸ்ரின்’ போன்ற பிறமொழிப் பெண்கவிஞர்கள் தமிழில் அறிமுகமானமை.
- குட்டிரேவதியின் ‘பனிக்குடம்’, மாலதி மைத்ரியின் ‘அணங்கு’ போன்ற சிறுபத்திரிகைகளின் வரவு.

முதலான காரணிகள், பெண்கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் தளம் அமைத்துக் கொடுத்து, பெண்எழுத்து வளம்பெற உதவின. அடுத்து, பெண்கவிதைகள் குறித்த விமர்சன நூல்களையும் தொகுப்பாக்க முயற்சிகளையும் சுருக்கமாகப் பட்டியலிட்டுக் கொள்ளலாம்.

- இருபதாம் நூற்றாண்டின் பெண்கவிதைகள் *பறத்தல் அதன் சுதந்திரம்* என்ற பெயரில் க்ருஷாங்கினியால் தொகுக்கப்பட்டன. காவ்யா வெளியீடாக 2001இல் வெளிவந்த அந்நூலில், 52 பெண்கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.
- 2007இல் திராவிடப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் “புதுக்கவிதையில் பெண்கவிஞர்கள்” என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கத்தை நடத்தி, பன்னிரெண்டு ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்துள்ளார்கள். சமகாலப் பெண்கவிதைகள் குறித்த தீவிரவிவாதமாக இந்நூல் உருப்பெற்றுள்ளது.
- 2007இல், ஈழப் பெண்கவிஞர்களின் கவிதைகள் *பெயல் மணக்கும் பொழுது* என்னும் தலைப்பில் பேராசிரியர் அ. மங்கை அவர்களால்

தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளது.

- 2014-ஆம் ஆண்டு பேராசிரியர் இரா. பிரேமா அவர்கள் ‘விடுதலை வேண்டினும்’ என்னும் தலைப்பில் இந்தியா, இலங்கை, கனடா, ஆஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த உலகத் தமிழ்ப்பெண் கவிஞர்களின் தொகுப்பைக் கொண்டு வந்துள்ளார். (அரசு, மணிமேகலை தொடங்கி ஷர்மிளா செய்யித் வரை) 101 பெண் கவிஞர்களின் தேர்ந்தெடுத்த கவிதைகளையும் புகைப்படத்தோடு தொகுத்துள்ளார் அவர்.
- 33 பெண்கவிஞர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளைத் தமிழில் தந்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து *Tamil Women Poets-Sangam to the present* என்னும் தலைப்பில், கே.எஸ். சுப்பிரமணியன் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாகக் கொண்டு வந்துள்ளார்.
- 2004-ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளிவந்த *கொங்குதேர் வாழ்க்கை (தொகுதி–2)* எனும் புதுக்கவிதைகளின் தொகுப்பு நூலில், இடம்பெற்றுள்ள 93 கவிஞர்களுள் 15 பேர் பெண்கவிஞர்கள். அதே நூலின் இரண்டாம் பதிப்பில் (2016) இடம்பெற்றுள்ள பெண்கவிஞர்கள் 33 பேர்.
- 2005இல் கதா பதிப்பகம் வெளியிட்ட *Tamil New Poetry* என்னும் கவிதை மொழிபெயர்ப்புத் தொகுப்பில் ‘அ. வெண்ணிலா’, ‘மாலதி மைத்ரி’, ‘உமா மகேஸ்வரி’, ‘குட்டிரேவதி’, ‘தமிழச்சி’, ‘கனிமொழி’, ‘இரா. மீனாட்சி’, ‘இளம்பிறை’, ‘ப. கல்பனா’, ‘சுகிர்தராணி’, ‘தேன்மொழி’, ‘அழகுநிலா’ ஆகிய பன்னிருவரின் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.
- 1994-2004 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ‘காலச்சுவடு’ இதழில் வெளிவந்த பெண்படைப்புகள் ராஜமார்த்தாண்டன் அவர்களால் தொகுக்கப்பட்டு ‘காலச்சுவடு பெண்படைப்புகள்’ என்னும் பெயரில் வெளிவந்தன. அந்தத் தொகை நூலில் 24 பெண்கவிஞர்களின் 62 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

நவீனப் பெண்கவிதைகளை அடையாளப்படுத்திய மேற்குறித்த

கவிதைத் தொகுப்புகள், வெறும் புள்ளிவிவரத்திற்காக இங்குச் சுட்டப்படவில்லை. பல நூற்றாண்டுகளாகக் காக்கப்பட்டு வந்த பெண்களின் மௌனம் உடைந்து, காத்திரமான பற்பல படைப்புகள் தமிழில் வெளிவந்துள்ள சூழலைத்தான் மேற்குறித்த தொகுப்புகள் புலப்படுத்துகின்றன.

* * * * * * * * * *

கவிதை எழுதுதல்’ என்பது ஓர் அழகியல் செயல்பாடு. தனது மானுட இருப்பை அறிவிக்கும் ஊடகம் கவிதை.

சாதாரண மொழியைவிட அதிகமாக உணர்த்துகின்ற, அதிக முனைப்போடு உணர்த்துகின்ற மொழியைக் கவிதை என்று சொல்லலாம். தான் பார்த்த, உணர்ந்த அல்லது கற்பித்த அனுபவங்களைத் தேர்ந்தெடுத்து, ஒருங்கிணைத்து மறுவொழுங்குக்கு உட்படுத்திக்குவியப்படுத்திக் கவிஞன் செயற்கையாக அமைக்கும் அமைப்பே கவிதை என்பர் (க. பூரணசந்திரன், “தம் சிறகில் பறவாக்குயில்கள்”, *புதுக்கவிதையில் பெண்கவிஞர்கள்,* பக். 207-208).

கவிதை எழுதுதல் என்பது மானுடச் செயல்பாடுகளுள் ஒன்று என்றபோதிலும், ஆண்கவிஞர்கள் இதுவரை எழுதாத புதுப்புதுப் பாடுபொருள்களில், புதியமொழியில் பெண்கவிஞர்கள் கவிதைகளைப் படைத்து வருகின்றனர். தமிழ்ப் பெண்கவிஞர்களை, இலக்கியஉலகம் முழுமையாக உள்வாங்கிக்கொண்டு, உரையாடலை முன்நகர்த்த வேண்டும்.

இருபத்தியோராம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில், “பெண்கவிஞர்கள் உடல் அரசியலைத் தங்கள் கவிதைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்” என்ற ஒற்றைத்தன்மையான பார்வை தமிழ் விமர்சனச் சூழலில் முனைப்புடன் முன்வைக்கப்பட்டது. ஆனால், பெண்கவிஞர்களின் கவிதைத்தொகுப்புகளை வாசிக்கும்பொழுது, சமூகத்தின் அனைத்துப் பிரச்சனைகளையும் மிக இயல்பான மொழிநடையில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்றே கருத வேண்டியுள்ளது. அந்த வகையில், ‘தன்னுணர்ச்சிக் கவிதைகள்’, ‘இயற்கை’, ‘தத்துவம்’, ‘சுற்றுச்சூழல்’, ‘நடுத்தரவர்க்கச் சிக்கல்கள்’, ‘அந்நியமாதல்உணர்வு’, ‘வன்முறைஎதிர்ப்பு’, ‘சமூகப் பிரச்சனைகள்’, ‘அரசியல்கவிதைகள்’, ‘தொன்மங்களைக் கட்டுடைத்த கவிதைகள்’ எனப் பலதரப்பட்ட கவிதைகளைப் பெண்கவிஞர்கள்

எழுதியுள்ளனர்.

ஒற்றைத்தன்மை, ஒற்றை அடையாளம், ஒற்றைக்குரல், ஒற்றைமொழி என்பன ஆபத்தான முடிவுகளுக்கே வழிவகுக்கும். பன்மைத்துவ அடையாளங்களைக் கொண்ட தமிழ்ச்சமூக அமைப்பில், பெண்கவிஞர்கள் படைக்கும் கவிதைமொழியை 'ஒற்றை அடையாளம்' என்னும் சிமிழுக்குள் அடைக்க இயலாது. ஏனெனில்,

பல்வேறு சாதி அடுக்குகளைக்கொண்ட தமிழ்ச் சமூகத்தில், பன்முகப்பட்ட தன்மைகளோடுதான் கவிதைகள் வெளிவரும் என்ற புரிதலோடு இனிவரும் வாசகர்கள் பெண்கவிஞர்களுடைய கவிதைகளை அணுக வேண்டும் (பா. இரவிக்குமார், "புல்லில் தொடங்கி பிரபஞ்சம் வரை", *புதுக்கவிதையில் பெண்கவிஞர்கள்*, ப. 223).

என்னும் கருத்து இங்கு எண்ணத்தக்கது. பெண்களின் வாழ்க்கை முறை மாறியுள்ளது. பெண் பற்றிய கருத்தாக்கங்களில் பெரிய மாறுதல்கள் இன்னும் வரவில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வேரூன்றிய கருத்தாக்கங்களை அசைப்பது படிப்படியான நிகழ்வாகவே அமையமுடியும். இத்தகையச் சூழலில், தனக்குள்ளாக உள்ள தணிக்கை, புறத்தே உள்ள தணிக்கைச் சூழல்கள் இவற்றையெல்லாம் புறக்கணித்துக்கொண்டும் உடைத்துக்- கொண்டும் பெண் தனக்கான மொழியை அடையாளப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றாள்.

நவீனப் பெண்கவிதைகளில், பயன்படுத்தப்படும் மொழி, பெண்ணின் எண்ணங்களை மறைக்க உதவுகிறதா அல்லது காலங்காலமாக ஆணுலகம் உருவாக்கி வைத்துள்ள மரபுகளைக் கட்டுடைக்க உதவுகிறதா என்னும் ஆராய்ச்சி விரிந்த அளவில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

பெண்படைப்பாளர்கள், நவீனப் பெண்மொழியில் பெண்ணின் அனுபவங்களைப் பதிவுசெய்வதற்கு இரு நோக்கங்கள் இருப்பதாகக் கொள்ளலாம்.

i. பெண் அனுபவங்களை உலகார்ந்த (Universal) அனுபவங்களாக முன்னிறுத்துதல்.

ii. ஆணுலகத்தின் அனுபவ வெளிப்பாடுகளை, ஆண்நோக்குத் தன்மைகளைத் தலைகீழாக்கிப் பகடி செய்தல்.

நவீனப் பெண்மொழிக் கவிதைகள், பெண்ணின் தன்னிலைக் களங்களாகப் புழங்கப்பெற்று வந்தாலும், ஆண்வழிச் சமூக முறைமைகள் மீதான எதிர்க்கருத்தாடல்களையும், பெண் பார்வையிலான மாற்று மதிப்பீடுகளையும் முன்வைக்கின்றன.

நவீனத் தமிழ்ப் பெண்கவிஞர்களின் கவிதைகளில் ‘பெண் எழுத்து’, மரபார்ந்த ஆண்நலம் சார்ந்த பண்பிலிருந்து ‘தன்னிலை’யை மீட்டெடுக்க வேண்டும் என்றால், பெண்கள் மொழி விளையாட்டில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்றுரைக்கின்றார் பேராசிரியர் க. பஞ்சாங்கம் அவர்கள். அவரது கூற்று வருமாறு:

அதிகாரம் செலுத்தும் ஆணின் மொழியிலிருந்து, வடிவத்திலிருந்து, பாடுபொருளிலிருந்து, எடுத்துரைப்பு முறையிலிருந்து தனியே பிரித்தறிந்து அப்படியே ஆணின் சொல்லாடலைத் தலைகீழாகக் கவிழ்த்துப் போடுவது போன்ற ஒரு முறையில், பெண் தனக்கான மொழியையும் வடிவத்தையும் பாடுபொருளையும் எடுத்துவைப்பு முறையையும் தன்வயப்படுத்தாமல் அவளுக்கான சுதந்திர இருப்பை அடைவது என்பது சாத்தியமில்லை என்பதை வலியுறுத்துகிறது ‘பெண் எழுத்து’ என்ற கொள்கை (க. பஞ்சாங்கம், “நவீனத் தமிழ்ப் பெண்கவிஞர்களின் கவிதைகளில் ‘பெண் எழுத்து’”, *புதுக்கவிதையில் பெண்கவிஞர்கள்*, ப. 139)

ஆணுக்காகப் பிறப்பெடுத்ததாகக் கற்பிக்கப்பட்ட உடல், தனக்கானது என்று உணர்ந்துகொண்ட பெண்களின் குரல், இருபத்தியோராம் நூற்றாண்டில் சற்று உரத்து ஒலிக்கத் தொடங்கியுள்ளது எனலாம். சமகாலக் கவிதைகளில் பாடுபொருள், வடிவம் மற்றும் எடுத்துரைப்பு முறை சார்ந்து பெண் எழுத்து புதிய சொல்லாடலைக் கட்டமைத்துள்ளதா என்னும் ஆய்வு விரிந்த அளவில் நடத்தப்பட வேண்டும். இடம், காலம், சூழல், பின்புலம், வாழ்வியல் எனப் பல கூறுகளின் அடிப்படையில் அனைத்துப் பெண்கவிஞர்களின் கவிதைகளையும் ஒட்டுமொத்தமாகக் கவனத்தில் கொண்டு கூர்ந்தாய்வு செய்யும்பொழுதுதான், ‘நவீனப் பெண்மொழி’ தமிழ்க்கவிதை மரபில் உருவாகியுள்ளதா அல்லது

மரபார்ந்த ஆண்மொழியே வேறு வடிவங்களில் 'போலிப் பெண்மொழி'யாக உருமாற்றம் அடைந்துள்ளதா எனக் கண்டறிய இயலும். இக் கட்டுரை அவ் வகையில் விரிந்த தளத்திலான ஆய்வை மேற்கொள்ளவில்லை.

பெண்கவிஞர்கள் புல்லில் தொடங்கி பிரபஞ்சம் வரை ஏராளமான பாடுபொருள்களில் தங்கள் படைப்புகளைச் செய்துள்ளனர். பெண்ணியத்திற்கு அப்பாற்பட்ட பாடுபொருள்களிலும் அவர்கள் தங்கள் படைப்புகளை அளித்துள்ளனர்.... ஒரு படைப்பாளியின் அனைத்துப் படைப்புகளையும் வாசிக்கும்பொழுதுதான், அப் படைப்பாளி கூறவரும் மையம், வாசகர்களுக்குப் பிடிபடும். அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கவிதையை வாசிப்பதும், திறனாய்வு செய்வதும் கவிஞர்களுக்குச் செய்யும் துரோகமாகும் (பா. இரவிக்குமார், "புல்லில் தொடங்கி பிரபஞ்சம் வரை, *புதுக்கவிதையில் பெண்கவிஞர்கள்,* ப. 238).

என்னும் கருத்தை ஆய்வாளர் முன்மொழிந்துள்ள போதிலும், சிற்சில சான்றுகளின் அடிப்படையில் சில முன்முடிவுகளை ஆய்வுலகில் முன்வைத்தல் தேவைதான்.

* * * * ** *

1970க்குப் பிறகு தமிழ்ச்சூழலில் உருவாகி வந்திருக்கும் 'நவீனப் பெண்கவிதைகள்' அனைத்தையும் ஒட்டுமொத்தமாகக் கணக்கிலெடுத்துக்கொண்டு ஆராயும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்படவில்லை. பெண்கவிஞர்களின் பெயர்ப்பட்டியலும் இக் கட்டுரையில் தவிர்க்கப்பட்டுள்ளது. மாறாக, பெண்மொழியை அடையாளப்படுத்தும் சாயலுள்ள சில கவிதைகள் கட்டுரையாளர்களால் விளக்கப்பட்டுள்ளன.

புறநிர்ப்பந்தங்களாலும் புறச்சிந்தனைகளாலும் கட்டுப்படுத்தப்படாத சுதந்திரமான சுயேச்சையான மொழித்தெறிப்புள்ள கவிதைகளும், தன் அனுபவங்களுக்குள் ஆழமான அகமுகப்பயணத்தை மேற்கொள்ள எத்தனித்த பெண்கவிதைகளும் 'பெண் மொழி இயங்கியலோடு' எழுதப்படுபவை எனலாம். பெண்கவிதை மொழியின் கூறுகளாகத் தான் கருதுவனவற்றைக் கவிஞர்சுகுமாரன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

- தன்னைப் பிணைத்திருக்கும் தளையை மீறுதல்.
- சுதந்திர வேட்கை.
- தனது மனதையும் உடலையும் உணர்ந்து கொள்ளுதல்
- தனக்குக் கலாச்சாரம் தயாரித்து வழங்கிய ஒப்பனை முகங்களைப் புறக்கணித்தல்.
- சமூகம் தனக்குத் தானம்செய்த பின்னணிக் குரலைத் துறத்தல்.
- தனது படைப்பாற்றலை நிறுவுதல்.
- மானுடப் பெருக்கின் பகுதியாகத் தன்னை அறிதல் (சுகுமாரன், *பெண்வழிகள்*, ப. 19).

மேற்சொல்லப்பட்ட கூறுகள் ஒன்றோ, பலவோ ஒரு கவிதைக்குள் இடம்பெறக்கூடும். படைப்பெழுத்தில் பால்வேற்றுமைக்கு இடம்தரக் கூடாது என்பதனைப் பொதுநிலையில் நாம் அங்கீகரித்தாலும், பெண்ணால் மட்டுமே முன்வைக்கப்படக்கூடிய தனித்த அனுபவ வெளிப்பாடுகள் பெண்மொழி வழியேதான் வெளிப்படும்.

‘பெண் மென்மையானவள்; ஆண் வலிமை நிறைந்தவன்’ எனக் காலங்காலமாக எடுத்துரைக்கப்படும் புனைந்துரைகளைப் பெண்கவிதை மறுதலிக்கின்றது. சான்றாக, இரா. ஆனந்தியின் ‘எல்லை என்பது’ என்னும் கவிதையைச் சுட்டலாம்.

பெண்மை / மென்மையானது என்று / சொன்னது யாரிங்கு? / அதன் வன்மை அறியாது / பகர்பவை – பொய்யுரைகளன்றி / புகழுரைகள் அல்ல.

புரையோடிய புண்களில் / வேல்களைச் சொருகினால் / பொறுமையுடன் வலி ஏற்க / விதிக்கப்பட்டவர்கள் அல்லர் / வேல்களைத் திரும்பி எறியும் / வேகம் அதிகம் எம்மிடம் / விலகியே நில்லுங்கள்.

எல்லை என்பது / மேலே வானம் / கீழே பூமி / சுற்றிலும் சமுத்திரம் / பறத்தலும் / நிற்றலும் / மிதத்தலுமாய் – / அமிழ்தல் என்பது / அகராதியில் இல்லை (இரா. பிரேமா (தொகு.), *விடுதலை வேண்டினும்-உலகத் தமிழ்ப் பெண்கவிஞர்கள்*, பக். 28-29).

ஆண்மையக் கருத்தாக்கங்களை மறுதலிக்கும் நோக்கிலும் மானுடப் பெருக்கின் பகுதியாகப் பெண் தன்னை உணரும் தன்மையிலும் படைக்கப்பட்டுள்ளது மேற்சுட்டிய கவிதை. கவித்துவ அளவுகோல்களுக்குள் அடங்க மறுத்தாலும், தன் நிலைப்பாட்டைப் பிரகடனப்படுத்தும் மொழிக்கூறு இக் கவிதையில் போதுமான அளவில் அமைந்துள்ளது என்பது பொருந்தும்.

தொன்மங்களையும் வரலாற்றையும் சமகாலப் பார்வையுடன் அலசும் செயல், புனைகதைகளில் இடம்பெற்ற அளவுக்கு நவீனக் கவிதையில் இடம்பெறவில்லை. எனினும், கீதாசுகுமாரனின் *ஒற்றைப் பகடையில் எஞ்சும் நம்பிக்கை* என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ள 'மூத்தோள்' என்னும் தலைப்பிலான பதினேழு கவிதைகள், தொன்மங்களைக் கட்டுடைப்பு செய்திருப்பதோடு, பெண்ணிருப்பின் அனுபவங்களை உள்ளுறையாகக் கொண்டுள்ளன. பாதி கிழிந்த சிவப்புச்சீலையுடன் நிற்கும் தமயந்தி, பேயுருக்கொண்ட காரைக்கால் அம்மையார், சீதையிடம் உரையாடும் நல்லதங்காள், ஊர்மிளை ஆதிமந்தி, மருதி, நப்பின்னை, மணிமேகலை எனப் பல பெண்தொன்மங்களின் அமிழ்த்தப்பட்ட குரலை, நவீனப் பெண்மொழியில் உரையாடுமாறு கவிதை படைத்துள்ளார் கீதா சுகுமாரன்.

இருளில் வெளவாலாய் விலகிய உனக்கெப்படித் தெரியும் / பகலின் கூர்வாள் தாங்கும் பிடரியின் வலி? / இவளிடம் திருப்தியுறாமல் அவளிடம் சென்று / அவளிடம் கோபம் கொண்டு இவளிடம் / என்றலைந்த நீ யாது குலம்?

என் காவியமெழுதியவன் ஏன் புத்தபீடத்து / ஊழ்வினைக்குள் அதைச் சிறைவைத்தான்?

எனது துறவின் உறுதியற்ற நீ / எப்படி என் தந்தை? / இத்தனைக்குப் பிறகும் உனை நினைத்து / அழுதேன் என்றா எண்ணினான் சீத்தலைச் சாத்தன்?

எனதமுதசுரபி வண்டலை / கேள்விகளின் காயசண்டிகைகள் தின்றுகொண்டிருக்க / பதில்களை யாசித்தபடி தெருவில் உள்ளேன் நான் (கீதா சுகுமாரன், *ஒற்றைப் பகடையில் எஞ்சும் நம்பிக்கை*, ப. 63).

கோவலனைப் பார்த்து மணிமேகலை தொடுக்கும் கேள்வியாக எழுதப்பட்டுள்ள இக் கவிதை, இதுவரை சொல்லப்பட்டு வந்துள்ள வரலாற்றின், தொன்மத்தின் மொழியைக் கீறி, குருதியும் நிணமும் சொட்ட,

நேற்றின் குறைகளைப் பகிரங்கப்படுத்துவதோடு இன்றின் கோளாறுகளையும் சுட்டிக்காட்டுகின்றது. காலத்தினூடே மறுபயணம் செய்து, இதிகாசங்கள், புராணங்கள், தொன்மங்கள், வரலாறு இவற்றிலெல்லாம் சித்திரிக்கப்பட்ட பெண்களின் இருப்பைச் சார்ந்து, அவர்கள் கேட்க மறந்த அல்லது கேட்க அனுமதிக்கப்பட்டிராத கேள்விகளை இக்கவிதைகள் முன்வைக்கின்றன.

ஆண் உடல் பலமானது; ஆண் உடல் புனிதமானது; ஆண் மேலானவர்; ஆணே அதிகாரம் செலுத்தத் தகுதியுடையவர் என்பதான ஆண் குறித்த மேலதிக அடையாளப் புனைவுகளையும் கருத்துருவங்களையும் நவீனப் பெண்மொழிக் கவிதைகள் தலைகீழாகக் கவிழ்த்துப் போடுகின்றன (மகராசன், *பெண்மொழி இயங்கியல்*, ப. 317)

மேல்கீழ் கருத்தமைவினைக் கவிழ்த்தல் என்பதும், பெண் எழுத்தில் அழுத்தமாக முன்வைக்கப்படும் கருத்தாக்கமாகும். கடவுளர்கள் மேலானவர்கள்; குறிப்பாக ஆண்கடவுளர்கள் மேலானவர்கள் எனக் காலங்காலமாகக் கட்டமைக்கப்பட்டு வந்த புனிதக் கருத்தாக்கத்தை மேல்கீழாக்கிப் பகடி செய்யவும் சில கவிதைகள் முயன்றுள்ளன. சான்றாகப் பின்வரும் கவிதையைச் சுட்டலாம்.

எதிர்சாரியில் கடந்த / வாகனத்தை ஓட்டியது / சாட்சாத் கண்ணனேதான் / சிமிட்டிய விழிகளில் / அத்தனை தெய்வாம்சம்.

மிக நிதானமாய் / பல்சரில் சென்ற ராமரின் / பின்னிருக்கையில் / அவர் மனைவி.

ராமர் ரியர்வியூ கண்ணாடியில் / ஒருமுறை / ஒரேமுறை / பார்த்துவிட்டு இடப்பக்கமாய்ச் / சென்றுவிட்டார்.

மாநிறமாய் முருகனை / இன்றுதான் கண்டேன் / பேருந்தின் பின்னிருக்கையில் / இருந்து / பாசிமணி விற்கும் குறத்திகளை / ரசித்துக் கொண்டிருந்தார் / வேல் இருக்கவில்லை / லக்கேஜ் சார்ஜுக்காய் / பயந்திருப்பார் போலும்.

புலித்தோல் அணிவது / சட்டப்படி குற்றம் / கான்கிரீட் வனத்தில் /

பாம்புகள் கிடைப்பதில்லை/ இருக்கும் சிலதும் / சினிமாப் படங்களில் நடிக்கச் / சென்றுவிட்டதால் / ஈசன் மிகத் தனியாய் / நின்று கொண்டிருந்தார்.

தேநீர்க் கடையில் / ஆலகால விடத்தைவிட / கஷ்டப்பட்டுத் தேநீரை / விழுங்கிக் கொண்டிருந்தார்.

சாவகாசமாய் / தெருக்களில் திரிந்து / கொண்டிருந்தார் பிள்ளையார் / ---------------------- ---------- --------- --------- தெருக்களில் / தெய்வங்கள் தென்படத் துவங்குவதாய் / செய்திகள் அலறியதும் / கோவில்களில் / முன்னெப்போதையும் விட / அதிகக் கூட்டம்.

கூட்டத்தினுள்ளும் / தெய்வங்கள் இருந்தன / அச்சத்தில் நடுங்கியபடி (சசிகலா பாபு, *ஓ. ஹென்றியின் இறுதி இலை*, பக். 11-12)

ஆண்கடவுளரைப் பகடி செய்யும் இக் கவிதை, பெண்மொழிக்கான மற்றொரு வகைமாதிரியாகக் கொள்ளத்தக்கது. சசிகலா பாபுவின் *மறையத் தொடங்கும் உடல்கிண்ணம்* என்னும் தொகுப்பிலுள்ள சில கவிதைகள் 'பெண் உடல்' குறித்த புனைவுகளையும் புனிதங்களையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளன. தொல்பழங்காலம் தொட்டுப் பெண்ணினம் அனுபவித்து வரும் உடல்வலிகள், ஆண்கள் படைத்த இலக்கியங்களில் பதிவுபெறாமல் மௌனமாக்கப்பட்ட நிலையில் சசிகலா பாபுவின் பின்வரும் கவிதை, அதிர்வூட்டும் மொழிநடையில் பெண்ணின் பேறுகாலத் துயரங்களை எடுத்துரைக்கின்றது.

இதுதான் முதன்முறை / நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும் / சிறு கத்தியின் கீறலில் / வழிசெய்தாள் மருத்துவர் / தலையும் புட்டமும் வெளியேறும்போது மட்டும் / கூடுதலாய் இரத்தம் / காட்டுங்கள்.

பின்னர் அவள் காண்பித்த ஊசி / அத்தனை அம்சம் / அத்தனை நீளம் / மொத்தம் ஐந்து தையல்கள்தானா? / படபடக்கும் மாதாந்திர நாட்காட்டி / அதே அறையில் / இருந்தால் / எண்களை எண்ணுங்கள்.

ஒவ்வொரு முறை / ஊசி இறங்கும்போதும் / சற்று முன்னர் பெற்ற / சிசுவை நினைத்துக்கொள்ளுங்கள்/ இல்லையேல் / மரணிப்போமா என / நம்ப

வேண்டியிருக்கும்.

அடிவயிறு அழுத்தி / தாதி வெளியேற்றும் மீதி / தொப்புள்கொடியுடன் / பீய்ச்சியடிக்கும் உங்கள் உதிரம் / ஒரு நதிபோல் ஓடி / இரும்புக்கட்டில் நடுத்துளையில் விழும் / அப்போது உங்களை நீங்களே / ஒரு அருவிபோல / உணர வேண்டும்.

முன்னரே சொல்ல மறந்துவிட்டேன் மன்னியுங்கள் / வலி தொடங்கும் முன்னரே / அந்தச் செவிலி / அந்தரங்க மயிர்களை / மழிக்கும் போது / கண்களை மூடிக்கொள்ளவும்./ அவளது கத்தியின் வேகம் / உங்களை அச்சுறுத்தக்கூடும்.

எல்லாம் ஆயிற்றா? / இப்போது / கழிவறை செல்லுங்கள் / ஐந்து தையல்களைக் கிழித்து / வெளியேறும் கொஞ்சம் சிறுநீருக்காய் / அரைமணி நேரம் / அங்கேயே கதறியழுங்கள் / ஆனால் /சத்தம் வெளியே கேட்காமல்.

உங்களிடம் / அப்படி ஒன்று / இல்லாதது போல் / சர்வ சுதந்திரமாய் வெளியேறுங்கள்.

இதுதான் முதன்முறை / நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும் / ஒரு யோனியின் கதையை / இப்படியாய் இங்கு / நான் சொல்வது / மற்றும் / யோனி என்னும் சொற்பிரயோகம் செய்வதும்.

இப்போது சொல்லுங்கள் / நீங்கள் / இதுகாறும் செப்பிய / யோனி / இதுதானா? (சசிகலா பாபு, *மறையத் தொடங்கும் உடல் கிண்ணம்*, ப. 17)

வரலாறு நெடுக, ‘பிரசவ வலி’ என்ற ஒற்றைத் தொடரால் அடையாளப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வை, சசிகலாவின் கவிதை எந்தவிதப் பூச்சுமற்று மொழிகிறது. ஓர் ஆண் எழுதச் சாத்தியமற்ற மொழிக் கூறுகளையும் அனுபவவெளிகளையும் கொண்டுள்ள இக் கவிதை, பெண் உடலை ஆண் எழுதுவதற்கும், மாறாகப் பெண் எழுதுவதற்குமான நுட்பமான வேறுபாடுகளைப் பதிவு செய்துள்ளது. இங்கு, எழுத்தாளர் அம்பையின் பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கது.

பெண் தன் அடையாளத்தை உருவாக்கிக் கொள்வதில் மிக முக்கியப் பங்கு வகிப்பது உடல். உடலை மீள் வாசிப்பு செய்ய உடலை மீட்டெடுக்க வேண்டியிருக்கின்றது. இது சாதாரண வேலை இல்லை. ஏனென்றால்

முட்படுக்கையில் கிடத்தி முட்களால் போர்த்தப்பட்ட உடல். பண்பாட்டு முட்கள், மொழி முட்கள், இலக்கண முட்கள், சம்பிரதாய முட்கள், சடங்கு முட்கள், அரசியல் முட்கள், வேலி என்று நினைத்துத் துளைக்கவிட்ட முட்கள், அரண் என்று நினைத்து அரவணைக்கவிட்ட முட்கள் என்று ஓராயிரம் முட்கள் (அம்பை, *உடலெனும் வெளி*, ப. 109).

அம்பை கூறும் பல்வேறு வகையான முட்களை அடையாளம் கண்டு, தன்னுணர்வு பெற்று, அவற்றைக் களைவதற்காகப் பெண்கள் உருவாக்கிக் கொண்ட கவிமொழியே பெண்மொழி. அதாவது, பெண், வரலாற்றைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துதல், ஆண்களின் சொல்லாடல்களைத் தலைகீழாக்கித் தனக்கான பண்பாட்டை உருவாக்குதல், வாழ்க்கையின் திசைகளைத் தன் வாழ்நிலைக்கேற்பப் போற்றுதல், இத்தகைய காரணங்களுக்காக ஒரு புதிய மொழியைப் படைத்தலே பெண்மொழி எனலாம். ஆண்களின் சிந்தனை அவர்களுக்கேற்பப் பண்பாட்டையும் வரலாற்றையும் மொழியையும் படைத்தன என்றால், பெண்களின் சிந்தனை அவர்களுக்கான மொழியையும் பண்பாட்டையும் உருவாக்குகிறது.

தமிழில் மிகுதியான பெண்கவிஞர்கள் இச் சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். கோட்பாட்டின் அடிப்படையில் அவர்கள் ஒரு ‘எலைன் ஷோவால்ட’ராக, ‘ஹெலன் சிக்சு’வாக, ‘லூஸி கிரே’வாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், தமிழ்ச் சூழலுக்கேற்ப அவர்கள் கவிதைகளைப் படைத்துள்ளனர்.

குடும்பம் துறந்த / சித்தார்த்தன் / புத்தன் ஆனான் / நம்பி வந்த / யசோதரா / என்ன ஆனாள்?” (இரா. பிரேமா (தொகு.), *விடுதலை வேண்டினும்- உலகத் தமிழ்ப் பெண்கவிஞர்கள்*, ப. 236). என்னும் பாலபாரதியின் கேள்வி புத்தனின் வரலாற்றையே பெண்ணிய அடிப்படையில் விவாதத்திற்குள்ளாக்குகிறது. வரலாற்றில் எதிர்ப்பண்பாட்டைக் கட்டமைத்துக் கொண்டுவந்த போதிலும், நவீனத்துவக் காலகட்டத்தில் பெண்விடுதலையைப் பேசிக்கொண்டே, சமையலறையில் முடங்கிய தமிழ்ப் பெண்கவிஞர்களின் வரலாற்றையும் பாலபாரதி பதிவு செய்துள்ளார்.

வேலு நாச்சியாராய் / குதிரை மீது வந்தேன் / இராணி மங்கம்மாளாய் /

வாளைச் சுற்றினேன் / ஜான்சிராணியாய் / எதிரிகளைப் பந்தாடினேன் / குக்கர் சத்தம் கேட்டது / சமையலறைக்குள் ஓடினேன் (இரா. பிரேமா (தொகு.), *விடுதலை வேண்டினும்-உலகத் தமிழ்ப் பெண்கவிஞர்கள்*, ப. 236). என்று பாலபாரதி எழுதியிருப்பது நடுத்தர வர்க்கத் தமிழகப் பெண்களின் குரல்களை ஆண்கவிஞர்களால் இத்தகைய கவிதைகளைப் படைக்க இயலாது.

பெண்கவிஞர்களின் பெண்மொழியை மிகச் சரியாக இனங்காண, லீனா மணிமேகலையின் “புள்ளிவிவரம்” என்ற கவிதையே சான்று. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை, வன்கொடுமைகளை, அதிர்ச்சிதரத்தக்கத் தகவல்களை வெறும் புள்ளி விவரமாகக் கூறாமல், தனக்கேயுரிய மொழிநடையில் படைத்துள்ளார் லீனா.

ஒவ்வொரு மூன்று நிமிடமும் / ஒவ்வொரு ஐந்து நிமிடமும் / மானபங்கம் / ஒவ்வொரு பத்து நிமிடமும் / ஒரு பெண் சிசுக் கொலை / ஒரு பெண் துன்புறுத்தப்படுதல்.... (பிரேமா (தொகு.), *விடுதலை வேண்டினும்-உலகத் தமிழ்ப் பெண்கவிஞர்கள்*, ப. 333). என்று தொடங்கும் கவிதை, சமுதாயத்தில் இளைஞர்கள் முதல் கிழவர்கள் வரை, சிறுமிகளையும் பெண்களையும் எப்படியெல்லாம் மானபங்கப்படுத்தியிருக்கக்கூடும் என்னும் தகவல்களைப் பட்டியலிடுகிறது.

ஒவ்வொரு மூன்று நிமிடமும் / கடந்து செல்லும் ஆண்களின் / சட்டைப் பைகளைச் சரிபார்க்க வேண்டும் / அதில் நானறிந்த சிறுமியின் வாசனை இருக்கலாம் (இரா. பிரேமா (தொகு.), *விடுதலை வேண்டினும்-உலகத் தமிழ்ப் பெண்கவிஞர்கள்*, ப. 333). என்னும் வரிகளில், ஆண்களின் சட்டைப் பைகளைச் சரிபார்க்க வேண்டும் என்னும் கூற்றே பெண்மொழி. ஓர் ஆண்கவிஞர் இத்தகைய கூற்றை எழுதுவதற்கான சாத்தியங்கள் குறைவு.

தாமரையின் “தீர்ப்பு” என்னும் எளிமையான கவிதையும் குறிப்பிடத்தக்கது. சமுதாயத்தில் ஆணாதிக்கச் சொல்லாடல்களே பெண்ணடிமைத்தனம் நீடிப்பதற்குக் காரணம். இச் சொல்லாடல்கள் வெகுசனத் தளத்தில் மிக இயல்பாகப் பரவியிருக்கின்றன. இச் சொல்லாடல்களைத் திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படப் பாடல்கள், பட்டிமன்றங்கள், பத்திரிகைகள் முதலியன கட்டமைக்கின்றன. கற்பில்

சிறந்தவள் கண்ணகியா? மாதவியா? என்னும் தலைப்பில் நடத்தப்படும் பட்டிமன்றத்தை உதாரணம் காட்டி, ஒரு கவிதையை எழுதியுள்ளார் தாமரை.

பட்டிமன்றத்திலே / விவாதம் / பொறி பறந்தது / கற்பில் சிறந்தவள் / கண்ணகியா? மாதவியா? / நூற்றாண்டுகள் ஓடியும் / மக்களுக்குச் சந்தேகம் / தீரவில்லை (இரா. பிரேமா (தொகு.), *விடுதலை வேண்டினும்-உலகத் தமிழ்ப் பெண்கவிஞர்கள்*, ப. 177).

என்பதாகத் “தீர்ப்பு” என்னும் தலைப்பில் அமைந்த அந்தக் கவிதை தொடங்குகிறது. அனல் கக்கும் வாதங்களை இருதரப்புப் பேச்சாளர்களும் முன்வைக்கின்றனர். கவிதை இப்படி முடிகிறது:

அமைதியாய்க் கேட்ட நடுவர் / அழுத்தமாய்ச் சொன்னார் தீர்ப்ப / சந்தேகம் இல்லை / இருவருமே கற்பில் / சிறந்தவர்கள்தாம் / கற்பிழந்தவன் கோவலனே (பிரேமா (தொகு.), *விடுதலை வேண்டினும்-உலகத் தமிழ்ப் பெண்கவிஞர்கள்*, ப. 178).

தொன்மங்களின்வழி காலம்காலமாகக் கட்டமைக்கப்பட்ட ஆணாதிக்கச் சொல்லாடல்களைத் தலைகீழாய்க் கவிழ்த்து, பெண்ணுக்குச் சாதகமான மொழியைக் கட்டமைத்தலே ‘பெண்மொழி’ என்பதற்குத் தாமரையின் இந்தக் கவிதை மற்றொரு சான்று. பெண்மொழிகளுக்கான கூறுகள் இவ்வாறு பல பெண்கவிஞர்களின் கவிதைகளில் பல்வேறு வகைகளில் விரவிக் கிடக்கின்றன எனலாம்.

## முடிவுரை

இரண்டாயிரம் ஆண்டுகளை உள்ளடக்கிய தமிழ்க் கவிதை மரபில், ஆண்மொழியே அடிப்படையாக அமைந்த நிலையில், ‘பெண்மொழி’ யை நவீனப் பெண்கவிஞர்கள் படைத்துள்ளனர் என்பதை இக் கட்டுரை விளக்கியுள்ளது. தொன்மங்களையும் வரலாற்றையும் சமகாலப்பார்வையுடன் அலசும் செயல் புனைகதைகளில் மட்டுமன்று; நவீனக் கவிதைகளிலும் இடம்பெற்றுள்ளது என்பதையும் சான்றுகளுடன் இக்கட்டுரை வெளிக்கொணர்ந்துள்ளது. ஆண்கடவுளர்கள் மேலானவர்கள் எனக் காலங்காலமாகக் கட்டமைக்கப்பட்டு வந்த கருத்தாக்கம், பெண்கவிஞர்களால்

எவ்வாறு பகடி செய்யப்பட்டது இதிகாசங்கள், புராணங்கள், தொன்மங்கள், வரலாறு ஆகியவற்றில் சித்திரிக்கப்பட்ட பெண்கள் கேட்க மறந்த கேள்விகளை நவீனப் பெண்கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் எவ்வாறு முன்வைத்துள்ளனர் என்பதையும், அவற்றினூடாக எவ்வாறு 'பெண்மொழி' உருவாகியுள்ளது என்பதையும் இக் கட்டுரை விளக்கியுள்ளது.

## மேற்கோள்கள்

அம்பை, (2017), உடலெனும் வெளி, கிழக்குப் பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை–600014, தமிழ்நாடு, இந்தியா.

காமராசு, இரா., (2018), பெண் எழுத்து வலியும் ஒளியும், சாகித்திய அகாதெமி, தேனாம்பேட்டை, சென்னை–600018, தமிழ்நாடு, இந்தியா.

கீதா சுகுமாரன், (2014), ஒற்றைப் பகடையில் எஞ்சும் நம்பிக்கை, காலச்சுவடு வெளியீடு, நாகர்கோவில்–629001, தமிழ்நாடு, இந்தியா.

சசிகலா பாபு, (2016), ஓ. ஹென்றியின் இறுதி இலை, காலச்சுவடு வெளியீடு, நாகர்கோவில்–629001, தமிழ்நாடு, இந்தியா.

-----------------,(2017), மறையத் தொடங்கும் உடல் கிண்ணம், காலச்சுவடு வெளியீடு, நாகர்கோவில்–629001, தமிழ்நாடு, இந்தியா.

சிவகாமி, (2007), உடலரசியல், பனிக்குடம் வெளியீடு, இராயப்பேட்டை, சென்னை–600014, தமிழ்நாடு, இந்தியா.

சுகுமாரன் (மொ.பெ.), (2007), பெண்வழிகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்–629001, தமிழ்நாடு, இந்தியா.

ஞானி (தொகு.), (2003), பெண்கள் வாழ்வியலும் படைப்பும், தமிழ்நேயம் வெளியீடு, கோயமுத்தூர்–641009, தமிழ்நாடு, இந்தியா.

தமிழவன்., பூலோகரம்பை. அ., (தொகு.) மற்றும் பலர், (2008), புதுக்கவிதையில் பெண்கவிஞர்கள், தமிழ்த்துறை, திராவிடப் பல்கலைக் கழகம், குப்பம்–517425, ஆந்திரப் பிரதேசம், இந்தியா.

பிரேமா, இரா., (2014), பெண்ணியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை–600017, தமிழ்நாடு, இந்தியா.

------------------,(2014), விடுதலை வேண்டினும்–உலகத் தமிழ்ப் பெண்கவிஞர்கள், காவ்யா வெளியீடு, சென்னை–600024, தமிழ்நாடு, இந்தியா.

மங்கை, அ., (2005), பெண்ணிய அரசியல், கங்கு வெளியீடு, சென்னை–600094, தமிழ்நாடு, இந்தியா.

மகாராசன், (2010), பெண்மொழி இயங்கியல், தோழமை வெளியீடு, சென்னை–600078, தமிழ்நாடு, இந்தியா.

மாலதி மைத்ரி, (2008), நம் தந்தையரைக் கொல்வதெப்படி, புலம் வெளியீடு, மதுரவாயல், சென்னை–600095, தமிழ்நாடு, இந்தியா.

முத்துச்சிதம்பரம், ச., (1999), பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை–600017, தமிழ்நாடு, இந்தியா.

ராஜ் கௌதமன் (மொ.பெ.), (2018), பெண்ணியம் வரலாறும் கோட்பாடுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை–600098, தமிழ்நாடு, இந்தியா.

-------------------,(2020), பாலற்ற பெண்பால், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை–600050, தமிழ்நாடு, இந்தியா.

ராஜமார்த்தாண்டன் (தொகு.), (2004), கொங்குதேர் வாழ்க்கை தொகுதி – 2, புதுக்கவிதைகளின் தொகுப்பு, யுனைடெட் ரைட்டர்ஸ் வெளியீடு, சென்னை–600005, தமிழ்நாடு, இந்தியா.

----------------,(தொகு.), (2017), கொங்குதேர் வாழ்க்கை தொகுதி – 2, புதுக்கவிதைகளின் தொகுப்பு (விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு), தமிழினி வெளியீடு, சென்னை–600005, தமிழ்நாடு, இந்தியா.

லீனா மணிமேகலை, (2016), சிச்சிலி, நற்றிணை பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை–600005, தமிழ்நாடு, இந்தியா.

வெண்ணிலா, அ., (தொகு.), (2018), கனவும் விடியும்–தமிழ்ப்பெண் கவிகளின் கவிதைகள், சாகித்ய அகாதெமி, சென்னை–600018, தமிழ்நாடு, இந்தியா.

# பெண் சிசுக்கொலை என்னும் இன ஒழிப்பு

# Genocide of female infanticide

**சே.செந்தமிழ்ப்பாவை** [அ, *]

[அ] தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-6300003, தமிழ்நாடு, இந்தியா.

**S. Senthamizhpavai** [a, *]

[a] Centre for Tamil Culture, Alagappa University, Karaikudi-630003, Tamil Nadu, India.

Email: spavais@alagappauniversity.ac.in

DOI: https://doi.org/10.34256/fem12

## ஆய்வுச் சுருக்கம்

பெண்களே வரலாறு, பெண்களே வரலாற்றைப் படைக்கின்றனர் என்பர் மேரி ரிட்டர்பியேர்ட். இங்ஙனம் வரலாறாகவும் வரலாற்றைப் படைக்கிறவர்களாகவும் விளங்கும் பெண் இனம் சிசுக்கொலை மற்றும் கருக்கலைப்புகள் வழி கண்ணுக்குத் தெரியாத இனப்படு கொலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கக் கூடிய நிலை உள்ளது. உலகில் எத்தனையோ நாடுகள் எத்தனையோ இனங்கள் உள்ளன. இதில் ஹிட்லரின் யூத இன அழிப்பு, சிங்களவரின் தமிழின அழிப்பு ஆகியவை உலகம் முழுவதும் அறிந்த இன ஒழிப்பு. ஆனால் உலக வரலாற்றில் இடம் பெறாமல், இன்றைக்கும் இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நடைபெற்றுக் கொண்டுள்ள ஒரு செயல் பெண்சிசுக்கொலை என்னும் பெண் இன ஒழிப்பு ஆகும். 20 - ஆம் நூற்றாண்டில் இப்பெண் சிசுக்கொலை குறித்து முதலில் உலகிற்கு வெளிப்படுத்தியது எஸ்.ஐ.ஆர்.டி என்னும் அமைப்பாகும். இதன்பின் சமூக ஆர்வலர்கள், வெளிச்சம் என்னும் அமைப்பு, திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், ஜீனியர் விகடன் போன்ற பத்திரிகைகள் இது குறித்த செய்திகளை வெளியுலகிற்குக் கொண்டு வந்தன. படைப்பாளர்களும் தம் படைப்புகளின் வழி தங்கள் வருத்தங்களையும் எதிர்ப்புகளையும் பதிவு செய்தனர். உலகமே உள்ளங்கையில் சுருங்கியுள்ள நிலையிலும் வெளியுலகிற்குத் தெரியாமல் ஓரினம் இனப்படுகொலைக்கு ஆளாகிக் கொண்டுள்ளது. ஆம் அது மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்று போற்றப்பெறும் பெண்ணினமே. சீனா, பாகிஸ்தான்,

இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பெண்சிசுக்கொலை, பெண் சிசு கருக்கலைப்பு என்னும் செயல்களின் வாயிலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெண்ணினப் படுகொலை பற்றியும் அதற்குரிய காரணங்கள் மற்றும் அதற்குரிய தீர்வுகள் குறித்தும் இக்கட்டுரை விளக்குகின்றது.

## முன்னுரை

பெண் சிசுக்கொலை என்பது கருவில் இருக்கும் அல்லது பிறந்த குழந்தை பெண் குழந்தையாக இருந்தால் அதனைக் கருவில் இருக்கும் காலத்திலோ அல்லது பிறந்த பின்போ கொன்றொழிப்பதைப் பொதுவாகக் குறிக்கும். பிறந்தது முதல் ஒரு வயது வரையுள்ள குழந்தை *சிசு* என அழைக்கப்படுகிறது. கருவில் இருக்கும் பெண் குழந்தையைக் கொல்வது பெண் கருக்கொலை எனவும், பிறந்த பின் கொல்வது சிசுக்கொலை எனவும் வழங்கப்படுகிறது. இந்தியாவில் கிராமம் நகரம் என்ற வேறுபாடின்றி இச்செயல் நடைபெறுகின்றது. ஆயினும் கிராமப்புறங்களில் இச்செயல் அதிகமாக நடைபெறுவது சுட்டுதற்குரியது. இச்செயலை உள்ளூர் கிராம மருத்துவச்சி என அழைக்கப்படுவோர் அல்லது அக்குடும்ப உறுப்பினர்களுள் தந்தை அல்லது தந்தை வழித் தாத்தா அல்லது பாட்டி ஆகியோர் செய்கின்றனர். நகரப்பகுதிகளில் கதிரியக்க மின்னணுக் கருவிகள் மூலம் கருவில் இருக்கும் சிசு ஆணா அல்லது பெண்ணா என அறிந்து அதனைக் கருவிலேயே அழித்தொழிக்கும் செயல் மருத்துவமனைகளில் நன்கு படித்த மருத்துவரால் நிகழ்த்தப்படுகிறது. இதனால் இந்தியா பெண்குழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற ஒரு நாடாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் பெண் சிசுக்களில் இறப்பு விகிதம் ஆண் சிசுவின் இறப்பு விகிதத்தை விட 75 விழுக்காடு அதிகமுள்ளது. பெண் சிசுக்கொலையினால் ஆண் பெண் விகிதத்தில் ஏற்றத்தாழ்வான நிலை நிலவுகிறது. வளரும் நாடுகளில் இது மிக அதிகமாகவே காணப்படுகிறது.

## பெண் சிசுக்கொலை நடைபெறுவதற்குரிய காரணங்கள்

பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகள் அதிகம் விரும்பப்படுவதாலும், பெண் குழந்தைகளை மதிக்காத காரணத்தாலும் பெண் குழந்தைகளைப் பெறுதல் செலவினம் எனக் கருதப்படுவதாலும் பெண் சிசுக்கொலை நடைபெறுகிறது. பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளை அதிகமாகப் போற்றும் கலாச்சாரமுடைய சமுதாயத்தில் இப்பழக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. பெண் குழந்தைகளுக்கு எதிரான இந்த மனநிலை ஏழை, செல்வந்தர் என்ற இருநிலைகளிலும் நிலவுகிறது.




இதற்கு சமூக விதிகளும், மக்களின் கலாச்சார நம்பிக்கைகளும் பெருமளவு காரணமாகின்றன. இந்திய நாட்டில் பெண் குழந்தைகளை விரும்பாத அல்லது தேர்ந்தெடுக்காத நிலைக்கு இந்தியாவில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் வழி,

1. பொருளாதாரப் பயன்பாடு குறிப்பாக வரதட்சணைக் கொடுமை.
2. சமுதாய கலாச்சாரப் பயன்பாடு
3. மதச் சார்புடைய நிகழ்வுகளின் பங்கு

ஆகியன முக்கியக் காரணங்களாக அமைகின்றன.

### பெண் சிசுக்கொலை குறித்த சில உண்மைகள்

2015 - ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் சமூக மற்றும் பொருளாதாரத்துறை (United Nations Department of Economic and Social Affairs (UN-DESA) வெளியிட்ட ஒரு அறிக்கையில் உலகம் முழுவதும் உள்ள நூற்று ஐம்பது நாடுகளில் இரண்டு நாடுகளைத் தவிர பிறநாடுகளில் பெண் குழந்தைகள் இறப்புவிகிதம் குறைவான அளவிலேயே உள்ளது. பெண் சிசு இறப்பு விகிதம் அதிகமுள்ள நாடுகளுள் இந்தியாவும் சீனாவும் மற்ற நாடுகளை

விஞ்சி நிற்கின்றன. உலகளவில் 122 சிசு மரணங்களில் 100 பெண் சிசுவாக உள்ளது. இதனுடன் ஒப்பிடுகையில் சீனாவில் 100 சிசு மரணங்களில் 70 பெண் சிசுவாக உள்ளன. அண்மைக்கால யூனிசெஃப் 2015 - அறிக்கையின்படி இந்திய நாட்டில் 50 மில்லியன் சிறுமியரும், பெண்களும் பெண்பால் வேற்றுமையுணர்வு காரணமாகக் கொல்லப்பட்டுள்ளனர். உலகின் பல நாடுகளில் ஏறத்தாழ 100 ஆண் குழந்தைகள் பிறக்கும்போது 105 பெண் குழந்தைகள் பிறக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் 100 ஆண்களுக்கு 93-க்கும் குறைவாகவே பெண்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 2000 பெண் சிசுக்கள் சட்டத்திற்குப் புறம்பாகக் கருவிலேயே கலைக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் கூறுகின்றன (ருக்மிணி சீனிவாசன், 2012)

1978-ஆம் ஆண்டில் மானுடவியலாளர் லைலா வில்லியம்சன் ஒவ்வொரு கண்டத்திலும் சிசுக்கொலை நிகழ்ந்திருப்பதைக் கண்டறிந்து உரைத்தார்" (Milner, 2006).

"ஆஸ்திரேலியா வடக்கு அலாஸ்கா மற்றும் தெற்காசியாவின் பழங்குடி மக்களிடையே இந்த நடைமுறை உள்ளதையும் இந்த நடைமுறை கிட்டத்தட்ட " உலகளாவியது என்றும் வரதட்சிணை உள்ள பகுதிகளிலும் பெண் சிசுக்கொலை பொதுவானது என்றும் முங்கெல்லோ குறிப்பிடுவர் (Mungello, 2009). ஏழாம் நூற்றாண்டுஅரேபியாவில், இஸ்லாமியக் கலாச்சாரம் நிறுவப்படுவதற்கு முன்பு, பெண் சிசுக்கொலை பரவலாக நடைமுறையில் இருந்துள்ளது.

### சீனாவும் பெண் சிசுக்கொலையும்

2,000 ஆண்டுகளுக்கு மேலாக பெண் சிசுக்கொலை நடந்த வரலாறு சீனாவிற்குரியது. கி.மு 1000 - 700 வைச் சேர்ந்த 'பாடல்களின் நூல்' என்ற பழஞ்சீன இலக்கியத்தில் உள்ள,

மகன் பிறந்தால்

அவனைப் படுக்கையின் மீது தூங்க வை

அவனுக்கு உயரிய உடைகளை அணிவி

அவனுக்கு விளையாட பச்சைப் பவளத்தைக் கொடு

மகள் பிறந்தால்

அவள் தரையில் உறங்கட்டும்

கந்தலைக் கொண்டு அவளைப் போர்த்து

உடைந்த பீங்கானை விளையாடக் கொடு

அவளைக் கண்டு கொள்ளாதே" (Jayanti Shankar, 2015)

என்ற பாடல் சமூகத்தில் ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் இடையே நிலவிய கடுமையான ஏற்றத் தாழ்வினைத் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆண் குழந்தையில்லாத குடும்பங்கள் நிச்சயம் வறுமையில் வாடும் என்ற நம்பிக்கை பல நூற்றாண்டுகளாக சீனத்தில் வேரூன்றி விட்டிருப்பதும் இதற்குக் காரணமாக உள்ளது.

பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்தவ மிஷனரிகள் பெண் சிசுக்கொலை நடைமுறையில் இருப்பதைக் கண்டுபிடித்தனர். பிறந்த பெண் குழந்தைகள் ஆறுகளில் அல்லது குப்பைக் குவியல்களில் வீசப்படுவதைக் கண்டறிந்தனர். பதினேழாம் நூற்றாண்டில் சீனாவின் பல மாகாணங்களில் இந்த நடைமுறை நிகழ்ந்ததாகவும், நடைமுறைக்கு முதன்மையான காரணம் வறுமை என்றும் மேட்டியோ ரிச்சி ஆவணப்படுத்தினார் (Mungello, 2009). 19 ஆம் நூற்றாண்டு சீனாவில், பெண் சிசுக்கொலை பரவலாக இருந்தது. பெண் சிசுக்களைக் கொல்வதற்கு நீரில் மூழ்கடித்தல், மூச்சுத் திணறச் செய்தல் மற்றும் பட்டினி போட்டுக் கொல்லுதல் அல்லது குழந்தையைக் கூடையில் வைத்து அதை மரத்தில் கொண்டு போய் வைத்து விடுதல் என்பன போன்றவை வழி முறைகளாக விளங்கின. இதில் குறிப்பாக மரத்தில் வைக்கப்பட்ட பெண் சிசுவை அந்த வழியாகச் செல்வோர் கூடப் பார்க்க மாட்டர்கள் என்பது சீனாவில் பெண் சிசுக்களின் உண்மை நிலையைப் புலப்படுத்தும்.

உலகளவில் ஒவ்வொரு வருடமும் ஒரு மில்லியன் குழந்தைகள் கொல்லப்படுகிறார்கள். இதில் சீனாவின் பங்கு அதிகமாகும்.

1997-இன் போது 90 மில்லியன் சீன ஆடவர்கள் மணமுடிக்க பெண் தேடியலைவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏனெனில் "சீனாவில் மட்டும் ஒவ்வொரு வருடமும் 10,000 பெண் குழந்தைகள் கொல்லப்படுவதாக 1996-இன் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. பெண் குழந்தைகள் என்றறிந்து கொண்ட பிறகு கருக்கலைப்புச் செய்தல் சீனாவில் மிக அதிகம். பெண் குழந்தைகளைத் தவிர்க்கவே கருவில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்றறிந்துகொண்டு இவ்வகைக் கருக்கலைப்புகளைப் பரவலாகச் செய்கிறார்கள்" என்கிறார் சீனக்கலாச்சாரத்தைப் பற்றி ஆராய்ந்த ஜெயந்தி

சங்கர் (Jayanti Shankar, 2015).

2002 கணக்கெடுப்பின்படி மத்திய சீனத்தில் பங்கேற்ற 820 பெண்களில் 300க்கு மேற்பட்ட பெண்கள் தாங்கள் கருக்கலைப்பு செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர். அதில் மூன்றில் ஒருவர் ஆண் குழந்தைக்காகவே கருக்கலைப்பு செய்து கொண்டதாகவும் ஒத்துக் கொண்டுள்ளனர்.

இதில் தப்பிப் பிழைத்த சிசுக்கள் தாயின் கையாலும் சில வேளைகளில் தந்தையின் கையாலும் ஓடும் நீரில் மூழ்கடித்தும் உயிரோடு நிலத்தடியில் புதைத்தும் கொல்லப்படுகின்றன. அவர்களிடம் ஏனென்று காரணம் கேட்டால், எதிர்காலத்தில் அந்தப் பெண் குழந்தை வாழ்க்கையில் கஷ்டமே படாமலிருக்க அந்தக் குழந்தைக்கு உதவுவதற்காகவே கொலை செய்வதாகக் கூறுகின்றனர். தாய் ஒருத்தியே “தன் 11 பெண் குழந்தைகள் கொல்லப்பட்டதாகச் சொல்லியிருக்கிறாள். இதுவே ஆதாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பெரிய எண்ணிக்கை என்று தெரிகிறது” (Jayanti Shankar, 2015).

## பாகிஸ்தானில் பெண் சிசுக்கொலை

இஸ்லாமிய சட்டத்தின்படி பெண்சிசுக்கொலை நடைமுறை கடுமையாகத் தண்டிக்கப்படக்கூடியதாக இருந்தபோதிலும் பாகிஸ்தானிலும் பெண் சிசுக்கொலை நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளது. பாகிஸ்தான் ஆண் ஆதிக்கம் செலுத்தும் தேசமாக உள்ளமை, சமூகமே ஆணாதிக்கச் சமுதாயமாக உள்ளமை, குடும்பத்தில் உள்ள சிறுவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுதல், திருமணமாகாது ஒரு குழந்தையை வைத்திருப்பது கலாச்சார ரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளமை போன்றவை இதற்குரிய காரணிகளாக உள்ளன. பெண்களே தங்கள் பெண் குழந்தைகளை அவமானம் அல்லது துன்புறுத்தலில் இருந்து தப்பிக்கவைப்பதற்காக அவர்களைக் கொல்கிறார்கள் என்கின்றன ஊடகங்கள். நேஷனல் லைவ் டு லைவ் நியூஸ் படி , 2017 ஆம் ஆண்டில், பெண்சிசுக்கொலை குறித்து ஒரு வழக்கு மட்டுமே பதிவாகியுள்ளது, ஆனால் பாகிஸ்தானின் தலைநகரில் சனவரி 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் 345 பெண் குழந்தைகள் இறந்து கிடந்தன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன (Andrusko, 2018).

## இந்தியாவில் பெண்சிசுக்கொலை

1789-ஆம் ஆண்டில் இந்தியாவில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின்

போது உத்தரப்பிரதேசத்தில் பெண்சிசு கொலைசெய்யப்பட்டமை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த காலகட்டத்தில் இந்தியாவின் வடமேற்கில் இருந்த ஒரு நீதிபதியின் கடிதம், பல நூறு ஆண்டுகளாக மைன்பூரியின் ராஜாக்களின் கோட்டைகளில் எந்த மகளும் வளர்க்கப்படவில்லை என்ற உண்மையைச் சுட்டியது. காலனித்துவ காலத்தில் இந்தியாவில் பெரும்பாலான பெண் சிசுக்கொலைகள் வடமேற்கில் நிகழ்ந்தன என்பதையும், அனைத்து குழுக்களும் இந்த நடைமுறையை மேற்கொள்ளவில்லை என்றாலும், அது உண்மையில் பரவலாக இருந்தது என்பதையும் அறிக்கைகள் காட்டுகின்றன. தமிழகத்தில் அக்கால கட்டத்தில் இதுபோன்ற செயல்பாடுகள் பதிவு செய்யப்படவில்லை.

ஆனால் 20-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் பெண்சிசுக்கொலை என்பது பரவலாக நடைபெற்றுள்ளது. குறிப்பாக உசிலம்பட்டி, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல் ஆகிய பகுதிகளில் இத்தகைய போக்கு அதிகமிருப்பதை அறியமுடிகிறது. காலங்காலமாக நாடு, நதி, நட்சத்திரம், கல்வி, செல்வம், வீரம் என வாழுமிடம் தொடங்கி வழிபடும் தெய்வம் வரை அனைத்தையும் பெண்ணாகக் கற்பிதம் செய்யப்பட்ட நம் நாட்டிலும் நாகரிக வளர்ச்சியடைந்த இற்றைச்சமூகத்திலும் “சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை” என்று கூறி ஆண் குழந்தையை உயர்வாகவும் பெண்குழந்தையை அவலச் சின்னமாகவும் கருதும் போக்கு உள்ளது. பெண்குழந்தைப் பிறப்பே கேவலமான நிகழ்வாக இங்கு கருதப்படுகிறது. பல பெண் சிசுக்களுக்குக் கருவறையே கல்லறைகளாகி விடுகின்றன. அதையும் மீறி உலக முகம் பார்க்கத் துடிக்கும் இப்பிஞ்சுகள் கண் விழிக்கும் முன்பே காணாமல் போய்விடுகின்றனர். அறிவியல் தொழில்நுட்பத்தால் கருவிலிருக்கும் காலத்திலேயே குழந்தை ஆணா பெண்ணா என்று அறிய இயலும். ஆனால் அதனைப் பெற்றோரிடம் மருத்துவர்கள் கூறுதல் கூடாது என்று சட்டம் இருப்பினும் அதனையும் மீறி அறிந்து கொண்டு பெற்றோர்கள் பெண்சிசுக்களைக் கருவிலேயே அழித்து விடுகின்றனர். தமிழகத்திலும் ஆண்டுக்கு சராசரியாய் முப்பதாயிரம் பெண்சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்படுகிறது என்று தமிழகச் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

”மதுரை, தேனி மாவட்டத்தில் களஆய்வில் தரவுகள் சேகரித்தபோது இன்றும் குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்களால் இதுபோன்ற செயல் நிகழ்த்தப்படுகிறது என்பது தெரிய வந்தது. நான்காண்டுகளுக்கு முன்பு

அணைப்பட்டியைச் சார்ந்த ஒருபெண்ணுக்கு முதல் பெண் குழந்தை பிறந்த போது அவரது தாயே நெல்மணியை இட்டுக் கொன்றதாகக் குறிப்பிடுகின்றனர்" (Manjula, 2020).

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகில் உள்ள புள்ளேரிப்பட்டி கிராமத்தில் பிறந்து 33 நாள்கள் ஆன பெண் குழந்தை ஒன்று, 2020 மார்ச்சு 5-ம் தேதியன்று அதன் தாய், தந்தை மற்றும் தாத்தாவால் எருக்கம்பால் ஊற்றிக் கொல்லப்பட்டிருக்கிறது. குழந்தையைக் கொன்ற தந்தை வைரமுருகன், தாய் சவுமியா மற்றும் வைரமுருகனின் தந்தை சிங்கம் ஆகியோர், இப்போது சிறையில் இருக்கின்றனர். இச்சிசுக்கொலை குறித்து செக்கானூரணி இன்ஸ்பெக்டர் அனித்தா, என்ன சொல்றதுன்னே தெரியல; தோண்டி அந்தக் குழந்தைய எடுத்தப்ப, எந்தச் சிதைவும் இல்லாம அப்படியே தூங்குவதுபோல இருந்துச்சு. பாத்ததும் மனசே நொறுங்கிப்போச்சு! என்று உடைந்து அழும் குரலில் பேசுகிறார் (Selvi, 2020)

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியில் நடந்த பெண் சிசுக் கொலைகளையும் கருக் கொலைகளையும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்ததில் 'ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி சங்கத்திற்கு (எஸ்.ஐ.ஆர்.டி) பெரும் பங்கு உண்டு.

பெண் சிசுக்கொலைகளைத் தடுப்பதற்காக 1980-இல் களம் இறங்கிய எஸ்.ஐ.ஆர்.டி., 1986-இல் இந்த அவலத்தைப் பகிரங்கப்படுத்தியது. அதன் பிறகு அரசு தரப்பு விழித்துக் கொண்டு சில அதிரடி நடவடிக்கைகளை எடுத்தது. ஆனாலும், சிசுக் கொலைகள் முற்றிலுமாக நிறுத்தப் படவில்லை. இந்த நிலையில் 1991-இல் தொட்டில் குழந்தைகள் திட்டத்தை அறிமுகப்படுத்தியது தமிழக அரசு. கூடவே, பெண் சிசுக்களை கொலை செய்தால் அந்தக் குழந்தையின் தாய் மீது கொலை வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டது.

கருக்கொலை என்பது கண்ணுக்குத் தெரியாத ஒரு விஷயம். இதில் பெண்களை மட்டுமே குற்றம் சாட்டுவதில் அர்த்த மில்லை. பெண்ணை இந்த சமுதாயம் எப்போதுமே இரண்டாம் தர குடிமகளாகத்தான் பார்க்கிறது. அரசியல், சமூகம், ஏன்..திருமணத்தில் கூட பெண் ஆணை விட குள்ளமாகத்தான் இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள். பெண்ணுக்கு ஆயிரம் கட்டுப்பாடுகள் போடும் இந்த சமுதாயம், ஆணுக்கு எந்தக் கட்டுப்பாடும் விதிப்பதில்லை. இயற்கைக்கும் பெண்ணுக்கும் மறு உற்பத்தி இருக்கிறது. ஆனால் இரண்டையுமே ஆண் தனது கட்டுப்பாட்டில்

வைத்திருக்கிறான். இந்த நிலைமை மாறாதவரை பெண் சிசு, கரு, கொலைகளை முற்றிலுமாக தடுத்துவிட முடியாது என்பதே நிதர்சனம். இதனை,

”பெண் சிசுக் கொலை அதிகமாக நடந்த மாவட்டங்களான மதுரை, தேனி, சேலம், தருமபுரி, நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்னமும் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் எதிர்பார்த்த இலக்கில் இல்லை என்னும் எஸ்.ஐ.ஆர்.டி-யின் இயக்குநர் ஜீவாவின் கூற்றும் உறுதிப்படுத்தும்” (Salman Paris, 2020).

தமிழகத்தில் மக்கள் பெண்சிசுக்கொலை செய்யப் பல வழிமுறைகளைக் கையாளுகின்றனர். கள்ளிப்பால்புகட்டுதல், நெல்மணியை வாயில் இடுதல், கழுத்தில் வைத்து நெறித்தல், மண்ணெண்ணையைப் புகட்டல், மூச்சுத் திணறல் ஏற்படுத்திக் கொல்லுதல் ஆகிய உத்திகளை மேற்கொள்கின்றனர். கிராமப்புறங்களில் இதற்கென மருத்துவச்சிகள் இருக்கின்றனர். இந்தச் சிசுக்கொலைகள் பிறர் அறியாமல் நடப்பதில்லை ஊரார் அறிந்தும் அதற்கு உறுதுணையாகயிருக்கின்றனர்.

ஆண்பாலுக்குத் தாய்ப்பாலும் பெண்பாலுக்குக் கள்ளிப்பாலும் கொடுத்து வள்ளுவரின் அறத்துப்பாலை கேலிக்கு உள்ளாக்கும் சமூக நிலையை, தமிழ்ப்படைப்பாளர்கள் பலரும் கண்டித்துள்ளனர். தம் கவிதைகளால் ஒரு எழுச்சியை ஏற்படுத்தி இச்செயலைத் தடுக்க முயற்சி செய்துள்ளனர். இதனைப் பின்வரும் பகுதிகள் விளக்கும்.

உசிலம்பட்டி, சேலம் பகுதிகளில் நெல்மணிகளைப் பயன்படுத்திச் சிசுக்கொலை நடைபெறுவதை,

**“பெண்கள் கிளிகளாம்**
**உவமை சரி!**
**நெல்மணி?”**

**“அம்மா,**
**உழவர் குடியில் பிறந்தவள் தானே நீ**
**உனக்குத் தெரியாதா?**
**வயலில் இடுவதற்குத் தான் நெல்**
**என் வாயில் இடுவதற்கல்ல!”**

என்னும் கவிதைகள் புலப்படுத்தும். கிளிகள் என்று போற்றப்படுகிற பெண்களின் வாரிசான பெண் சிசுக்கிளிகள் நெல்மணிகளால் கொல்லப்படுதல்

உயிர் வாழ உதவும் நெல்மணி உயிர் பறிக்க உதவுவது முரண்பாடான ஒன்றாகும் (Malathi Harindran, 1996).

**நெல்லுக்குப் பதில் கள்ளிப்பால் கொடுத்துக் கொல்லும் கொடுமையை கவிப்பேரரசு வைரமுத்து,**

ஆராரோ ஆரிராரோ
ஆரிராரோ ஆராரோ
ஆராரோ நீ கேக்க
ஆயுசு எனக்கு இல்லையடி
புது நெல்ல நான் அவிக்க
விதி வந்து சேந்ததடி
தாய்ப்பாலு நீ குடிக்க
தலை எழுத்து இல்லையடி
கள்ளிப் பால நீ குடிச்சு
கண்ணுறங்கு நல்ல படி
அடுத்து ஒரு சென்மம் வந்து
ஆணாக நீ பொறந்தா
பூமியில எடம் இருக்கும்
போய் வாடி அன்னக் கிளி என்று பாடுவர் (Vairamuthu, 1994).

**நிறுத்துங்கள் அது விஷம் என்னும் கவிதையில் கிருங்கை சேதுபதி**,

ஆண்பால் பெண்பால்
அன்பால் இணைந்தால்
பெறும்பால்
ஆண்பால் ஆனால்
தாய்ப்பால்......
பெண்பால் ஆனால்
கள்ளிப்பால் !

என்று மொழிகுவர் (Kirunkai Sethupati, 2003).

மு.ஓம்குமார் என்பவர் ஒரு தாயின் ஓலம் என்னும் கவிதையில், அந்தி சாஞ்ச ஒரு ராப்பொழுதுல / உன்கூட ஒன்னா நான்சேர / நாளெண்ணி முப்பதுல / உருவானா சிறுக்கி மக / வாழையடி வாழையாக / வம்சத்தோட வாரிசாக / வளம் வருவான் இளவரசன்னு / காத்திருந்தா எங்க வீட்டு / கிழவி அவ / இளவரசன் வாரான்னு / ஊர்கூடி பந்த போட்டு / சாதி சனம் வளவி பூட்ட / வீதி சனம் வெறிச்சு பாக்க / வளகாப்பும் தான் வந்தோட / பத்து மாசம் பறந்தோட / முத்தான ஒரு புதனுல / அய்த்தானின் துணையோட / நான் போனேன் பெத்தெடுக்க / என் வம்சத்தோட முத்தெடுக்க / ஒடம்பு வலி ரணமாக / உதிரமது வெளியோட / ஊரெழுப்பும் சத்தத்தோட / பதுமை அவ பிறந்து வந்தா / பஞ்சணையில் படுத்துறங்க / பசியோட பிஞ்சு அவ சத்தம்கேட்டு / பால் வார்க்க நான் போனேன் / மகராசன் வருவான்னு / காத்திருந்த கிழவி அவ / ஒப்பாரி வெச்சாளே / எழவு விழுந்த வீடு போல / மகராணி போலாட்டம் / என் ஆசை மக இருந்தாலும் / மொகம் கூட பாக்காம / மறு பேச்சு பேசாம / மொறச்சாளே பாவி அவ / தாய்ப் பாலு வேணுமுன்னு / பச்சைப் புள்ள கை நீட்ட / அண்ணாந்து பாக்கச் சொல்லி / அழுத புள்ள அவ வாயில் / கள்ளிப்பால குடுத்தாளே / கிழவி இல்ல கள்ளி அவ / கண்ணிருந்தும் குருடச்சியா / வாயிருந்தும் ஊமைச்சியா / பச்சைப் புள்ள துடிக்கையிலே / வக்கத்துப் போயி நிக்குறேன் / வாக்கப் பட்டு வந்த மக............ என்று ஒரு தாயின் மனக்குமுறலை பெண்மகவு கொல்லப்படுவதை தடுக்க முடியாத அவலத்தை எடுத்துரைக்கின்றார். இங்கு ஒரு வினா எழுகிறது (Omkumar, 2013). ஒரு தாய் நினைத்தால் தன் மகவைக்காப்பாற்ற முடியாதா என்று? இதற்கு உலகெங்கும் உள்ள தாய்மார்கள் செல்லும் பதில் முடியாது என்பதே. பொருளாதாரத்தில் தற்சார்பு இல்லாத நிலையில் அவர்களால் வாய்திறந்து பேசக்கூட முடியாது என்பதே உண்மையாகும்.

பிரவீன் என்னும் கவிஞர், “பசித்தழுகிறது பச்சிளங்குழந்தை அறுந்து விழாத தொப்புள் கொடியைப் பார்க்கும் கண்கள் சொல்லிவிடும் அது புதியதாய் பிறந்த குழந்தையென்று அழுகுரல் கேட்டுணர்ந்து வந்த தாய் குழந்தையை மடியினில் வைத்து, ஊட்டினாள் புட்டிப்பாலை / பசியடங்கி படுத்துறங்கிய குழந்தையைக்கண்டு / கண்ணீரோடு கீழே ஊற்றினாள் புட்டியில் மீதமிருந்த கள்ளிப்பாலை” என்கிறார் (Praveen, 2010). திரைப்பட இயக்குநர் பாரதிராஜா

பெண்சிசுக்கொலை குறித்து ‘கருத்தம்மா’ என்ற பெயரில் திரைப்படம் எடுத்துள்ளமை இங்கு சுட்டத்தக்கது.

**கருக்கலைப்பு**

இன்றைய அறிவியல் வளர்ச்சி ஆதிக்க வருக்கத்தாருக்கு மட்டுமே பயனளிக்கக்கூடியது என்ற கருத்து பெண்கள் நிலையிலும் பொருந்துகிறது. ஏனெனில், நாகரிகமற்ற காலத்தில் பெண்கள் எத்தகைய நிலைக்கு ஆளாக்கப்பட்டார்களோ, அத்தகைய நிலை இன்றைய அறிவியல் காலத்திலும் தொடர்வதோடு தீவிரத்தையும் கொண்டுள்ளது. “அமினோசென்டஸிஸ்” என்ற கருக்கலைப்பு முறை இதற்குத் தக்க சான்றாகும். ஆரோக்கியமான குழந்தைகள் பிறப்பதை ஊக்குவிப்பதற்கான ஒரு வழிமுறையென்று வகுக்கப்பட்ட அம்னியோசென்டெஸிஸ் (கருப்பையை ஊடுருவிக் கண்டறியும்) பரிசோதனையானது தற்பொழுது வேண்டாத பெண் சிசுக்களைக் கருவிலேயே அழிப்பதற்குப் பூர்வாங்கமாகக் குழந்தை ஆணா பெண்ணா என்பதைக் கண்டறிவதற்கு பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பம்பாயில் மட்டுமே ஒரு தனியார் மருத்துவமனை 1984-85-இல் 16,000 பெண் கருமுட்டைகளைக் கருப்பையிலேயே கருச்சிதைவு செய்துள்ளது. (”கார்டியன்” 4.11.86) என்பர் வி.ராதாகிருஷ்ணன் (Radhakrishnan, 2018).




கர்ப்பத்தில் வளரும் பிண்டம் ஆணாக இருக்க வேண்டும் என்ற சமூகப் பொதுப்புத்தியின் விளைவாக, பெண் மனித மதிப்பை இழக்கத் தொடங்கிச் சறுக்கிச் சறுக்கி ஒரு சூனியமாய்த தன் இனத்தைத் தானே அழித்துக் கொள்ளும் அவலத்துக்கு வந்திருக்கிறாள். ஆண் குழந்தை என்றால் விரும்பிப் பெற்றுக் கொள்ளுவதும் பெண் குழந்தை என்றால் தாயே அதனை அழித்து விடுகின்ற

நிலையையும் காணமுடிகிறது.

**"பல்லாயிரம் கருக்களை முளைக்குமுன் கிள்ள!**

**வரிசையில் படுத்திருக்கிறோம்**

**இதோ, என் முறை வந்து விட்டது"**

என்பதில் பெண்கள் தாமே முடிவெடுக்க இயலாமல், பெண் சிசுக்கொலைக்குத் துணைபோகக் கூடிய நிலை உள்ளதைக் கவிஞர் வத்சலா எடுத்துக் காட்டுகின்றார். தன் கருவைத் தானே காப்பாற்றும் உரிமையில்லாதவளாகப் பெண் இருக்கிறாள் என்பதையே மேற்குறித்த கவிதை சுட்டிக்காட்டுகிறது (Tamilanpan, 1998).

**அறிவியலாவது / அங்கீகரித்ததா பெண்ணை / பெண் குழந்தை யென்றால் / கர்ப்பத்திலேயே கலைத்துப் போட / கண்டுபிடித்தது தானே / ஸ்கேன் மருத்துவ வசதி** என்னும் கவிதை கருவிலேயே பெண் குழந்தையை அழிக்கும் நிலையைச் சுட்டுகிறது (Vatsala, 2000). இதில் ஆக்கப்பூர்வமாகப் பயன்பட வேண்டிய அறிவியல் பெண்களுக்கு எதிரான அழிவு வேலைக்கு பயன்படுத்தப் பெறுவதைக் காணமுடிகிறது.

**யார் கண்ணிலும் படாமல் / பெண்ணைத் தப்பிக்க வைத்தது / ஸ்கேன் பார்க்க வசதியில்லாத வறுமை** எனும் கவிதை மகிழ்ச்சியையும், துன்பத்தையும் ஒரு சேர நல்குவதோடு ஊடுகதிர் (Scan) பார்த்துக் கருவை அழிக்கும் வசதியற்றோர் சிசுக்கொலை புரிகின்றனர் எனும் நடைமுறைச் சிக்கலையும் உணர்த்துகிறது.

"இவன் மனிதனா? மிருகமா? என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில், விலங்கினங்கள் பெண்கன்று ஈன்றால் மகிழ்ச்சியடையும் மனிதன் பெண்குழந்தை பிறந்தால் கவலை கொள்வதை,

**"ஒரு விவசாயி**

**தன் பசு**

**பெண் கன்று**

**ஈன்றதற்காக**

**அளவற்ற**

**ஆனந்தம் அடைகிறான்**

**அவனே**

**தன் வீட்டில் பிறந்து**

**பெண் குழந்தையென்றால்**

**அளவற்ற மனத்துயரம்**

**அடைகிறான்**

**ஏன்?”**

என்று வினவுவர் கவிஞர் தமிழ்மதி (Tamilmathi, 2009). அஃறிணை உயிரில் பெண் என்றால் மகிழ்ச்சி அடையும் ஆண், தனக்குப் பிறந்தது பெண்குழந்தை என்றால் வேதனை அடைதல் ஆணாதிக்க மனநிலையை வெளிப்படுத்துகின்றது.

## பெண்ணினத்தின் மீதான தாக்குதல்

பெண்சிசுக்கொலையை ஒரு சாதாரண சமூகச்சிக்கலாக எடுத்துக் கொள்ளாமல், பெண்ணினத்தின் மீதான ஒட்டுமொத்தத் தாக்குதலாகப் பார்க்கும் பார்வையும் கவிஞர்களிடம் உள்ளது.

”இந்தக் கொலை -

குழந்தையில் மீது மட்டுமல்ல

என்மீது - நீ குழிதோண்டிப்

புதைத்துவிட விரும்பும் - பெண்ணினத்தின்

மானம்.... கௌரவம்

உரிமை... உயர்வு இவை

அனைத்தின் மீதான தாக்குதல்”

என்று கூறும் இக்கவிதை, சிசுக்கொலை பெண்ணினத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும் ஆணாதிக்கத்தை எதிர்த்தெழும் பெண்விடுதலை முயற்சிகளைத் தொடக்கத்திலேயே குழிதோண்டிப் புதைக்கும் செயலே இப்பெண் சிசுக்கொலை என்பதையும் உணர்த்துகிறது (Anitha, 2008).

கவிதைகளில் வெளிப்படும் பெண்சிசுக் கொலை மற்றும் கருக்கொலை ஆகியவை உண்மையே என்பதை, அரசின் பால்விகிதாச்சாரம் பற்றிய புள்ளிவிவரம் மெய்ப்பிக்கிறது.

## பெண் இன ஒழிப்பால் ஏற்பாடும் சமூகப் பிரச்சினைகள்

பெண்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போவதால், இன்னும் 20 வருடங்களில் பெண் எதிர் நோக்கவிருக்கும் கொடுமைகள் மேலும் கூடும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. பெண்களைக் கடத்துதல், திணிக்கப் பட்ட விபசாரம், பாலியல் நோய்கள், பாலியல் குற்றங்கள், பாலியல் வல்லுறவு, பாலியல் வக்கிரங்கள் ஆகியவை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப் படுகிறது. இதனால், பாலியல் நோய்கள், அது தொடர்பான ஏராளமான பிரச்சினைகளும் உருவாகி அதிகரிக்கும் என்றும் மனிதர்களைக் கடத்துவதும் விபசாரமும் கூட இன்னும் அதிகரிக்கும் என்றும் எச்சரிக்கிறார்கள்.

1991-இல், பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் ஆசியாவில் 10 கோடி பெண்கள் பாலியல் தேர்வினாலும் (sex-selection) புறக்கணிப்பாலும் காணாமல் போயுள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ளார். இன்று ‘பேட்டி பச்சாவ்’ (Beti Bachao - Save the girls) என்று பெண் குழந்தைகளைக் காக்குமாறு அறிவுறுத்தும் இந்திய அரசு, பெண் சிசுக் கொலைக்கு துணை புரிந்திருக்கிறது என்பது, நம்புவதற்குக் கடினமான உண்மையாகும். 1970-களில் மக்கள் தொகைப் பெருக்கம் மிகப்பெரிய பிரச்சினையாக உருப்பெற்றபோது அதை எப்படித் தடுக்கலாம் என்று ஆட்சியாளர்கள் ஆலோசித்தனர். மக்கள் ஆண் குழந்தை பெறும் வரை குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதால்தான் மக்கள் தொகை வேகமாகப் பெருகுகிறது. பெண் குழந்தைகளைக் கருவிலேயே கண்டறிந்து பிறக்காமல் தடுத்தாலே மக்கள் தொகை பெருக்கத்தை குறைக்கலாம் என்று எய்ம்ஸ் (AIIMS) யோசனையொன்றை அரசுக்கு முன்மொழிந்தது. அதைத்தொடர்ந்து அரசின் ஊக்கத்துடன் முக்கிய மருத்துவமனைகளில் பாலினப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. செவியுணரா ஒலி (Ultrasound) வருகைக்குப் பின் அதிகளவில் நடத்தப்பட்டன. செவியுணரா ஒலி மூலம், பாலின பரிசோதனை செய்ய முடிவதால், செவியுணரா ஒலி லட்சக்கணக்கான பெண் சிசுக்களுக்கு எமனாக மாறிப் போனது. முன்பு பெண் குழந்தை பிறந்த பிறகு அதைக் கள்ளிப்பால் ஊற்றிக் கொல்லும் முறை, செவியுணரா ஒலி வந்தபிறகு பிறப்பதற்கு முன்பே கருவிலேயே கருக்கலைப்பு (Abortion) என்ற பெயரில் கொல்வதாய் மாறிப்போனது. 1951 புள்ளி விவரப்படி (Sensex) 1000 ஆண்களுக்கு 946 பெண்களாக இருந்த ஆண்-பெண் விகிதாச்சாரம் 1991 புள்ளி விவரப்படி (Sensex) 927 ஆகக் குறைந்த போதுதான் இந்திய அரசு விழித்துக்கொண்டது. பாலியல் பரிசோதனையைத் தடுப்பதற்காக 1994ல் PNDT (Pre-Conception & Pre-Natal Diagnostic

Techniques Act) சட்டத்தைக் கொண்டு வந்தது. சட்டத்தின்படி, கர்ப்பப்பையில் உள்ள சிசுவின் பாலின பரிசோதனை செய்வது சட்டப்படி குற்றமாகும்.

பாலின பரிசோதனை செய்வதற்காக மருத்துவரையோ, பரிசோதனை நிலையங்களையோ அணுகுபவருக்கு ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், ஐம்பதாயிரம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும். இந்த குற்றத்தை மீண்டும் புரிந்தால், ஐந்து ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் ஒரு லட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும் என்று கூறப்பெற்றது. தமிழகச்சூழல் இப்படி இருக்க, பெண் சிசுக்கொலையில் வடஇந்தியாவின் நிலை இன்னும் மோசமாக இருந்தது.

## வடஇந்தியாவில் பெண்சிசுக்கொலை

உத்தரகாண்ட் மாநிலத்தின் உத்தர்காசி மாவட்டத்தில் உள்ள 132 கிராமங்களில் கடந்த 2019-இல் மூன்று மாதங்களில் ஒரே ஒரு பெண் குழந்தைகூடப் பிறக்கவில்லை என்ற அதிர்ச்சிகரமான புள்ளிவிவரம் வெளியாகியுள்ளது. அரசு ஆவணங்களின்படி இந்த 132 மாவட்டங்களிலும் கடந்த மூன்று மாதங்களில் மொத்தம் 216 குழந்தைகள் பிறந்துள்ளன. இவற்றில் ஒன்றுகூடப் பெண் குழந்தை இல்லை. இது தொடர்பாக ஏஎன்ஐ செய்தி நிறுவனத்துக்கு மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ் சவுகான் பேட்டியளித்தபோது, "பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்துள்ள அல்லது பெண் குழந்தைகள் பிறப்பே இல்லாத பகுதிகளை நாங்கள் கண்டறிந்துள்ளோம். அந்தப் பகுதிகளில் எதனால் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது என்பதை ஆராய்ந்து வருகிறோம். இது குறித்து ஆழமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது"[25] என்றுரைப்பது வடஇந்தியாவில் பெண்சிசுக்கொலையின் உண்மை முகத்தைப் புலப்படுத்தும்.

## பெண் சிசுக்கொலைக்கு எதிராகச் சட்டப் போராட்டம் செய்த முதல் பெண்மணி

தன் அனுமதி இல்லாமல், கருவிலிருந்த தனது குழந்தைகளின் பாலினத்தைச் சட்டத்திற்கு புறம்பாகக் கண்டறிந்த தனது கணவர் மற்றும் துணை போன மருத்துவமனைக்கு எதிராக PNDT சட்டத்தின் கீழ் முதல் வழக்கைப் பதிவு செய்தவர் டாக்டர் மீத்து குரானா என்னும் பெண் மருத்துவர் ஆவார்.

மீத்து குரானா கருவுற்றபோது கருவிலுள்ள குழந்தை ஆணா?

பெண்ணா? என்று அறிய பாலினப் பரிசோதனைக்கு உட்பட வேண்டும் என்று அவரது கணவரும், மாமியாரும் கட்டாயப்படுத்தினர். ஒரு அறையில், மூன்று நாட்கள் உணவில்லாமல் பூட்டி வைக்கப்பட்டார். முட்டை அவருக்கு ஒவ்வாமையுடையது (Allergy) என்று தெரிந்த அவர்கள் வலுக்கட்டாயமாக முட்டையில் செய்யப்பட்ட இனிப்பைச் சாப்பிட வைத்தனர். அதனால் ஒவ்வாமை நோய் ஏற்பட்டு மயக்க நிலையில், டெல்லியிலுள்ள ஜெய்ப்பூர் கோல்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிறுநீரகத்தை செவியுணரா ஒலி (Ultrasound) எடுப்பதாகப் பொய் கூறி, கருப்பை சோதனை செய்தனர். கருவில் உள்ள இரண்டு குழந்தைகளும் பெண்கள் தான் என்று அறிந்ததும் கருக்கலைப்பு செய்யக் கட்டாயப்படுத்தியுள்ளனர். அதற்குச் சம்மதிக்காத அவரைப் பலவழிகளில் துன்புறுத்தியுள்ளனர்.

ஒரு கட்டத்தில் படிக்கட்டிலிருந்து தள்ளிவிடும் வரை போன பின், தன் குழந்தைகளைக் காக்க ரத்தம் வழியத் தன் தாய் வீட்டைச் சென்றடைந்த மீத்து காவல் நிலையத்திற்குச் சென்றார். அங்கு நீதி கிடைக்காததால் இறுதியில் நீதிமன்றத்தில் சட்டத்திற்குப் புறம்பாக பாலியல் பரிசோதனை செய்த ஜெய்ப்பூர் கோல்டன் மருத்துவமனை மற்றும் தனது கணவருக்கு எதிராக வழக்குத் தொடுத்து கடந்த எட்டு வருடங்களாக நீதிக்காகப் போராடி வெற்றி பெற்றுள்ளார். இதனால் வட இந்திய ஊடகங்கள் ‘இந்தியப் பெண் குழந்தைகளின் பாதுகாவலர்’ என்று மீத்துவை அழைக்கின்றன. மீத்துவைப் போல், இந்தியாவில் நடக்கும் சட்டத்திற்குப் புறம்பான பாலின பரிசோதனையைத் தோலுரித்துக் காட்டியவர்களில் மீனா ஷர்மா மற்றும் ஸ்ரீபால் ஷக்தவாத் ஆகிய இரு பத்திரிகையாளர்களும் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

## நம்பிக்கையளித்த சிசுக்கொலையின் முதல் தீர்ப்பு

2006-இல் சட்டத்திற்குப் புறம்பாக சிசுவின் பாலியல் பரிசோதனை நடத்திய டாக்டர் அனில் சபானிக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்த நீதிபதி பல்வால், தனது தீர்ப்பில் "தன்னை தற்காத்துக் கொள்ளும் திறனுள்ள ஒருவரைக் கொல்வது கொடூரமான குற்றமாகும்; அதை விடக் கொடூரமானது தற்காத்துக் கொள்ளும் திறனில்லா ஒருவரைக் கொல்வது. சிசுவின் பாலியல் பரிசோதனை செய்வதன் மூலம் சிசு பெண் என்று அறிந்தால் அதைக் கருவிலேயே கொல்கிறார்கள். இனிமேல் இந்த கொடூரச் செயலை மற்றவர்கள் செய்யாமல் இருக்க இந்த தண்டனை அளிக்கப்படுகிறது” என்று குறிப்பிட்டார். இந்தத் தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. 1994-இல்

PNDT சட்டம் வந்தாலும் அந்த சட்டத்தின்படி முதல்முறையாக ஒரு மருத்துவருக்கு தண்டனை அளித்து எச்சரிக்கை மணி அடித்தது இந்தத் தீர்ப்புதான். இந்தத் தீர்ப்பின் பின்னணியில் இருந்தவர் ஹரியானாவின் முன்னாள் சுகாதார சேவைகளின் பொது இயக்குநர் டாக்டர். பி.எஸ். தாஹியா.

இந்நிலையில் புதைக்கப்பட்டுவிட்டது என நினைத்த பெண் சிசுக்கொலை 2020 மார்ச்சு மாதத்தில் மீண்டும் உசிலம்பட்டி பகுதிகளில் துளிர்விட்டிருப்பது, சமூக ஆர்வலர்களின் நெஞ்சில் சம்மட்டி அடியாக விழுந்திருக்கிறது.

‘சிங்கப்பெண்ணே...’ என்று தமிழகமே பெண்களைப் போற்றும் இந்தச் சூழலில்தான் இப்படியொரு சம்பவம் நடந்து எல்லோரையும் அதிரவைத்திருக்கிறது. சிங்கப்பெண்களைப் போற்றாவிட்டாலும் பரவாயில்லை... புதைக்க வேண்டாம்! என்பதே பெண்ணினத்தின் வேண்டுகோள்.

**முடிவுரை**

இவ் ஆய்வின் வழி தன்னைத் தற்காத்துக் கொள்ள இயலாத திறனுடைய பெண் சிசுக்களை சீனா, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் கொலை, கருக்கொலை செய்வது இன்றும் நடைபெற்றுவரும் பெண் இன ஒழிப்புச் செயலாக உள்ளது என்பதை அறிய முடிகின்றது. மங்கையராய்ப் பிறப்பதற்கே கூட மாதவம் செய்திருந்தால் மட்டுமே முடியும் என்பது இதன்வழி அறியும் உண்மையாகும். இவ் இனப் படுகொலைக்குச் சமூகத்தில் பெண்ணின் உழைப்பு பொருளாதார மதிப்பற்றதாக ஆக்கப்பட்டுவிட்ட சூழ்நிலை காரணியாக அமைகின்றது. மேலும் குடும்ப வழித்தோன்றலாக ஆண்பிள்ளை மட்டுமே விளங்க முடியும் என்ற நம்பிக்கையும் ஈமச்சடங்கை ஆண்பிள்ளை தான் செய்ய வேண்டும் என்ற சமய அடிப்படையிலான கட்டுப்பாடு, பெண்ணுக்குத் திருமணத்தில் கொடுக்கப்படும் வரதட்சணை ஆகியவை பெண் குழந்தைப் புறக்கணிப்பிற்கு அடித்தளமிடுகின்றன. இந்நிலைமாற, பெண்களைப்பற்றிய சமூக மதிப்பீடுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். கருக்கலைப்பையும் சமூகக் குற்றமாகக் கொள்ள வேண்டும். இச்சிக்கலைத் தனிமனித மற்றும் குடும்பச் சிக்கலாகக் கருதாது, பெண்ணினத்தின் மீதான தாக்குதலாகக் கொண்டு பிற சமூகச் சிக்கல்களிலிருந்து பிரித்துப் பார்க்க வேண்டும். பெண்களின் தற்சார்பு நிலை வளர்ச்சிடையும் போது பெண் சிசுக்கள் மீதான வெறுப்பும் மாற்றம் பெறும் எனலாம். தமிழகத்தில் சமூக ஆர்வலர்கள், ஊடகங்கள், படைப்பாளர்கள் மற்றும் அரசாங்கம் ஆகியோரின் முயற்சியால் இதற்கான விழிப்புணர்வு ஏற்பட்டு பெண் சிசுக்கொலை சற்றுக்

குறைந்திருப்பது ஆறுதல் தரும் செய்தியாகும். எதிர்கால ஆய்வாக தமிழகம் தவிர்ந்த இந்தியாவின் பிறமாநிலங்களில் பெண்சிசுக்கொலை குறித்து ஆராயலாம்.

## References

Andrusko, D., (2018). Wide-scale female infanticide in Karachi, Pakistan. National Right to Life News.

Anitha (2008), Kanavu Kalaiyata Katarkanni, Uyirmai Patippakam, Chennai

C. Salman Paris (2020) Female infanticide re-emerging, Junior Vikatan, Channai.

Checkanurani, (2020) Police Inspector, Anithavin Nerkanal Indhu Tamil Ticai Journal

Jayanti Shankar (2015), Paranthu Maraiyum Kadalnagam, Essay on Chinese culture, Kaavya Publication, Chennai.

Jeeva, (2014) Interview, Junior Vikatan, Chennai

Kirunkai Sethupati (2003), Kuṭai Maṟanta Naḷiṉ Malazi, Nittiya Poorani Patippakam, Kirunkak Kottai.

Malathi Harindran (1996), Malathi Harindran Haikuk Kavithakal, Malathi Harindran Pubblications, Chennai.

Manjula, (2020) Interview, Age 40, Anaikaraipatti

Milner, L.S., A Brief History of Infanticide, Infanticide.org. Archived from the original on -08-15.

Mukavaimuthu, Puthu (vai) Kavithai, Arasi Patippakam, Pondicheery

Mungello, D., (2009). The Great Encounter of China and the West, 1500–1800 (3rd ed). Rowman & Littlefield.

Omkumar, M., (2013) Oru Taiyin Olam, Eluttu E-Journal,

Praveen, (2010), Female Infanticide, Suvadukal E-Journal

Rosalint mails (2018), Ulaka Varalāṟṟil peṇkaḷ, Translated by Radhakrishnan, V., New Century Book house, Chennai.

Rukmini, S., (2012), India deadliest place in world for girl child, The Times of India.

Selvi, (2020) Interview, Age 42, Checkanurani

Tamilanpan (1998), Panipeyyum Pakal, Pumpukar Veliedu, Chennai.

Tamilmathi, S., (2009), Surruc culalaip Parrotu Kappom, Manimekalai Piracuram, Channai.

Vairamuthu (1994), Karuthamma movie song, Vairamuthu Publications, Chennai

Vatsala (2000), Suyam, Sneka Patippakam, Chennai.

# பெண்ணியம் – கருத்தியல்

# Feminism - Ideology

**வி. இலட்சுமி** அ, *

அ அரசு மகளிர் மேல்னிலைப்பள்ளி, தானிப்பாடி, திருவண்ணாமலை, தமிழ்நாடு, இந்தியா.

**V. Lakshmi** [a, *]

[a] Government Girls Higher Secondary School, Thanipadi, Tiruvannamalai, Tamil Nadu, India.

Email: lakshmiviji2311@gmail.com

DOI: https://doi.org/10.34256/fem13

## Abstract:

The concept of feminism is recorded on different platforms. Feminism is a term in which the relationship between men and women is a determining point of the change and development of the family and society. Definitions and concepts of feminism are used in this article. From the ancient literature, the view of women is also taken into consideration how the literature is mentioned and when it changes the Female Society. Women is expressing her expectation in various aspects of feminists writings, feminist literature, literature on feminism, literature of feminism, feminist philosophy, feminist art, feminist film, feminist art and architecture. Furthermore, pro-feminist efforts can be made only if one realizes how the aims of feminists work towards a balanced society. The purpose of this article is therefore to explain the need for seeking knowledge and understanding of the concept of feminism through compilation and analysis.

## முன்னுரை

கருத்தியல் என்பது நம்பிக்கைகள், இலக்குகள், எண்ணங்கள் ஆகியவற்றின் ஒரு தொகுதி. பொதுவாக அரசியலில் இது

பயன்படுத்தப்படுகிறது. கருத்தியல் என்னும் சொல்லுக்குப் பதிலாக கருத்துநிலை, சித்தாந்தம் போன்ற சொற்களும் வழக்கில் உள்ளன. சமூக ஊடாட்டம் வளர வளர மனிதர்கள் பொதுவான எண்ண கருத்துக்களையும் சமூக வாழ்க்கை தொடர்பான நோக்குகளையும் வளர்த்துக் கொள்கிறார்கள். இவ்வாறாக சமூகம், அரசியல், சட்டம், மதம், கலை, மெய்யியல் நோக்கு ஆகியவை தொடர்பான கருத்து நிலைப்பட்ட எண்ணங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். இவையே கருத்துநிலை என்று பெரும்பாலும் குறிப்பிடப்படுகின்றது என 'ஜேம்ஸ் கிளக்மான்' என்பவரை மேற்கோள்காட்டி 'சிவத்தம்பி' எழுதி உள்ளார். இதனடிப்படையில் கருத்தியலின் முக்கியமான நோக்கம் நெறி சார்ந்த சிந்தனைகள் ஊடாக மாற்றங்களை உண்டாக்குவதாகும். அவ்வாறு பல்வேறு தளங்களில் பெண் குறித்தான சிந்தனைகளை வளர்ச்சிப் பாதையில் மடைமாற்றம் செய்யும் பார்வையே 'பெண்ணியம்' என வழங்கப்படுகிறது.

"ஒரு பெண் வெறும் தாயாகவும் மனைவியாகவும் இருந்தால் மட்டும் போதாது; வேறு வகையிலும் அவள் தன்னை நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவது எளிது. ஆனால் தொன்றுதொட்டு வரும் சமூக மரபுகளும், உடற்கூறுகளும் மாற்றம் காணாத நிலையில் அவள் தன்னை எந்த வகையில் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வரையறுத்தலும், அதை நிறைவேற்றலும் அரிது" என்கிறார் கார்ல் பியர்சன் என்னும் சமூக இயலார்.

மண்ணோடு தொடர்புடைய மானிட வாழ்க்கையில் மாற்றங்கள் என்பது கால வளர்ச்சியில் கால் ஊன்றி வளர்ந்து வருகிறது. இதன் அடிப்படையில் சில புதிய இயக்கங்கள் தோன்றி மனித எண்ணங்களை திசைத் திருப்பி பருவக்காற்று போல் வீசி வருகின்றன. அவற்றுள் உலகளாவிய நிலையில் இன்று பேசப்படுவது 'பெண்ணியம்". இதனைப் பற்றிய கருத்தியலை, கோட்பாட்டை இக்கட்டுரையில் காண்போம்.

கருத்தியல் எனும் சொல் முதலில் பிரெஞ்சுப் புரட்சியில் உருவாகி பின்னர் பலவகை பொருள் மாற்றங்களை அடைந்துள்ளது. காரல்மார்க்ஸ், இச்சொல்லை வகுப்பு போராட்டத்தில் பயன்படுத்த மற்றவர்கள் இதை சமூக கட்டமைப்பு செயல்பாட்டின் பகுதியாகவும் சமூக ஒருங்கிணைப்பாகவும் நம்பினர்.

## பெண்ணியம் – பொருள்

'பெண்ணியம்' என்ற சொல் 'Feminism' என்ற ஆங்கிலச் சொல்லை அடிப்படையாகக் கொண்டது. இச்சொல் Femina என்ற 'இலத்தின்' சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். இச்சொல்லுக்கு 'பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள' என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் பண்புகளைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது. பின்னாளில், பெண்களின் உரிமைகளை, பங்கினைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது.

1889 வரை 'Womanism' என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினைகளையும் அதனடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது. 1890 -ஆம் ஆண்டு 'Womanism' என்ற சொல்லின் இடத்தை 'Feminism' என்ற சொல் பெற்றது. 1894 ஆம் ஆண்டு வெளிவந்த ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

## பெண்ணியக் கோட்பாடு

'பெண்ணியம்' என்பது திடீரென்று உருவான ஒரு கோட்பாடு அல்ல. ஆதிகாலத்திலிருந்தே பெண்ணடிமையை வெறுத்துப் பெண்ணுரிமையை நிலைநாட்ட விரும்பியவர்கள் இருக்கத்தான் செய்தனர். அவர்களால் முடிந்தளவு பெண்ணடிமைத் தனத்தை எதிர்த்தனர் என்பதும் உண்மை. பெண்களின் அடிப்படையான உரிமைகள் கூட பறிக்கப்படும் போது ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டதன் விளைவே பெண்ணியக் கோட்பாடாகும்.

'பெண்ணியம்' என்பது ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டிலிருந்து உருவானது இல்லை. இதனால் எல்லாக் காலத்திற்கும், எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும்படியான ஒரு விளக்கத்தைத் தருதல் என்பது இயலாத ஒன்று. பெண்ணியம் என்பது கல்வி, கண்ணோட்டம், பின்னணி, கலாச்சாரத்தைப் பொறுத்து மாறும் தன்மை உடையதாக இருக்கிறது. எனவே வெவ்வேறான தளங்களில் 'பெண்ணியம்' என்பதன் விளக்கம் மாறுபடவே செய்யும். ஆனால் பெண்ணியம் என்பது வரலாறு, பண்பாட்டின் அடிப்படையில் எழுந்த உண்மைகள், நிகழ்வுகள், விழிப்புணர்ச்சி, கண்ணோட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவான ஒன்றாகும் என்பது

மறுக்க முடியாத கருத்தாகும்.

## பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படை

பெண்ணியக் கோட்பாடு பெண்ணியத்தைக் குறித்த கருத்தியல் அல்லது மெய்யியல் விரிவுரை ஆகும். இது பாலின சமநிலை நிலையைப் புரிந்து கொள்ள உதவுகிறது. இக்கோட்பாடு, பெண்களின் பாலினம் சார் பணிகள், பட்டறிவு, ஆர்வங்கள், பெண்ணிய அரசியல் ஆகியவற்றைக் குறித்து மானுடவியல், சமூகவியல், தொடர்பாடல், உளநிலை பகுப்பாய்வு, பொருளியல், இலக்கியம், கல்வி மற்றும் மெய்யில் போன்ற பல தளங்களில் ஆராய்கிறது. பெண்ணியக் கோட்பாடு பாலின சமநிலையைப் பகுத்தறிய குவியம் கொண்டுள்ளது. அது பாகுபாடு, பொருள் ஆக்கப்படுதல், ஒதுக்கப்படுதல், வழிமரபு, பொதுமைப் படுத்துதல், கலை, வரலாறு, சமகால கலை, அழகியல் போன்ற கருத்தியல்களில் ஆராய்கிறது

தனிப்பட்ட ஓர் ஆணை எதிர்ப்பதோ, அல்லது ஆணினத்தின் மீதே வெறுப்புக் கொண்டு கசப்பை உமிழ்வதோ பெண்ணியத்தின் நோக்கம் இல்லை. சமூக உருவாக்கத்தில் பெண் என்பவள் படிப்படியே பின்னுக்குத் தள்ளப்பட்டு ஆண் முதன்மை பெறத் தொடங்கியதையும், பிறகு அவனே அதிகார மையமாக்கப்பட்டதையும் வரலாற்று ரீதியாகக் காண்பதும், அதன் உடனிகழ்வாகவே பெண் மீதான ஒடுக்குமுறைகளும், வன்முறைகளும் உடல் அளவிலும், மன அளவிலும் இன்று வரையிலும் கூடத் தொடர்ந்து கொண்டிருப்பதை ஆராய்வதுமே பெண்ணியத்தின் இன்றியமையாத குறிக்கோளாகும்.

பெண்ணாக இருப்பதனாலேயே உணரும் மனத் தடைகள், இறுக்கங்கள், மரபுவழி முட்டுக்கள், கட்டுக்கள் ஆகியவற்றை எல்லாம் பொறுப்புணர்வோடு சிந்தித்துப் பெண்ணின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்பதே பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையாகும்.

பெண்ணியம் என்பது பெண்களை சமூக, அரசியல் மற்றும் பொருளாதார அளவில் மேம்படுத்தும் கோட்பாடாகும். இதன் வேர்கள், வளர்ந்த, வளர்கின்ற நாடுகளில் வேறுபாடுகளின்றி ஊடுருவியுள்ளதை அறிய முடிகிறது. இவ்வமைப்புகளின் செயல்பாடுகள் சரியானப் பாதையில்

இருக்குமாயின் பெண்களின் மேம்பாடு என்பது எளிதாக அடையக் கூடிய இலக்காகவே இருக்கும்.

## பெண்ணியம் – வரையறைகள்:

'சார்லட் பன்ச்' என்பவர் "பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துக் கொண்டு அவற்றை நீக்கி அதன் மூலம், உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்துவதே பெண்ணியம்" என்கிறார்.

"பெண்ணியம் என்பது உலகையே மாற்றி அமைக்கும் இயக்கம்" என்கிறார் தெரசா ப்ளிஸ்டன்.

ரோசலிண்ட் டெல்மார் என்பவரும், "பெண்களின் நிலையை மாற்றுவதே பெண்ணியம்" என்கிறார்.

"பெண்களின் போராட்டத்திற்குத் துணை நின்று அவர்களின் அடிமைத்தனத்தைக் களைந்தெறிய உதவுவதே பெண்ணியம்" என்கிறார் 'ரே ஸ்டான்கி'.

இவ்வாறு உலகாவிய நிலையில் பெண்ணியம் பற்றி விளக்கம் அளிக்கப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் நோக்கினால் பெண்ணியம் என்பது, பெண்களின் அடிமை நிலையை மாற்ற முற்படும் கோட்பாடு என்பதும், பெண்ணியவாதி என்பவர் பெண்களின் நிலை மாற்றத்திற்காக 'குரல் கொடுப்பவர்' அல்லது 'பாடுபடுபவர்' என்பதும் விளக்கம் பெறுகிறது.

## பெண்ணியம் – விளக்கம்

டாக்டர் சேதுமணியன் என்பவர், "நடைமுறையில் மிகத் தவறாகப் புரிந்துக் கொள்ளப்படுகின்ற கருத்துப் படிவங்களுள் ஒன்று 'பெண்ணுரிமை' ஆகும். பெண்ணுரிமை என்றால் ஏதோ ஆண்களுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்துவது என்றோ, ஆராய்ச்சியே இல்லாமல் மரபுகளை உடைத்துக் கொண்டு புது விதமாக வாழ்வது என்றோ, பெண்கள் தான் உயர்வு என்ற நிலை நாடுவது என்றோ, பெண்கள் மட்டுமே பங்கு பெற வேண்டிய உரிமைப் போர் என்றோ கருதப்படும் போக்கு பரவலாகி வருகிறது. இவற்றுள் எதுவும் பெண்ணுரிமை இல்லை. இவற்றுக்கெல்லாம் அப்பாற்றப்பட்டது அது. மனிதன்

என்ற முழுமையினைப் புரிந்துக் கொள்ளும் போதுதான் பெண்ணுரிமையையும் புரிந்து கொள்ள முடியும் என்கிறார்.

ஆனால் உண்மையாகக் கூற வேண்டுமானால் 'பெண்ணியம்' என்பது விலங்கிலிருந்து வேறுபட்ட பண்பினை உடைய மனிதத்தைச் சார்ந்தது. அந்த மனிதத்துள் 'புரிந்து கொள்ளுதலே' பெண்ணியம் எனலாம். சுருங்கக் கூற வேண்டுமானால் மனிதத் தன்மையோடு நடத்தப்படுதலும் நடந்து கொள்ளுதலே பெண்ணியம் என்று கூறுவது பொருத்தமாக அமையும்.

## பெண்ணிய வரலாறு:

பெண்ணிய வரலாற்றின் முக்கிய நோக்கம் சமூகத்தில் பெண்களுக்குச் சமநீதி, சம உரிமை கிடைக்கப் பாடுபடுவதும், அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல உதவுவதும் ஆகும். 1982-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் டில்லியில் நடந்த யுனெஸ்கோ (UNESCO) கூட்டத்தில் அறிஞர்களும் பெண்ணியவாதிகளும் வரலாற்றின் குறிக்கோள்களைப் பின்வருமாறு குறிப்பிட்டனர்.

- சமுதாயத்தைச் சமநிலைப்படுத்தி முன்னேற வைப்பது.
- ஆண்-பெண் இருவரும் தங்கள் நிலையினை உணர்ந்து ஏற்று ஒருவர்க்கு ஒருவர் உரிய மதிப்பளித்து வாழ்வது.
- பாலின வேறுபாட்டை ஆராய்ந்து அதற்குக் காரணமான சமூக கலாச்சார கண்ணோட்டத்தை ஆராய்வது.
- பெண்கள் மனித உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடுவதாகும்.
- சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் ஏற்படும் முன்னேற்றத்தில் பெண்களை ஈடுபடுத்தி ஆளுமைத் திறன் உள்ளவர்களாக மாற்றுவது.
- வாழ்க்கையின் அடிமட்டத்தில் உள்ள பெண்களை முன்னேறச் செய்து முன்னணியில் நிறுத்துவது ஆகும்.

## இந்தியாவில் பெண்ணியச் சிந்தனை

இந்தியாவில் வெளிநாட்டுத் தொடர்புகளின் மூலம் பெண்ணியக்

கருத்துகள் வெளிப்படத் தொடங்கின. பெண்களின் முன்னேற்றத்திற்கு உகந்தவை என்று கருதியவற்றை சமூகச் சீர்த்திருத்தவாதிகள், சட்டங்களாக வெளிப்படுத்த விரும்பினர்.

மேலை நாடுகளில் தோன்றி வளர்ந்த பெண்ணிய இயக்கங்களுக்கும், இந்தியாவில் தோன்றி வளர்ந்த பெண்ணிய இயக்கங்களுக்கும் சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன. மேலை நாடுகளில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அப்பெண்களே உணர்ந்துக் கொண்டு அவற்றை நீக்கப் போராடினர். இதற்கு முக்கியக் காரணம் அந்த நாட்டுப் பெண்களுக்குக் கிடைத்த கல்வியும், வெளியுலகத் தொடர்புமே ஆகும். ஆனால் இந்தியாவில் பெண்களின் முன்னேற்றத்திற்கு ஆண்களே முன்னின்று முயற்சிகள் எடுத்தனர். இதற்குக் காரணம் இந்தியாவில் முதலில் ஆங்கிலக் கல்வியால் பயன்பெற்றவர்கள் ஆண்களே ஆவர். அக்காலக்கட்டத்தில் பெண்கள் கல்வி அறிவின்றி வெளியுலகத் தொடர்பின்றி அறியாமையில் மூழ்கி, தங்களுக்கு இழைக்கப்படும் தீமைளை உணராமல் அவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்ந்தனர்.

முற்போக்கு எண்ணங்கள் கொண்ட இளைஞர்களும், சமூக மத சீர்திருத்தவாதிகளும் இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பல போராட்டங்களை நடத்தினர். இந்தியாவில் ‘சுதந்திரத்திற்கு முன்பு பெண்ணியம்’, ‘சுதந்திரத்திற்குப் பின்பு பெண்ணியம்’ என்ற இருவேறு கால கட்டங்களில் பெண்ணியவாதிகளின் போக்குகளும் போராட்டங்களும் அமைந்தன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெண்கள் நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் பங்கு பெற்றனர். அவர்களுள் சகோதரி நிவேதிதா, அன்னிபெசண்ட் அம்மையார், சரோஜினி நாயுடு, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார், மூவலூர் ராமாமிர்தம், தேவ. குஞ்சாரி அம்மாள் ஆகியோர் பெண்களின் உரிமைக்காகவும் போராடினர். “இவற்றை விளக்கமாக கூறுவதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை” என்கிறார் முத்துச் சிதம்பரம்.

## சமநிலைச் சமுதாயம்

பெண்ணியவாதிகளின் கருத்துப்படி ஒரு முழுமையான சமநிலை உள்ள

சமுதாயம் அமைய வேண்டுமென்றால் அது கீழ்க்கண்ட கூறுகளை பெற்றிருத்தல் அவசியமாகிறது.

- சமுதாய வளர்ச்சியில் பெண்களின் பங்கு இருக்க வேண்டும்.
- பெண்களுக்கு, தங்களைத் தாங்களே அறியும் திறனும் ஒரு பரந்த சமுதாயக் கண்ணோட்டமும் அவர்களுக்கான குறிக்கோளும் அதனை அடைய போராடும் வழிமுறைகளும் தெரிந்திருக்க வேண்டும்.
- பாலின வேறுபாட்டிற்கான அடிப்படைக் காரணங்களும் அதன் விளைவாக ஏற்படும் பெண் ஒழுக்கச் சிந்தனைகளும் அதனை நீக்குவதற்கான அறிவார்ந்த முயற்சிகளும் நடவடிக்கைகளும் சமூகத்தில் காணப்பட வேண்டும்.
- பெண்ணியம் என்பது பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் என்று அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் பாடத்திட்டமாகவும் ஆராய்ச்சிக்களமாகவும் இருப்பது அவசியமாகிறது.
- பெண்ணியம் என்பது வெறும் கலை, இலக்கிய, சமூக இயலைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் உரியதல்ல. தொழில்நுட்பம், மருத்துவம், அறிவியல் என்று பல்வேறு துறைகளிலும் பெண்ணியக் கோட்பாடுகளும் குறிக்கோள்களும் சேர்க்கப்படவேண்டும் சமூகத்தில் பெண்களின் பங்கும் அவர்களது முன்னேற்றமும் அவசியம் என்பதை கல்வித்துறையினர் உணர்வது அவசியமாகும்.

## இலக்கியங்கள் உணர்த்தும் பெண்ணியம்

தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் பெண்களை ஆண்களுக்குச் சமமான நிலையில் காட்டவில்லை. அவை ஆண்களுக்கு என்று சில இயல்புகளையும், பெண்களுக்கு என்று சில இயல்புகளையும் வரையறுத்துக் காட்டுகின்றன.

வீரம், தலைமை தாங்குதல், போரிடுதல், பொருளீட்டுதல் போன்ற குணங்கள் ஆண்களுக்கு உரியவை என்றும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, காதல், இல்லறம், மக்களைப் பேணுதல் போன்ற குணங்கள் பெண்களுக்குரியவை என்றும் இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆண்களும் பெண்களும் இவற்றுடன் வாழ்வதே அவர்களுக்கு அழகு என்று வலியுறுத்துகின்றன.

வரலாற்று அடிப்படையில் பெண்களின் சமூக நிலையை நோக்கும் பொழுது சமுதாயத்தின் ஆரம்ப காலக்கட்டங்களில் அவர்களின் நிலை மேம்பட்டே இருந்தது. தொடக்கத்தில், தாய் வழிச் சமூகம் பின்பற்றப்பட்டதே பெண்ணுக்கு சமூகத்தில் இருந்த முக்கியத்துவத்தைக் காட்டும். ஆனால் சங்க இலக்கியங்களும், அதன் பின்னர் தோன்றிய காப்பியங்களும் பெண்களின் கற்புத்திறத்தை வலியுறுத்தி, கற்பை பெண்கள் தனிப்பெருங்குணமாக போற்றிக் கடைப்பிடிக்க வேண்டும் என்றன. அதற்கு மாறாக ஆண்கள் எத்தனை பெண்களோடும் உறவு கொள்ளலாம் என்றும், தனித்த உரிமை பெற்று பரத்தையர் தொடர்பு வைத்திருப்பது கூட அவர்களுக்கு பெருமை அளிக்கும் செயலாகவும் கருதப்பட்டது.

அகநூல்களில் காணப்படும் களவொழுக்கம், அக்காலச் சமூகம் பெண்களுக்குத் தங்கள் கணவனை தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கியுள்ளது என்பதை எடுத்துரைக்கின்றது. பெண்கள் தங்கள் விருப்பத்திற்குப் பெற்றோர் உடன்படவில்லை எனில், தாங்கள் விரும்பிய ஆண்மகனுடன் உடன்போக்கு மேற்கொண்டு தங்கள் உரிமையை நிலைநாட்டினர். இதைப்போலவே புற இலக்கியங்கள், பெண்கள் வீரத்திலும் சிறந்து விளங்கினர் என்பதற்குப் பல சான்றுகளை தருகின்றன. ஆயினும் ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்ற சமூக நீதி முறையும் ஆண் உயர்ந்தவன், பெண் தாழ்ந்தவள் என்ற கருத்தும் சங்க காலம் முதலே சமுதாயத்தில் காணப்படுகின்றன.

நீதி நூல்கள் ஆண்-பெண் ஏற்றத் தாழ்வுகளை வலுப்படுத்துவது மட்டுமின்றி பெண்கள் தீய குணங்கள் நிறைந்தவர்கள் என்றும் ஆண்களால் அடக்கி ஆளப்பட வேண்டியவர்கள் என்றும் வலியுறுத்துகின்றன. இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் ஆண்களை ஒருவகையாகவும் பெண்களை ஒரு வகையாகவும் பார்ப்பதைக் காணமுடிகிறது.

**பெண்ணியம் உணர்த்திய பாரதி**

இருபதாம் நூற்றாண்டு மகாகவி பாரதி மனித இனத்தின் நேர் பாதியாக

உள்ள பெண்ணினம் ஆணினத்திற்கு அடிமைப்பட்டுக் கிடப்பதை பொறுத்துக்கொள்ள முடியாமல், சமுதாயத்தின் நிலையான இன்ப வாழ்விற்கு பெண் விடுதலை இன்றியமையாதது என்பதை உணர்ந்ததால், பெண்கள் வீட்டோடு அடங்கி கிடக்கின்ற நிலையினை ஒழித்தல் வேண்டும் என ஓங்கி குரல் கொடுத்தார்.

“பாரத தேசம் ஓங்க உழைத்திட வேண்டுமாம் விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்” என்று பாரத தேசம் வளர்ச்சிபெற பெண்கள் வீட்டில் அடங்கி கிடைக்காமல் நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பெண்களுக்கு எதிரான மூடக்கட்டுகளை அடியோடு அழிக்க எண்ணிய பாரதி,

“மாதர் தம்மை இழிவு செய்யும்

மடமையைக் கொளுத்துவோம்” என்று சூளுரைத்தார்.

புதுமைப்பெண் கவி மூலம் பெண்கள் பெற்றிருக்க வேண்டிய குணங்களையும், அவர்கள் செய்ய வேண்டிய செயல்களையும், செவ்வனே கோடிட்டுக் காட்டிய பெண்ணின போராளி பாரதி, பெண்கள் “சரித்திரம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச் சாதிபடைக்கவும் செய்திடுவோம்” என்று பெண்மையின் ஆளுமையை தமிழ்ச்சமூக ஏட்டில் அழுத்திப் பதிவு செய்தார்.

“நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்

ஞான நல்லறம் வீர சுதந்திரம்

பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்”

பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ” என்று பெண் சக்தி தனக்காக தேவைகளை தானே பேசுவதாக பாடி தான் ஒரு ‘பெண்ணியவாதி' என்பதை பல இடங்களில் பறைசாற்றி உள்ளார். பெண்மையின் பெரிய ஆயுதம் அவளின் கற்புத் திறத்தை காத்தலே என்ற கட்டை உடைத்து,

“கற்புநிலை யென்று சொல்லவந்தால் – அதை

இருகட்சிக்கும் பொதுவில் வைப்போம்”

என்று பாடி ஆண் – பெண் இருவரும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய

ஒழுக்கம் ‘கற்பு’ என்கிறார். பழஞ்சமுதாயத்தில் மண்டிக் கிடந்த மூடக் கருத்துகளைச் சிதைக்க வந்த சமுதாய சீர்த்திருத்தவாதி தந்தை பெரியாரும், பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதி, “ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவாகும்” என்று ஆணித்தரமாக உரைத்தார்.

## பெண்ணியக் கவிதைகள்

பாரதியாரைப் போல் பாரதிதாசன், வேதநாயகம் பிள்ளை, மாதவையா, திரு.வி.க., போன்றோரும் பெண்ணுக்கான படைப்புகளை வெளியிட்டனர். இதன் விளைவாக இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சி.சு. செல்லப்பாவின் ‘எழுத்து’ இதழ் மூலம் அறிமுகமான இரா.மீனாட்சியும் ‘வானம்பாடி’ இதழ் மூலம் தெரியவந்த ரோகிணி மற்றும் திரிசடையும் பின்காலனித்துவச் சமூகம் வழங்கிய பெண்விடுதலை உணர்வுகளை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளனர் என்றாலும், தொண்ணூறுகளுக்குப் பிறகுதான் நூற்றுக்கணக்கான பெண் கவிஞர்கள் பெண்ணியம் சார்ந்த கவிதைத் தொகுப்புகளை வெளியிட முன்னெடுத்தனர். அத்தோடு மட்டுமல்லாமல், மரபார்ந்த பழைய பெண் குறித்த மதிப்பீடுகளைச் சிதைத்துப் புதிய கலகக் குரலோடு கூடிய பெண்ணியக் கவிதைகளைப் படைக்கவும் முன் வந்துள்ளனர் என்பது வரவேற்கத்தக்கது.

இக்காலக் கட்டத்தில் தோன்றியுள்ள இப்புதிய பெண்ணியக் கவிதைகளை விளக்குவதற்கு வகைப்படுத்துதல் அடிப்படைத் தேவையாகும். எனவே கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தி விளக்குவதற்கு முயலலாம்.

1. நான் – நீ என்று ஆண்களை முன்னிலையாகக் கொண்டு பாலின இருமைநிலையில் புனையப்பட்ட கவிதைகள்
2. இருமை நிலையைக் கடந்து பெண்ணின் பார்வையில் எழுதப்பட்ட கவிதைகள்
3. தீவிரவாதப் பெண்ணியம் அடிப்படையில் உடலை எழுதுதல் என்ற முறையில் எழுதப்பட்ட கவிதைகள்
4. மரபு மீறிய பாலியல் உணர்வுகளை, அதாவது சுயபாலியல், ஒருபால்

பாலியல் முதலியவற்றையும் கவிதையாகப் படைத்தல்

இத்தகைய புதிய பெண்ணியக் கவிதைகள் ஐரோப்பிய மற்றும் அமெரிக்கப் பெண்ணியல் கோட்பாடுகளின் செல்வாக்கில் பெரும்பாலும் எழுதப்பட்டாலும் மூடிய தமிழ்ச் சமூக அமைப்பிலும் அத்தகைய கவிதைகள் பிறப்பதற்கான வாழ்வாதாரங்கள் அறவே இல்லை என்று சொல்லிவிட முடியாது.

## முடிவுரை

பெண்ணியம் பற்றிய கருத்தியல் தன் அக முரண்பாடுகளால் இன்னமும் சமூகம், அரசியல், பொருளாதார வாழ்க்கை சார்ந்த குறியியலில் பெரும் பாத்திரம் வகிக்கிறது. குறியியலாளரும் மொழியியலாளருமாகிய ‘பாப் ஓட்கின்’ கண்ணோட்டத்தின்படி கருத்தியல் என்பது சமூக முகமைகளும் நிகழ்வுகளும் சார்ந்த சில சிக்கலான பொருண்மைக் கணங்கள் வாய்ந்த ஒற்றை நோக்கத்தை காண்கிறது. எனவே பெண்ணியம் என்பது உலகைப் புரிந்து கொள்ளவும் சூழலில் நிலவும் பெண்களுக்கு எதிரான அச்சுறுத்தலை தவிர்க்கவும் மதிப்பு வாய்ந்த தனியர் நடுவில் அமையும் உறவுகளை செழுமைப்படுத்தவும் பெண்களுக்கு உதவும் கருத்தியலாக இருக்க வேண்டும் என்பதே பெண்ணியம் பேசும் அமைப்புகளின் உலகப்பார்வை ஆகும். அத்தகைய பெண்ணியம், வளர்ந்த விதத்தையும், அதற்காக உழைத்த பெருமக்களின் போராட்டங்களையும் ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்தது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள், அச்சுறுத்தப்பெற்று, அறிவுக்கு விலங்கு பூட்டப்பெற்று, மூடநம்பிக்கைகளில் அமிழ்த்தப்பெற்று, சமயச் சடங்குகளிலும், சாத்திர சம்பிரதாய வழக்குகளிலும் சிக்க வைக்கப்பட்டுள்ள பெண்களை, அவற்றிலிருந்து முற்றாக விடுவிப்பதற்கான செயல்பாட்டைக் கூட்டாக மேற்கொள்ளும் பெண்ணிய முயற்சிகளை எடுத்தியம்பும் வகையில் அமையப்பெற்ற இக்கட்டுரை பெண் சமுதாயத்தின் விரும்பத்தக்க உள்ளீடுகளைப் பதிவு செய்துள்ளது.

## மேற்கோள்கள்

கண்ணப்பன், கு., (2007) பாரதியும் பெண்மையும், முதற்பதிப்பு, முத்தமிழ் பதிப்பகம், சென்னை.

வீரமணி, கே., (1992) பெண்ணுரிமைக் குறித்து பெரியார், எமரால்டு பதிப்பகம்,

சென்னை.

முத்துச் சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்சிசியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

இராஜம் கிருஷ்ணன், (2006) இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, நான்காம் பதிப்பு, தாகம் பதிப்பகம், சென்னை.

பிரபாவதி, எஸ்., மகளிரும் பாலினக் கூறாய்வும், மந்த்ராலயம் பப்ளிகேஷன்ஸ், சென்னை.

பாரதியார், (1996) பாரதியார் கவிதைகள், முதற்பதிப்பு, ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை.

பிரேமா, இரா., (2001) பெண் – மரபிலும் இலக்கியத்திலும், முதற்பதிப்பு தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

பிரேமா, இரா., (1994) பெண்ணியம், முதற்பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

# மொய்விருந்து பண்பாடும் ஆண் இயங்கியலும்

# Moivirunthu Culture and Male Dialectics

**பா.தென்றல்** [அ, *]

[அ] அழகப்பா திறன்மேம்பாட்டு நிறுவனம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-6300003, தமிழ்நாடு, இந்தியா.

**P. Thendral** [a, *]

[a] Alagappa Institute of Skill Development, Alagappa University, Karaikudi-630003, Tamil Nadu, India.

Email: thendralkumar2711@gmail.com

DOI: https://doi.org/10.34256/fem14

**Abstract :**

From ancient times to the present day, the Tamil society has been functioning in what can be called a male society. Literature also records the Tamil community as a male-dominated society. Here men are the law-makers and guides. The woman is considered a slave. Today's family system emphasizes the same thing. Woman is considered secondary in family ceremonies as well. Responsibilities related to finance and decision making all depend on men and women as do the work they claim. In Silappathikaram, the host can also see the lost eye. A woman without a man is incapable of confronting even a guest. Masculinity is also highlighted in the banquet culture. This situation continues to this day, as can be seen in the culture of the moi party in the Pudukottai and Thanjavur districts of Tamil Nadu. The culture of feasting in these areas is a little different. This article describes the decision-making, invitation, banquet, notebook writing for the banquet, and the full presence of male dialectics in the banquet culture.

**Keywords:** Moivirundu, Moi, feast, Moikkurippu, Moikkurippedu, Male dialect, Moivirunthu culture.

## முன்னுரை:

காலந்தோரும் பாலின சமத்துவமின்மையை இலக்கியங்களிலும் வாழ்வியல் நடைமுறைகளிலும் காணமுடிகிறது. ஆண்இயங்கியல் தமிழ் பண்பாட்டின் அனைத்து நிலைகளிலும் உள்ளன. தமிழ்நாட்டில் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டப்பகுதிகளில் மொய்விருந்து எனும் புதுப்பண்பாடு உருப்பெற்றுள்ளது. இது விருந்தோம்பல் பண்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். அம்மொய்விருந்து பண்பாட்டில் ஆண்இயங்கியல் தலையோங்கி உள்ளமை பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.




## மொய்விருந்து பண்பாடு

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது கணியன்பூங்குன்றனார் வாக்காகும். இம்மொய்விருந்து எனும் புதுப்பண்பாடும் அனைவரையும் உறவாகக் கருதுகிறது. ஏனெனில் மொய்விருந்திற்கு உறவுகள், நண்பர்கள் மட்டுமன்றி நொதுமலர்களும் அழைக்கப்படுகின்றனர். கலித்தொகை, 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்று பண்பாடு என்பதற்கு விளக்கம் தருகிறது. மக்கள் தொடர்ந்து கடைபிடித்து வரும் சில பழக்கவழக்கங்கள் பண்பாடாக மாற்றம் பெறுகின்றன. அவ்வகையில் இம்மொய்விருந்தும் புதுப்பண்பாடாகும்.

மொய்விருந்து என்பது திருமணவிழா, காதணிவிழா, பிறந்தநாள்விழா, புதுமனைபுகுவிழா போன்று இல்லத்தில் நடைபெறும் ஒரு விழா ஆகும். இம்மொய்விருந்து விழா முழுவதும் பொருளாதாரத் தேவையினை அடிப்படையாகக் கொண்டது. திருமணம் போன்ற நிகழ்வுகள் தனது மகிழ்வை பிறரோடு பகிர்வதாய் இருக்கும். ஆனால் இம்மொய்விருந்து விழா துன்பத்தைப் பகிர்வதாய் அமைகிறது. தனக்கு ஏற்பட்ட பொருளாதார நலிவை பிறரின் உதவி மூலம் சரிசெய்வது ஆகும். இம்மொய்விருந்து பண்பாடு ஆண்இயங்கியல் சார்ந்ததாக அமைகிறது.

## மொய்- சொற்பொருள் விளக்கம்

மொய் என்பதற்கு "நெருக்கம், கூட்டம், தாய், பெருமை, போர், போர்க்களம், மகமை, மொய்த்தல், மொய்யென்னேவல், யானை, வண்டு, இறுகுகை, பகை, விவாக நன்கொடைப் பணம்"(ப.797) என்று கழகத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி "சுற்றிச்சூழ்தல் அல்லது சூழ்ந்திருத்தல், பரிசாக அளிக்கப்படும் பணம்"(ப.1171) என்று பொருள் கூறுகிறது. இலக்கியங்களில் பல பொருண்மைகளில் இச்சொல் எடுத்தாளப்பட்டுள்ளது.

### நெருக்கம்

மணிமேகலை, கார்நாற்பது நூல்களில்,

**'மொய்கொள் மாக்கள் மொசிக்க ஊண் சுரந்தனள்'(மணி.19-136)**

**'முல்லைக் கொடி மகிழ மொய் குழலார் உள் மகிழ'(கார்நாற்பது)**

என்று மொய் எனும் சொல் நெருக்கம் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### கூட்டம்

சங்க இலக்கியங்களில் மொய் எனும் சொல் கூட்டம் எனும் பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளன.

**"மின்மினி மொய்த்த முரவு வாய் புற்றம்" (அகம்.72-3)**

மின்மினிகள் கூட்டமாகச் சூழ்ந்திருக்கும் புற்று என்பது இப்பாடலின் பொருளாகும். மொய் எனும் சொல் மின்மினிகள் கூட்டத்தைக் குறித்தமை தெளிவாகிறது. மேலும்,

**"மொய் செருக்களம் போர் யானை மூசல் வண்டொடு திரட்பேர்". (சூடா.156-6)**

என்று சூடாமணி நிகண்டு, மொய் எனும் சொல் திரள் பெயரைக் குறிப்பதாகச் சுட்டுகிறது.

### இறுகுகை

பரத்தையரின் இறுகல் மிகுந்த முயக்கம் பற்றி பரிபாடல்,

**"மொய்வளம் பூத்த முயக்கம்யாம் கைப்படுத்தேம்"(பரிபாடல்.18-18)**

என்று எடுத்தியம்புகிறது. இங்கு மொய் எனும் சொல் இறுகுகை எனும் பொருளில் இடம்பெற்றுள்ளது.

**பெருமை**

மொய் எனும் சொல் பெருமை எனும் பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளமையை,

**''மொய் சிதைக்கும் மொற்றுமை இன்மை ஒருவனை'' (நான்மணி.21)**

எனும் நான்மணிக்கடிகையின் அடிகள் மூலம் உணர இயலும்.

**வலிமை**

மோகூர் மன்னனின் வலிமையை மொய் எனும் சொல் குறித்து நின்றமையை,

**''மொய் வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்''(பதிற்றுப்.49-8)**

எனும் அடி விளக்குகிறது.

**போர்**

புறப்பொருள்வெண்பாமாலையில்,

**''மொய் தாங்கிய முழுவலித் தோள்''(புறப்பொருள்.8-28)**

எனும் இவ்வடியில் போர் எனும் பொருள் தருவதாக மொய் எனும் சொல் உள்ளது.

**போர்க்களம்**

பிங்கல நிகண்டில் அவனிவகை என்ற பகுதியில்,

**''மடுகளஞ் செங்கள மமர்க்கள மொய்யே**

**படுகளம் யுத்தம் பண்ணுங் களமே'' (பிங்கல நிகண்டு. 622)**

என்று போர்களத்திற்குரிய சொல்லாக மொய் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**பகை**

புறப்பொருள் வெண்பாமாலை, ''மொய்யிரிய''(புற.வெ.3-5) என்று பகை என்ற பொருளில் மொய் என்ற சொல்லை எடுத்தாண்டுள்ளதாக தமிழ் லெக்சிகன் அகராதி கூறுகிறது.

**மிகுதி**

அகநானுற்றில் மிகுதி எனும் பொருளில் மொய் எனும் சொல்,

**"மொய் வலி அறுத்த ஞான்றை" (அகம்.246-13)**

எனும் அடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்காலத்தில் மொய்த்தல், கூட்டமாகக் கூடுதல் எனும் பொருண்மையில் மொய் எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பான்மை திருமணம் போன்ற விழாக்களில் நன்கொடையாகக் கொடுக்கப்படும் பணம் எனும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

## விருந்து- சொற்பொருள் விளக்கம்

விருந்து என்பதற்கு விருந்தினர், விருந்தினருக்கு வழங்கும் சிறப்பான உணவு, புதுமை என்ற பொருள்களைக் கூற இயலும். "புதுமை, உணவளித்துப் போற்றுதல், விருந்துண்போன்"(ப.858) என்று கழகத் தமிழ் அகராதி விருந்திற்கு பொருள் கூறுகிறது. இலக்கியங்களில் பல பொருண்மைகளில் இச்சொல் எடுத்தாளப்பட்டுள்ளது.

**விருந்தினர்**

குறுந்தொகையில்,

**"விருந்து வர கரைந்த காக்கையது பலியே"- (குறு.210-6)**

என்ற இவ்வடியில் உள்ள விருந்து என்ற சொல் விருந்தினர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது தெளிவாகிறது.

**புதுமை**

**''விருந்தே தானும்**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே'' (தொல்.1495)**

என்பது தொல்காப்பிய நூற்பா ஆகும். விருந்து என்பது புதியது என்ற பொருளைத் தரக்கூடிய சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**விருந்து உணவு**

"விருந்து எவன் செய்கோ தோழி சாரல்" (நற்.112)

இந்நற்றிணை அடி உணவினைக் குறிக்க விருந்து எனும் சொல்லைப் பயன்படுத்தியமை தெளிவாகிறது.

**மன மகிழ்வு**

மனமகிழ்வு எனும் பொருண்மையில்,

"நேர் இறை பணை தோட்கு ஆர் விருந்து ஆக" (ஐங்.468)

என்ற ஐங்குறுநூற்று அடி உள்ளது. இக்காலத்தில் விருந்து எனும் சொல் பலவகை உணவுகளைப் படைத்தல் எனும் பொருளில் பயன்படுகிறது.

## ஆண் இயங்கியல்

தொல்காப்பியம் ஆணின் இயல்புகளைக் கூறுமிடத்து,

**"பெருமையும் உரனும் ஆடூஉ மேன" (தொல்.பொருள்-95)**

என்றும், பெண்ணின் இயல்புகளைக் கூறுமிடத்து,

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**

**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" (தொல்.பொருள்.96)**

என்றும் வலியுறுத்துகிறது. தொல்காப்பியர் ஓர் ஆண் என்பதனாலும் அன்றைய சமுதாயநிலையை உள்வாங்கியமையாலும் இத்தகைய கருத்துக்களை முன்வைத்திருக்கக்கூடும். பாரதியார் கற்பை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைக்க கூறியது போல் அனைத்து நிலைகளையும் பொதுவில் வைப்பதே நலமாகும். தொல்காப்பியம் தொடங்கி இன்றைய இலக்கியங்கள் வரை பாலின சமத்துவமின்மையை, ஆணை முன்வைத்த இயங்கியலை காணமுடிகின்றது. இளையான்குடி மாறநாயனார் புராணத்தில் விருந்து எதிர்கொண்ட நாயனாரின் பெருமை பேசப்பட்டதன்றி அவரது மனைவி பற்றிய பெருமை ஏதும் குறிப்பிடப்படவில்லை. இலக்கியங்களில் மட்டுமல்லாது நடைமுறை வாழ்வியலிலும் இப்பாலின சமத்துவமின்மையை காணமுடிகிறது. அதற்கு இம்மொய்விருந்து பண்பாடும் சிறந்த சான்றாக அமைகிறது.

## மொய்விருந்து

உறவுகள் நண்பர்கள் என அனைவரையும் அழைத்து அவர்களுக்கு விருந்து வழங்குவர். பின்னர் உணவு உண்டபின் தங்கள் தகுதிக்கேற்ற பணத்தை மொய்யாக விருந்துக்கு அழைத்தவருக்கு வழங்குவர். இது மொய்விருந்து என அழைக்கப்படுகிறது. இதில் உணவு உண்டல், மொய் எழுதுதல் தவிர வேறெந்த சடங்குமுறைகளும் விழாவில் இடம் பெறுவதில்லை.

## மொய்விருந்திற்கான முடிவெடுத்தல்

தஞ்சை,புதுகை மாவட்டத்தில் ஒருசில வகுப்பினர் ஓர் ஆண்டில் மொய்விருந்து வைப்பதற்கான நாட்களை முன்னரே தீர்மானிப்பர். அதனை ஆண்டுமலராகவும் வெளியிடுவர். அவ்வாண்டுமலரில் ஊர், பெயர், விழாவின் தன்மை, முன்னர் விழா நடந்த நாள், தற்போது விழா நடக்கவிருக்கும் நாள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும். இந்நிகழ்வுகளில் பெண்ணின் பங்கென்பது ஏதுமில்லை.




ஆண்டுமலர் மாதிரி வடிவம்

## விருந்துக்கு அழைத்தல்

மொய்விருந்துக்கு மக்களை அழைக்க அழைப்பிதழ் அச்சடிக்கப்படுகிறது. தஞ்சை, புதுக்கோட்டை மாவட்ட அழைப்பிதழ்கள் 'மொய்விருந்து விழா அழைப்பிதழ்' எனும் தலைப்போடு தொடங்கும். பின்னர் மொய் விருந்து நடைபெறும் நாளும் இடமும் குறிக்கப்பட்டிருக்கும். பின்னர் அழைப்பவரின் பெயர் இடம் பெற்றிருக்கும். தற்போது மொய்விருந்துக்கு அழைப்பவரின் புகைப்படமும் இணைந்துள்ளது. ஆணை மையமிட்ட இவ்விழாவில் பெண்களின் புகைப்படம் இடம்பெறுவதில்லை.



## மொய் குறிப்பு

ஒவ்வொரு அழைப்பிதழிலும் மொய்குறிப்பு இடம் பெற்றிருக்கும். மொய்குறிப்பு என்பதில் முன் விழா (தேவை என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்துகின்றனர்) நடைபெற்ற காலம், அவரது பெயர் மற்றும் இடம் குறிப்பிடப்பட்டிருக்கும். 'என்னால் சிலருக்கு 2,3 முறை மொய் செய்யப்பட்டுள்ளது' என்ற குறிப்பும் இடம் பெற்றிருக்கும். சில நேரங்களில் மொய்விருந்தாளரின் அப்பா பெயரும் அவரது பெயரில் செய்யப்பட்ட மொய்யும் வாங்கப்படும் எனும் குறிப்பும் இடம்பெறும். இதனை மொய் குறிப்பு என்பர். இம்மொய் குறிப்பில் கணவனை இழந்த பெண்களின் பெயர் இடம்பெற்றிருக்கும். மற்ற பெண்களின் பெயர் இம்மொய்குறிப்பில் இடம்பெறுவதில்லை.

## மொய்விருந்து அழைப்பிதழ்

மொய்விருந்தில் ஒருவர் ஓர் அழைப்பிதழ் அச்சடித்தல் என்ற முறைமாறி தற்போது பலர் இணைந்து ஓர் அழைப்பிதழை அச்சடித்தல் என்ற நிலை உருவாகியுள்ளது. இவ்வழைப்பிதழில் உறவினர்களின் பெயர்கள் அதிகம் இடம்பெறுவதில்லை. பெண்கள் பெயர்கள் இடம்பெறுவதே இல்லை. விருந்தாளரின் பெயர் மற்றும் அவரது அப்பா பெயர் மொய்க்குறிப்பில் இடம்பெறும். தற்காலத்தில் துணைவியின் பெயரும் அம்மாவின் பெயரும் அழைப்பிதழின் கீழ்ப்பகுதில் இடம்பெறுகின்றன.




## விருந்து பண்பாடு

இவ்விருந்து பண்பாடு வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத புதுவிதப் பண்பாடாகும். மேலும் அவர்கள் உணவு வழங்கும் முறையும் புதுமையானது ஆகும். இங்கு உணவு வழங்கும் முறையை இருவகையாகப் பகுக்க இயலும். அவை,

1.வேண்டிய அளவு உணவு வழங்கல் முறை

2.அளவோடு உணவு வழங்கல் முறை

வேண்டிய அளவு உணவு வழங்கல் முறையில் விருந்துக்கு வருபவருக்கு தேவையான அளவு அல்லது அவர் கேட்கும் அளவு உணவு வழங்கப்படும்.

ஆனால் இரண்டாவது முறையான அளவோடு உணவு வழங்கல் முறையில் ஒரு நபருக்கு அளவுமுறையில் ஊண் வழங்கப்படும். உணவகங்களில் உள்ள அளவுசாப்பாடு முறை போன்றது. இதனை 'இலை கணக்கு' என்பர். உணவு வழங்கப்பட்டதற்கான எண்ணிக்கை இதன்மூலம் கணக்கிடப்படும்.

ஒருவர் மட்டும் நடத்தும் மொய்விருந்தில் உணவிற்கான முழுச்செலவும் அவரை மட்டுமே சார்ந்தது. பலர் இணைந்து மொய்விருந்து வைத்தால் உணவிற்கான செலவை அவரவர் அச்சடித்த அழைப்பிதழ்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்துகொள்வர். மேலே குறிப்பிட்ட இலை கணக்கினையும் பின்பற்றுவர்.

மொய்விருந்திற்கு வருபவர்கள் பெரும்பான்மை ஆண்களாக இருப்பர். இது ஓர் ஆண்விழா என்று கருதும்படியாகவே விழா நிகழ்விடம் திகழும். ஏனெனில் 75% ஆண்களும் 25% பெண்களும் இவ்விழாவில் கலந்துகொள்வர்.

இப்பெண்களும் ஆண்கள் வரஇயலாத குடும்பத்தைச் சார்ந்த பெண்களாக இருப்பர். விருந்திற்கு வரும் ஆண்களை மாலை அணிவித்து வரவேற்பது வழக்கமாக உள்ளதால் வரவேற்பு பகுதியில் நிற்பவர்களும் பெரும்பான்மை ஆண்களாக இருப்பர்.

## மொய்க்குறிப்பேடு

இம்மொய்விருந்து பண்பாட்டில் மொய்குறிப்பேடு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஏனெனில் அடுத்த மொய்விருந்து நடைபெறும் வரை இந்தக் குறிப்பேட்டைப் பாதுகாத்து வைப்பர். பிறரது மொய்விருந்து அல்லது மற்றைய விழாக்களில் பங்கேற்கச் செல்லுமுன் இந்த மொய்குறிப்பேட்டில் உள்ள அவர்கள் செய்த மொய்யைக் குறித்துக் கொண்டே செல்வர். ஏனெனில் அவர்கள் எழுதியதை விட அதிகம் எழுத வேண்டிய கட்டாயம் உள்ளது.

மொய்க்குறிப்பேட்டின் முதல் பக்கத்தில் அவரின் பெயர், மொய் விருந்து நடைபெற்ற இடம், நாள் போன்றவை குறிப்பிடப்பட்டிருக்கும். மொய்விருந்தில் ஒருவருக்கே இரண்டுக்கு மேற்பட்ட குறிப்பேடுகளைப் பயன்படுத்துவர். ஏனெனில் ஊர்வாரியாகப் பிரித்து எழுதுவர். அதனால் குறிப்பேடுகள் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும். தற்காலத்தில் மொய் எழுதுவதற்கு கணினி முறையும் பின்பற்றப்படுகிறது.

## மொய்க்குறிப்பேடு எழுதுவோர்

மொய்க்குறிப்பேட்டை எழுதுவதற்கென்றே ஊதியம் கொடுத்து ஆட்களை நியமிப்பதும் உண்டு. உறவினர்களில் நம்பிக்கையானவர்களைக் கொண்டும் எழுதுவதுண்டு. மொய்க்குறிப்பேடு எழுதுபவர் ஒவ்வொருவருக்கும் பணத்தைக் கணக்கிட உதவியாளர் ஒருவரும் இருப்பார். மொய்க்குறிப்பேட்டை எழுதுபவரோ அல்லது உதவியாளரோ ஒரு பெண்ணாக இருப்பதில்லை. மொய்க்குறிப்பேட்டை எழுதுதல் முழுமையும் ஆண்இயங்கியலைச் சார்ந்த்தாகும்.

மொய்க்குறிப்பேட்டை எழுதுபவர் இருக்கும் இடத்தில் இவர்கள் எந்த ஊர் மொய் எழுதுகிறார்கள் என்பதை அடையாளப்படுத்த அந்த ஊரின் பெயர் பொறிக்கப்பட்ட பதாகை இவர்களின் பின்னால் இருக்கும். அந்தப் பதாகையில் மொய்விருந்து வைத்தவரின் பெயரும் புகைப்படமும் இடம் பெற்றிருக்கும். இதிலும் பெண்ணின் புகைப்படம் இடம்பெறுவதில்லை. பலர் இணைந்து மொய் விருந்து வைக்கும் போது பெயர் மற்றும் ஊர்பெயர் பதாகைகள் யார், யாருக்கு மொய் செய்ய வேண்டும் என்பதை விளக்குவதாக அமைகின்றன.

**மொய் எழுதும் முறை**

பொதுவாக மொய்க்குறிப்பேட்டில் ஊர், பெயர் மற்றும் மொய்பணம் ஆகிய குறிப்புகள் இடம்பெற்றிருக்கும். ஆனால் இந்தப்பகுதி மொய்க்குறிப்பேட்டில் ஊர், பெயர், மொய்பணம் என்ற குறிப்புகளோடு புது மொய், பழையமொய் என்ற குறிப்புகளும் இடம்பெறும். பழைய மொய் என்பது முன்பு செய்த மொய்யாகவும், புதுமொய் என்பது இப்போது அவர் செய்யும் மொய்யாகவும் இருக்கும். அஃதாவது அவர் செய்த மொய் போல் ஒரு மடங்கு கூடுதலாக எழுத வேண்டும். புதிதாக எழுதுபவர் புதுநடை என்று மட்டும் எழுதுவர்.

கணவனை இழந்த பெண்கள் மற்றும் மிகுந்த பொருளாதாரநலிவில் உள்ளோர் புதுமொய் எழுதுவதில்லை. அவ்வாறான நிகழ்வுகளில் உறவு முறிந்துவிட்டதாகவே கணக்கிடப்படுகிறது. இதனை

**” அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**

**இவ்வுலகம் இல்லாகி யாங்கு” (திருக்குறள்.247)**

என்ற குறளோடு ஒப்பிட இயலும்.

**மொய்யினைக் கணக்கிடல்**

மொய்விருந்தாளர் புதிதாக வந்த மொய்குறிப்பேட்டை தான்மொய் செய்த விவரங்களோடு ஒப்பிட்டு பார்ப்பார். மொய் செய்யப்படவில்லை எனில் மொய்செய்யாதவரின் இல்லத்திற்கு உணவைக் கொடுத்தனுப்பி பணத்தைக் கேட்கும் மரபு வழக்கத்தில் உள்ளது.

தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் நிகழும் இம்மொய்விருந்து பண்பாடு பொருளாதாரத் தேவையை அடிப்படையாகக் கொண்டதெனினும் சிலநேரங்களில் மொய் செய்ய இயலாது, பல குடும்பங்கள் நலிவுற்று உள்ளன. குறிப்பாக ஆண்தலைமை இல்லாத குடும்பங்கள் மிகுந்த இன்னல்களுக்கு உள்ளாகின்றன. மேலும் மொய்விருந்தின் தொடக்கம் முதல் இறுதி வரை ஆண் அதிகாரப்பரவலை, ஆண்இயங்கியலை எங்கனும் காணமுடிகிறது. தமிழரின் தலைசிறந்த பண்பாடான விருந்தோம்பல் இப்பகுதி மக்களிடையே தலைகீழ் மாற்றத்தைக் கண்டுள்ளன. திருவள்ளுவர் கூறும் விருந்தோம்பல் பண்பை எங்கனும் காணஇயலவில்லை. இப்பகுதி மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், சொல்லாட்சிகள் மாறுபட்டுள்ளமையின் அவை குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள இடமுண்டு. மதுரை மாவட்டத்தில்

இவ்மொய்விருந்து ‘இல்ல விழா’ என்ற பெயரில் நடைபெறுகிறது. அவற்றைக் குறித்தும் மேலாய்வுகள் செய்தல் வேண்டும்.

**தகவலாளர்கள் பெயர் பட்டியல்**

| வ. எண் | பெயர் | பாலினம் | வயது | ஊர் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. | கணேஷ்குமார்.ச முனைவர். | ஆண் | 40 | பேராவூரணி | தஞ்சாவூர் |
| 2. | சின்னக்கருப்பன்.க | ஆண் | 70 | பனங்குளம் | தஞ்சாவூர் |
| 3. | திலகவதி.ச | பெண் | 38 | அறந்தாங்கி | புதுக்கோட்டை |
| 4. | மாரியம்மாள்.செ | பெண் | 65 | அமரசிம்மேந்திர புரம் | புதுக்கோட்டை |
| 5. | மாலதி.அ | பெண் | 43 | மும்மாக்காடு | தஞ்சாவூர் |

**மேற்கோள்கள்**

அகராதி குழு, (1992), க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா, சென்னை-600041 தமிழ்நாடு, இந்தியா.

கழகப் புலவர் குழுவினர், (2010), கழகத் தமிழ் அகராதி, கழகவெளியீடு, சென்னை-600018, தமிழ்நாடு, இந்தியா.

கழகப் புலவர் குழுவினர், (1953), ஐந்திலக்கணம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-600001, தமிழ்நாடு, இந்தியா.

சுப்பிரமணியன், ச.வே., (2008), தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்-608001, தமிழ்நாடு, இந்தியா.

சுப்பிரமணியன், ச.வே., (2003), தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600108, தமிழ்நாடு, இந்தியா.

சுப்பிரமணியன், ச.வே., (2008), தமிழ் செவ்வியல் நூல்கள், மணிவாசகர் பதிப்பகம்,

சென்னை-600108, தமிழ்நாடு, இந்தியா.

தமிழண்ணல், (2008), தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-625001, தமிழ்நாடு, இந்தியா.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், (2007), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-600017, தமிழ்நாடு, இந்தியா.

# சங்க இலக்கியங்களில் பெண்பாலினம்

# Female Gender in Sangam Literature

**ம. செல்வ ரோசரி புஷ்பா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, குருநானக் கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை -600042, இந்தியா.

**M. Selva Rosary Pushpa [a, *]**

[a] Department of Tamil, Guru Nanak College, Madras University, Chennai-600042, Tamil Nadu, India.

Email: selvarosary789@gmail.com

DOI: https://doi.org/10.34256/fem15

## Abstract:

Various sectoral studies have been conducted in the sangam literature. The majority of studies are based on the literary richness of political, culture, superiority, male, female, Dependent studies have been conducted there have been a number of studies on feminism. This study is performed slightly differently from this type. It’s called female Gender in sangam literature. This review has been performed finding socio cultural roots in relation to gender discrimination the survey is set to reveal. Although the view that male and female are equal in the sangam period, some differences are appreciated. In both categories of agam & puram. There has been some discrimination only the section orders up the side stops in front women is secondary. This study is aimed at the male, female, youth, eduction, community, woman is seen as secondary in sangam literature. The term parathamai& alar in the literature refers to the female race .The sangam period is referred to as the golden age.Thus gender discrimination, however can be said to be a major drawback of contemporary life. The purpose of this article is to put forward their kinds of thoughts.

**Keywords**: Kalvi, Female gender in sankam literature, Contemporary life, Female race, Social cultural roots.

**முன்னுரை**

பாலினம் என்பது பெண்களை விட ஆண்களுக்கு அதிக நன்மை தரும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. பால் மற்றும் பாலின வேறுபாடுகள் பெண்களை இரண்டாம் நிலையிலேயே வரையறுக்கிறது. இந்த இரண்டாம் நிலைக்கு பெண்ணின் உடலியல் வேறுபாடுகளே காரணமாக அமைகின்றன. சமூகத்தின் நம்பிக்கைகளின்படி பொருத்தமானதாக வரையறுக்கப்படுகிறது. சமூக சூழலில் பால் இனத்திற்கான பொறுப்புகள், கடமைகள், பங்களிப்புகள் என்பதன் மூலமும் வேறுபடுகின்றது. ஆண் பெண் இருவரும் சமூக கருத்திலும் குடும்ப அமைப்பிலும் முதல், இரண்டு என நிலைப்படுத்தப்படுகின்றனர்.

இவ்வகையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் பெண் சார்ந்த சில நிகழ்வுகளை இக்கட்டுரை முன்வைக்கிறது. அகம், புறம் என இரு கருத்தியல் மூலம் கட்டமைக்கப்பட்டதாக சங்க இலக்கியப் பிரிவுகள் உள்ளன. இவ்வமைப்பை நாம் நன்கு நோக்கில் தாய்வழிச் சமூக அமைப்பிற்கு பின் தோன்றியது என்பதை காணலாம். ஆண் பெருமையை முன்னிறுத்தும் வகையாகவே அமைந்துள்ளது. அக வாழ்வில் காதல் என்றால் பெண்ணை வெல்வது, புற வாழ்வில் போர் மூலம் எதிரிகளை வெற்றி கொள்வது என்பதில் ஆண் பாலினமே முன்னிலை வகிக்கிறது. பெண்ணிற்கு ஆணே முதன்மையானவன் என்பதை தெளிவாக விளக்குகிறது. இதில் சிலவற்றை சுட்டிக்காட்டும் விதமாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**ஆண் - பெண் இளமைக்காலம்**

திருமணத்திற்கு முந்தைய வாழ்வு ஆண் பெண் இருவருக்கும் முற்றிலும் வேறுபட்டதாகச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. ஆண்மகனுக்கு வீரம் என்பதே நிலைக்களனாகக் கொள்ளப்பட்டது. ஆனால் பெண் பூக்கொய்தல், புனல் விளையாடல், ஊசல், பந்தாடுதல், கழற்சிக்காய், அம்மானை, தினைப்புனம் காத்தல் என இளமைப் பருவத்தை விளையாட்டு மூலம் கழித்தனர். இவ்விடத்தில் “பாலின வேறுபாட்டை அறிய முடிகின்றது.

**"ஒளிருவாள் அருஞ்சமம் முருக்கி**

**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"1 (புறம் 312:5-6)**

**"தினைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்**

**புனக்கிளி படியும் பூங்கட் பேதை"2 (குறுந் 142: 1-2)**

**"பணைந்தோட்குறுமகள் பாவை தைஇயும்**

**பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்தும்"3 (276 :1-2)**

இவற்றின் மூலம் சங்க இலக்கியம் ஆண் பெண் பாலின வேறுபாட்டை உள்ளடக்கியுள்ளது என்பதைக் காண முடிகின்றது. பெண் என்பவளை மென்மை என்ற வட்டத்திற்குள் அடைத்து விட்டு ஆணை மட்டும் வீரம், பெருமை என்று முன்னிலைப்படுத்துகின்றது.

**களவு-கற்பு**

களவு கற்பு என்ற இணைவுகள் சங்க இலக்கியச் சிறப்புகள். இவையிரண்டும் இல்லாமல் சங்ககால மக்கள் வாழ்வு இல்லை எனலாம். இவ்விரண்டிலுமே பாலின வேறுபாட்டை நாம் காணலாம். களவு என்பது ஒத்தப் பருவம், உருவம் உள்ள ஆணும் பெண்ணும் தாமே எதிர்ப்பட்டுக் கூடுவது தங்களுக்கேற்ற வாழ்க்கைத்துணையை தானே முடிவு செய்வது ஆகும். கற்பு என்பது ஒருமனப்பட்ட இருவர் திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்துவது ஆகும். களவுக் காலத்திலும் சரி, கற்பு நிலையிலும் சரி பெண்ணே அதிக இன்னலுக்கு உள்ளாகிறாள். தன் மனம் கவர்ந்த மறுபடியும் வருவானா என்பதை எதிர்பார்ப்பதாகப் பெண் நிலை உள்ளது. திருமணம் முடிந்த பின்பும் தன்னைப் பிரிந்து சென்ற கணவன் எப்பொழுது வருவான் என எதிர்நோக்கும் நிலையும் உள்ளது.

**"நிலத்தினும் பெரிது வானினும் உயர்ந்தன்று**

**நீரினும் ஆர் அளவின்றே......**

**பெருத்தேன் இழைக்கும் நாடனொடு நட்பு"4(குறுந் 3)**

**"கன்றும் உண்ணாது கலத்தினும்படாது**

**நல் ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு.....**

**நிதியை அல்குல் என்மாமைக் கவினே"5(குறுந் 27)**

தலைவன் மேல் அன்பு கொண்ட தலைவி அவனை நினைத்து வருந்துவதாக குறுந்தொகைப்பாடல் அமைந்துள்ளது. பிரிவிடை ஆற்றாள் என்பதன் மூலம் பாலைத்திணைப் பாடலாகவும் உள்ளது.

**அலர்**

களவுக்காலத்தில் களவொழுக்கும் நீட்டிக்கையில் ஊர்ப்பெண்கள் கூறும் சொற்களே அலர் எனக் கூறப்படுகின்றது. அலர்தூற்றுவதும் பெண்களே, அலர் கூறப்படுபவரும் பெண்களே, வீட்டில் பெண் என்பவளே முழுமையாக பாதிக்கப்படுகிறாள். தற்காலத்தில் உள்ளது போல் சங்க இலக்கியத்திலும் பிறந்த குடிக்கே இழிவைத் தந்து விட்டாளே என சூட்டுவதான பாலின சமத்துவ மின்மையையே நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. ஏன் பெண்ணுக்கு மட்டும்தான் களவில் சம்பந்தம் உள்ளதா? ஆண் என்பவனுக்கு அலர் என்பது இல்லையோ? என்பன போன்ற கேள்விகள் நமக்குள் மேலோங்குகிறது.

**"சிலரும்பலரும் கடைக்கண் நோக்கி**

**மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி**

**மறுகில் பெண்டிர் அம்பல் தூற்றச்**

**சிறுபோல் வலந்தனர்"6( நற் 149)**

**"அவர் வினைமேவல் அம்பல் பெண்டிர்"7(அகம் 203)**

**"வெவ்வாய்ப் பெண்டிர்"8(அகம் 50)**

இப்பாடல்கள் மூலம் ஊரில் அலர் பரவுகின்றது. அதனை நினைத்து தலைவியின் தாய் அஞ்சுகிறாள் பெண்ணின் நிலை என்னவாகுமோ என்பதே இதன் நிலைப்பாடு என்பதை நாம் காணலாம்.

**கல்வி**

சங்ககால மகளிர் இயல், இசை, கூத்து என மூன்று துறைகளிலும்

தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர். ஔவை வெள்ளிவீதியார் போன்ற புலவர்களும், ஆண் புலவர்களுக்கு நிகராக பாடல்கள் பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்துள்ளனர். இருப்பினும் கல்வியிலும் பாலின வேறுபாடு நிகழ்ந்துள்ளது. ஆணுக்கான கல்வி வேறு, பெண்ணுக்கான கல்வி வேறு. ஆண்கள் போர், தூது, காவல், பொருளீட்டல் முதலிய கல்வியைக் கற்றனர். பெண்ணோ குடும்ப வாழ்விற்கு துணை செய்யும் கல்வியையே கற்றனர். ஆண் கல்வி கற்றல் குறித்தே சங்கப் பாடல்கள் உள்ளன. பெண் கல்வி நிலை குறித்து பாடும் நிலை இல்லை. பெண் கல்வி கற்றாலும் இரண்டாம் நிலையிலேயே உள்ளாள் என்பதை நாம் காணலாம்.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றை நிலை முறியாது கற்றல் நன்றே**

**அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்"9(புறம் 183: 1-7)**

**சமூக நிலை**

சங்க காலச் சமூகம் ஆணும் பெண்ணும் சமம் என்ற கட்டமைப்பை கூறினாலும் இது வெறும் புனைவு என்பதைக் காண முடிகின்றது. ஆண்தான் பெண்ணுக்கான நிலையை கட்டமைக்கிறான். "கற்பு" என்ற சொல்லிலிருந்து பெண் என்பவள் ஆசைக்கு கட்டுப்பட்டவள் என்பதை காணலாம். மனை, இல் என்ற வார்த்தைகள் பெண்ணுக்காகவே படைக்கப்பட்டன. மனையாள், இல்லாள் என்பது பெண்ணையே சுட்டுகிறது. பரத்தமை என்பதும் சங்க கால வாழ்வில் குறைபாடு என்று கூறலாம். பெண்ணே பெண்ணுக்கு எதிரி என்ற நிலையில் பெண்ணின் தனித்துவம் கேள்விக்குள்ளாகிறது. பெரும்பாலான அகப்பாடல்கள் பெண்ணையே முன்னிறுத்துகின்றன. புறமோ ஆணையேதான் முன்னிறுத்துகிறது. இவற்றை ஒப்பு நோக்கில் ஆண், சமூகத்தின் முதன்மையானவன் பெண்ணோ வீட்டோடு தன் பங்களிப்பை நிறுத்திக் கொள்பவள் என்பதை சங்க இலக்கியம் முன்னிறுத்துகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களை நாம் முழுமையாக ஆய்ந்தால் பாலின வேறுபாட்டைக் காணலாம். பெண் பிறப்பிலிருந்து, இறுதிக்காலம் வரை

ஆணை சார்ந்தோ (அ) ஆணுக்காகவே வாழ்வதாக இருப்பதை பாடல்கள் காட்டுகின்றன. பெண் தனித்தியங்கும் ஆற்றல் அற்றவளாக இருக்கிறாள். கணவன் நலத்தை பேணி மென்மை, மெல்லியள் என்ற பண்புடன் நடந்து கொள்வதே அவள் கடமையாகின்றது. இதுவே பெண்ணின் இலக்கணமாக சங்க இலக்கியம் பார்க்கிறது. கணவன் இறந்தால் வளைமுடி, அணிகலன் முதலியவை நீக்குதல், பாயின்றி படுத்தல் என பெண்ணுக்கு மட்டுமே கட்டுப்பாடுகள் உள்ளன. இவ்வகை பாலின சமத்துவமின்மை சங்ககாலம் முதல் இக்காலம் வரை நடைமுறையில் தான் உள்ளன.

## மேற்கோள்கள்

புறநானூறு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

குறுந்தொகை (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

நற்றிணை (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட் அம்பத்தூர், சென்னை.

அகநானூறு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

# சமூகவியல் பார்வையில் பெண்ணியம்

# Samoogaviyal Paarvaiyil Penniyam

**செ. முத்துநகை** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), சேலம்-7, தமிழ்நாடு, இந்தியா.

**S. Muthunagai** [a, *]

[a] Department of Tamil, Government Arts College (A), Salem-7, Tamilnadu, India.

Email: muthunagaislm@gmail.com

DOI: https://doi.org/10.34256/fem16

## Abstract:

The growing seeds only make us understand what type of land that is. The need of this research is how women who are all glorified as this land for their patience has been given place in tamil society for a long time. Research theories of feminism gets changed now and then but when we make research on those changes. Though women develops slowly and fights to gets rights, the society pull down their growth by breaking their sharpness in all departments.

## முன்னுரை

வேத காலம் முதல் இன்றைய காலம் வரை பெண் சார்ந்த பார்வைப் படிநிலைகள் காலக் கருத்தோட்டத்தில் எண்ணிலடங்கா மாற்றம் கொண்டுள்ளது. பெண்ணின் உடல் சார்ந்த அவற்றின் அமைப்பு சார்ந்த நிலைப்பாடுகளில் எவ்வித வேற்றுமை இல்லையாயினும் வாழ்வின் தரப்பாடுகளில் என்னவோ பல்வேறு மாற்றங்களை எய்தி நிற்கின்றது. தாய்மையின் வடிவினள், தாரமாய் தகுதி பெற்றவள் இரக்க மனதினள், பணிவிடைகளால் பாசம் பதித்தவள் குடும்பத்திற்காய்-குத்துவிளக்காய் இருந்தவள், இல்லம் சார்ந்தே தன் வாழ்வை நகர்த்தி நல்லறம் செய்தவள் என பல்வேறு கோணங்களில் பார்க்கப்பட்டு பெண்கள் அடையாளப் படுத்தப்படுகிறார்கள், இப்படி பெண்கள் அணுகப்பட்ட சூழலில் தனக்கான அடையாளத்தோடு சமூகத்தின் மிகப்பெரிய அங்கமாய் உருப்பெற்ற

பெண்களும் இல்லாமல் இல்லை. அழுத்தம் அதிகப்பட அதிகப்பட ஆர்ப்பரித்து எழுச்சி கொள்ளும் மனதை பெண்கள் பெற்று பல்வேறு துறைகளில் இன்று சாதனைப்படைத்துக் கொண்டு தான் வருகின்றனர். அவ்வகையில் சமூகவியல் பார்வையில் பெண்ணியம் சார்ந்த தேடல் இன்றையக் காலத்தின் மிக அவசியத் தேவையாக கருதப்படுவதால் இவ்வாய்வு அவற்றை களமாகக் கொண்டு பேசப்படுகிறது.

## பெண்மையும் காலத்தின் மாற்றமும்

மனு பேசும் பெண் பற்றி அறிந்திருப்போம். தன் குடும்பத்திற்கும், கணவனுக்கும் பணிவிடை செய்பவளாய், கணவனின் இறப்பிற்கு பின் வெள்ளாடையையும், உண்ணும் உணவில் உப்பற்று, காரமற்று, இருட்டறையில் அடைக்கப்பட்டு தன் வாழ்வை நகர்த்துபவளாய் அதற்கும் ஒரு படி மேலே போய் கணவன் இறந்து எறியூட்டிய நெருப்பில் தன்னையும் மாய்த்துக்கொண்டு உடன்கட்டை ஏறும் முறை பெண்களுக்கான விதிமுறைகளாய் இருந்த சூழலில் காலத்தின் ஓட்டத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் சமூக சீர்திருத்தவாதிகளின் பகுத்தறிவுச் சிந்தனையில் பெண்ணினம் உருக்கொண்டு உயிர்ப்பெற்றது காலத்தின் மற்றுமோர் வளர்ச்சிப் படிநிலையே. பெரியார், பாரதி, பாரதிதாசன் என பெண்ணியம் பேசிய, மாமனிதர்கள் ஒருபுறம் இருக்க சிந்தனை ஊற்றோடு பல்வேறு சாதனைகளைப் பல போராட்டங்களோடு வென்றெடுத்த தங்கத் தாராகைகளும் இம்மண்ணில் இல்லாமல் இல்லை.

## இலக்கியத்தில் பெண்

புலவர்கள் அந்த காலத்தில் இருந்தபோதும் பெண்களின் வாழ்க்கைச் சிக்கலை அவர்களால் தீர்க்க முடியவில்லை. பெண் தெய்வமாகப் போற்றப்பட்டாலும் சங்ககாலம் முதல் இன்றுவரை ஒரே மாதிரியான பார்வை தான் பெண்ணியத்தின் நிலைப்பாடாக உள்ளது. தலைவன், தலைவி, தோழி, நற்றாய், பாங்கன், பாங்கி என சங்க இலக்கியத்தில் பாத்திரங்கள் படைக்கப்பட்டு, எவ்வகையில் தலைவனுக்கும், தலைவிக்கும் திருமணம் நடந்தேறினாலும், தலைவன் தலைவியை ஒரு சில மாதங்களிலேயே விட்டுச் சென்று பரத்தையை நாடியதாகத்தான் பெரும்பான்மையான பாடல் வழி சுட்டப்பட்டுள்ளன. பின் அதை அறிந்தும் தோழியின் மூலமோ அல்லது பாங்கனின் வழியாகவோ, அல்லது ஏதோவோர் வாயில்களின் வழியாகவோ ஊடல் தீரப்பெற்று மீண்டும் தலைவி தலைவனை ஏற்றுக் கொண்டதாகவே காட்டப்படுகின்றன.

காலங்கள் மாறினாலும், சமூகத்தின் போக்குகள் மாறினாலும்,

விண்வெளிக்கு பெண்கள் சென்றாலும், எல்லாத் துறைகளிலும் இன்று பெண்கள் கால்பதித்தாலும் அவரவர் வாழ்க்கை தரத்திற்கேற்ப சில நிகழ்வுகள் மாறுபடலாம். ஆனால் சராசரி பெண்ணின் நிலை என்பது அவள் தன் குடும்பத்திற்காய் கணவன் சார்ந்து தான் ஆட்படும் எல்லா இன்னல்களுக்கும், அமைதிகாக்கவே செய்கிறாள். நம் சங்க இலக்கியங்கள் இயம்பும் தலைவி போல. அதே வேலையில் முறத்தால் புலியை விரட்டிய நிலையும், புறமுதுகிட்டு ஓடினான் என் புதல்வன் எனில் அவன் பாலருந்திய மார்பை வெட்டி எறிவேன் என்ற வீரத்தமிழச்சியின் வீரத்தையும் இலக்கியம் வழி காணமுடிகிறது.

உலக சமூகங்களில் பெண்ணின் நிலைப்பாட்டில் பெரும் மாற்றங்கள் இருப்பினும், தமிழ்ச் சமூகத்தில் பெண்களுக்கான முழு விடியல் என்பது கானல் நீராகவே இருக்கிறது.

### பெண்-பெண்ணிய படைப்பாளுமைகளின் சாடல்கள்

பெண்ணியம் சார்ந்த கருத்தாக்கங்கள் வந்துகொண்டேதான் இருக்கின்றன. அவ்வகையில் கவிஞராக அறியப்பட்ட சல்மாவின் இரண்டாம் நாவலான இரண்டாம் ஜாமங்களில் இடம் பெறும் கதையானது இஸ்லாமியப் பின்புலத்தில் அமையும் வாழ்வியல் நிலையைக் காட்டுகிறது. விமர்சனம் எதையும் முன்வைக்காமல் அந்த வாழ்வின் நிலையை எடுத்துரைப்பதைத் திறம்படச் செய்திருக்கிறது அந்நாவல்.

உடல்சார்ந்த உரையாடல்களில் ஆணுக்குரிய சுதந்திரம் பெண்ணுக்குரியதாக இன்னும் வழங்கப்படவில்லை. அத்தகைய சொல்லாடல்களை வெளிப்படையாக முன்வைக்கத் துணியும் பெண்களைச் சமூகம் வேறு கண்ணோட்டத்தோடு அணுகுகிறது. ஆணின் மொழியைத் தவிர வேறெதுவும் சாத்தியப்படாத போது அதே மொழியைப் பெண்ணும் கையாண்டால் கூட அது மறுக்கப்பட்ட ஒன்றாகவே விளங்குகிறது. உணர்வு இருபாலருக்கும் பொதுவானதாக இருப்பினும் சொற்களில் வெளிப்படுத்தும் உரிமை பெண்ணுக்கில்லை என்பதை அழகாய் எடுத்தியம்புகிறார் சல்மா. ஆனால் கவிஞர் தாமரை அவர்களோ பெண்ணின் உணர்வுகளை அழகாக திரைப்பட பாடல்கள் வழி இன்று வெளிப்படுத்தியுள்ளார். இப்படைப்புலகத்தில் புதிய மாற்றத்தைக் கொண்டு வந்தது போற்றுதலுக்குரிய செயலாகும்.

நவீன கவிதை, கதை இலக்கியங்களில் பெண்ணிய படைப்பாளிகள் தங்கள் எழுத்தை, ஆணாதிக்க உலகைக் கட்டுடைக்கும் ஆயுதமாகவும், ஆண்களில் உருவாக்கப்பட்ட மரபியல் பெண் பிம்பங்களை அழித்து எழுதும் களமாகவும், பெண்களின் அதிகார இருப்பை உணர்த்தும் குறியீடாகவும் அமைத்துக் கொண்டுள்ளனர். பெண்ணிய அரசியல் பெண்கள் முன்வைக்கும்

பாலியல் தெரிவுக்கான உரிமைகள் புறஉலகை அச்சுறுத்துகின்றன. ஆணின் பாலியல் வற்புறுத்தல்களை பெண்கவிகள் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

"கவிஞர் சுபத்ரா தமது "எந்தன்-தோழா" என்ற கவிதைத் தொகுப்பில்

உண்காமுற்ற பார்வைக் காட்டில்

கூனிக்குறுகி நடந்து விரசம் தெறிக்கும்

சொற்புயலில் சிக்கிச்சிதறுண்டு…

ஆண்மையின் மிருகபலத்திற்கு இரையாகி

நாங்கள் களைத்துப் போனோம்…

கலைத்தே போனோம்"[1] (எந்தன் தோழா ப.47)

என்று பெண்மைச் சுமைகளை ஆணாதிக்க சமூகத்தை நோக்கி வீசுகிறார்.

இரவுகள் மட்டுமல்ல – பகல்களும் பாதுகாப்பற்றுதான் நிற்கின்றன என பெண்களுக்கான இன்றைய சமூகபோக்குகளை தம் கவிதை வழி வினாவாய்த் தொடுக்கிறார்.

சமூகம் விடிவுபெற பெண்மை முதலில் விடிவுபெற வேண்டும். ஒழுக்கம் என்பது இருபாலருக்கும் உரியதாக்கப்பட வேண்டும். இயற்கை ஆணென்றும், பெண்ணென்றும் வரையறைகள் செய்திருக்கிறது. உடலியற் சார்ந்த மாறுபாடுகளே தவிர வேறொன்றுமில்லை.

தனிமரம் என்பது எப்படி தோப்பாகாதோ, அதுபோல் பெண் இன்றி ஓர் சமூகம் வலுப்பெறாது. எங்கிருந்து தோன்றியது இவ்வடிமைத்தனம். ஒருவரை அழுத்தி மற்றொருவர் சுகம் காணும் போக்கு காலம் காலமாய் வலுப்பெற்றுக் கொண்டே இருக்கிறதே தவிர ஆணுக்குப் பெண் சமம் என்ற நிலை முழுமையும் நிறைவேற்றப்பட்டு உள்ளதா என்றால் இல்லை.

ஒருவரால் இயக்கப்படும் நிலையிலிருந்து பல்வேறு கட்டங்களை கடந்து பல்வேறு மாற்றங்களை இன்று பெண்கள் அடைந்தாலும் எங்கோ ஓர் துளை அவர்களை நெருக்கிப் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறது.

உடன்கட்டை ஏறுதலும், முடியை அகற்றுதலும், இருட்டறையில் அடைக்கப்பட்டும், உப்பில்லா பண்டத்தை உண்டும், கணவனுக்கு பணிவிடை செய்பவளாகவும், தனக்கென்ற எவ்வித அடையாளமும் இன்றி பெண்களுக்கான வரையறை இதுதான் என்பதை கடக்க எத்தனை நல்

உள்ளங்களின் அற்பணிப்பு இச்சமூகத்திற்கு தேவைப்பட்டிருக்கிறது.

பரந்து விரிந்த வானில் ஒளிவீசித் திகழும் நட்சத்திரங்களாய் காலம் வென்ற பெண்களும் நம் தமிழனத்தின் விடிவெள்ளியாய் திகழ்ந்திருக்கிறார்கள் என்பது தான் போற்றுதலுக்குரியது.

மதுரையை ஆண்ட பெண்ணரசி மங்கம்மாள், தமிழகத்தின் ஜான்சிராணி வேலுநாச்சியார், தமிழகத்தின் அன்னிபெசன்ட் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், பெரியாரின் அருந்துணை நாகம்மை, இந்தியாவின் முதல் பெண் மருத்துவ மாமணி முத்துலட்சுமி ரெட்டி, கைம்பெண் காவலர் சகோதரி சுபலட்சுமி, வீரத்தமிழன்னை டாக்டர் எஸ்.தருமாம்பாள், இந்திய விடுதலைப் போரின் வீராங்கனை ருக்மணி லட்சுமிபதி, தமிழ்நாட்டின் மறத்தி, தில்லையாடி வள்ளியம்மை, புகழ்பெற்ற நாவலாசிரியர் வை.மு.கோதை நாயகி அம்மாள், மறைமலையடிகளின் திருமகள் நீலாம்பிகை அம்மையார், ருக்மணி அருண்டேல், கொடுமுடி கோகிலம் கே.பி.சுந்தராம்பாள், ஜான்சிராணி படைத்தளபதி கேப்டன் லட்சுமி, இந்தியாவின் இசைக்குயில் எம்.எஸ்.சுப்புலட்சுமி, மணியம்மை, இராமாமிர்தம் அம்மையாரின் பணி சமூக மாற்றத்தில் முக்கிய பங்கு.

புகழ்பெற்ற நாவலாசிரியர் வை.மு.கோதை நாயகி அம்மாள் நந்தவனம் என்ற தனிப்பத்திரிக்கை வெளியீட்டின் மூலம் 150க்கும் மேற்பட்ட புதிய பெண் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இப்பத்திரிக்கையானது "தமிழ்ப் பெண்களின் பேனாமுனை என்றும் தமிழ்ப் பெண்களின் நந்தவனம் என்றும் விளம்பரப்படுத்தப்பட்டது".[2] இந்தியாவின் முதல் பெண் மருத்துவ மாமணி முத்துலட்சுமி ரெட்டியை கவிக்குயில் சரோஜினி நாயுடு பத்திரிக்கைகளில் பலவாராக பாராட்டி எழுதியுள்ளார்.

மருத்துவக் கனவு இன்று பள்ளிப்படிப்பை முடித்த அனைத்து மாணவர்களின் கனவாகவே மாறிவிட்டது. கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம். அங்கே புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை என்ற பாவேந்தரின் வரிகள் இன்று பொய்த்துப் போகவில்லை. பெண்கள் கால் பதிக்காத களங்கள் இன்று இல்லை. நெருப்பில் சுட்டாலும் சங்கின் வெண்மை எப்படி மாறதோ அப்படியே இன்று பெண்மையும் விளங்குகிறது.

மேலும் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் இந்தியப் பெண்கள் கழகத் தலைவராய் (**Women's Indian Association**) 'ஸ்திரி தர்மா'(மகளிர் அறம்) என்னும் இதழாசிரியராகவும் இருந்து பெண்களுக்கான பெண்கல்வி,

நாட்டுரிமை, தீண்டாமை ஒழிப்பு, இளம் மணத்தின் கொடுமை பற்றியெல்லாம் தம் கட்டுரைகளின் வழி பதிவு செய்துள்ளார். இவர் சட்டமன்ற உறுப்பினராய் இருந்த காலகட்டத்தில்தான் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டது. மேலும் தேவதாசி சட்டம், சாரதா சட்டம் (குழந்தை மணம் ஒழிப்புச்சட்டம்), ஏழைப் பெண்கள் இலவசமாய்க் கல்வி பயிலல், ஔவை இல்லத்தை நிறுவி யாரும் ஆதரவற்ற அனாதைகள் இல்லை எனும் போக்கை களைந்தார். அதுமட்டுமா 'ஒழுக்கம் தவறிய பெண்கள் கண்காணிப்புக் கழகம்' (**Vigilance Association**) என்ற ஒன்றையும் குற்றமிழைத்த சிறுவர்களுக்கான உதவி நிறுவனம் (**Children Aid Society**) ஒன்றை நிறுவி அதன் செயலராகவும், புற்று நோயால் பாதிக்கப்பட்டு இன்னலுக்குள்ளான மனிதர்களுக்கும் சிறப்பாக மருத்துவ சிகிச்சையளித்தார்.

பெண்ணிற்கு ஞானத்தை வைத்தான்-புவி

பேணிவளர்த்திடு மீசன்

மண்ணுக்குள்ளே சிலமூடர்-நல்ல

மாதரறிவைக் கெடுத்தார்

கண்களிரண்டினி லொன்றைக்-குத்திக்

காட்சி கொடுத்திடலாமோ?

பெண்களறிவை வளத்தால்-வையம்

பேதமையற்றிடும் காணீர்!

என்ற பாரதியாரின் வரிகள் பெண்ணினத்திற்கான உண்மை விடியல் வர்க்கப் பாகுபாட்டில் ஆண்களைவிட ஒருபடி மேலாக பெண்கள் இச்சமூகத்த்தில் அடையும் கொடுமை சொல்லி மாளாது. கொத்தடிமைகளாய்க் காலம் காலமாய் வாழப் பழகிய பெண்களின் நிலை காலத்தின் சுவடுகள். அக்கா அக்கா என்கிறாயே கிளியே அக்கா வந்து கொடுக்க சுக்கா மிளகா சுதந்திரம் என்ற வார்த்தைகள் பெண்களுக்கும் ஏற்புடையது.

"தாமரைப் பூவில் சரஸ்வதியாய்-பெண்ணை

தாங்கள் மதிப்பதாய்க் கதை அளப்பார்

தாமரைப் பூவினில் வாழாத-சேரிச்

சரசுகள் எத்தனை பேர் படித்தார்?

வெண்ணிற ஆடைச் சரஸ்வதி மீட்டிய

வீணைக் கச்சேரிகள் தேவையில்லை

வெண்மணி வர்க்கச் சகோதரிகள்-இனி

வெடிகள் பாவையில் பாடட்டும்"[3]

-இன்குலாப்-வெள்ளையிருட்டு. சிவகங்கை-1977

பெண்ணினத்தின் மிகப் பெரிய மாற்றம் தந்தைப் பெரியார் அவர்களாலே நிகழ்ந்தது என்பதே பேருண்மை.

'வேசி தன் அழகைச் சில்லரை விற்பனை செய்கிறாள். குலப்பெண் திருமணம் என்ற பெயரில் மொத்தமாக விற்று விடுகிறாள்' என்றார் மராத்தியப் புரட்சிப் பெண் எழுத்தாளர்.

இல்வாழ்வில் ஆணுக்குப் பெண் துணை பெண்ணுக்கு ஆண் துணை- துணை என்றால் நட்பு, உதவி, சமபங்கு என்றார் பெரியார். இவரது கருத்தை மனதில் ஏற்ற பெண்கள், தமக்கான பெண்கள் மாநாட்டில் 'பெரியார்' என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்டார்.

சீனர்களின் நம்பிக்கையாக ஐந்து தனிமங்களைப் படைத்து அவற்றில் பொன்னிலிருந்து எழுந்த மேகத்தை ஆணாகவும், கட்டையிலிருந்து எழுந்த மேகத்தைப் பெண்ணாகவும் படைத்ததாக எழுதி வைத்துள்ளனர். இதுபோன்றே கிறித்துவர்கள் களிமண்ணால் மனிதனையும் அவன் தூங்கும்போது விலா எலும்பை எடுத்து பெண்ணையும் உருவாக்கி அவர்கள் மூச்சில் தனது மூச்சை விட்டு உயிர் கொடுத்தார் என்று கிறித்துவர்கள் எழுதி வைத்துள்ளனர்.

தமிழ் சமூகத்தில் பெண் சார்ந்த பதிவுகள் சங்க காலம் முன்தொட்டே, தமிழ் இலக்கணங்களில் பேசப்படாமல் இல்லை. தமிழரின் வாழ்வியலை தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் படம்பிடித்து காட்டுகிறது.

"மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்

துறையமை நல்யாழ் துணைமையோர் இயல்பே"

(தொல். பொருள்.3-1)

வேத காலத்தின் எண்வகை மணங்களாக இளம்பூரணர்

**1. பிரமம் 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம் 4. தெய்வம்**

**5. காந்தருவம் 6. அசுரம் 7. இராக்கதம் 8. பைசாசம்**

என வகைப்படுத்தி அம்முறைகளை விவரித்துக் காட்டியுள்ளார். தமிழர் அக இலக்கியங்களில் பேசப்படும், காதல் நெறி ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பிக் கூடும் காந்தருவ வழக்கோடு ஒத்தது என்று இனங்காட்டுகிறார் தொல்காப்பியர். இப்படி கூறப்பட்ட வேத மணங்களில் காந்தருவம் நீங்கலாக, ஏனையவற்றில் பெண்களுக்கு இழைக்கப்பட்டிருந்த அநீதியையும் கொடுமையையும் உணர முடிகிறது.

## முடிவுரை

இலக்கியக் காதலும், பெண்மை உயர்வும் சமூக வாழ்வில் நடைமுறையில் இல்லை. ஓர் உடம்புக்கு ஓர் உயிர் என்றால், ஓர் உயிருக்கு ஓர் உடம்புதானே இருக்க முடியும் என்ற எண்ணத்தை முன்வைத்து "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற வழக்கமே சரியானது என்பதை சொல்லாமல் சொல்லிச் செல்கிறார் வள்ளுவர். அனைத்தையும் சுமக்கும் பெண்களுக்கு இச்சமூகம் கொடுக்கும் வலிகள் ஏராளம். அதில் மிகவும் இன்றைய பெண்கள் பாதிக்கப்படுவது பாலியல் சார்ந்த துன்புறுத்தல்களே, படித்த பெண்களாகட்டும், படிக்காத பெண்களாகட்டும், இல்லை சரி பச்சிளம் பெண் குழந்தையாகட்டும் யாரையும் இச்சமூகம் விட்டுவைக்கவில்லை. எத்துனை கோணங்களில் பெண்களை பற்றி ஆராய்ந்தாலும் முடிவில் பெண்ணியம் என்பது பேசப்படும் பொருளாக இருக்கிறதே அன்றி செயலாக்கம் பெறவில்லை என்பதே நம் தமிழ் சமூகத்தின் நிலைப்பாடாக இருக்கிறது.

## மேற்கோள்கள்

சுபத்ரா, (1990) எந்தன் தோழா, மனிதம், திருச்சி, இந்தியா

சரளா இராசகோபாலன், (2007) காலம் வென்ற தமிழக மகளிர், ஒளிப் பதிப்பகம், சென்னை, இந்தியா

இன்குலாப், (1977) வெள்ளை இருட்டு, அகரம், இந்தியா

# பெண்மய்யத் திறனாய்வு – நோக்கும் போக்கும்

# Feminist Criticism – Perspectives and Tendencies


**வெ. நிர்மலா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641044, தமிழ்நாடு, இந்தியா

**V. Nirmala** [a, *]

[a] Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science for Women, Coimbatore-641044, Tamil Nadu, India

Email: hod-tamil@srcw.ac.in



DOI: https://doi.org/10.34256/fem17



**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியத்தில் ஆணாதிக்கச் சிந்தனையைப் பிரதிபலிக்கிற எழுத்துக்களே பெரும்பாலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெண்கள் குறித்த ஆண் நோக்கிலான பார்வையிலிருந்து விலகிய பெண்ணிய நிலை சார்ந்த, பெண் பார்வையிலான பெண்மய்யப் படைப்புகள் தமிழ் படைப்புத் தளத்தில் அதிக பாதிப்பை நிகழ்த்தி வருகின்றன. இப்பதிவுகள் ஆண்வழிச்சமூக அமைப்பின் வெறுப்பு சார்ந்த குரலாக அல்லாமல் பெண்ணின் தன்னிலைக் குரலாக அமைந்திருப்பதை மறுக்க இயலாது. சமூக வாழ்நிலை தளத்திலும் கலை இலக்கியத் தளத்திலும் ஒடுக்குண்டு கிடந்த பெண்கள் நவீன இலக்கியத் தளத்தில் தீவிரம் பெற்ற நிலையில் பெண்கள் பேசவும், எழுதவும் கூடாது என்ற நிலை மாறி வரும் சூழலில் பெண்ணிய எழுத்துக்களை, பெண்மொழி என்று முதன்மைப்படுத்தும் இன்றைய சிந்தனையை அடியொற்றி தமிழ் இலக்கியப் போக்குகளை வாசிப்பு செய்வதும், மதிப்பீடு செய்வதும் இன்றைய ஆய்வுலகின் தேவையாக இருக்கிறது.


## முன்னுரை

தமிழ்ச்சூழலில் பெண்ணியச்சிந்தனைமரபு செயலூக்கம் பெறுவதற்குப் பல சிந்தனைத் தளங்கள் காரணங்களாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று மேற்கத்திய சிந்தனை மரபு எனில் மிகையாகாது. பெண்ணியச்சிந்தனைகள் பல

இலக்கிய கோட்பாடுகளை (நவீனத்துவம், பின்நவீனத்துவம்) சார்ந்து தன் கொள்கை, கோட்பாடுகளை வடிவமைத்துக் கொண்டன என்றாலும் பெண்ணியத் திறனாய்வாளர்கள் பெண்மய்யம் (Gyno Critics) சார்ந்து ஆய்வு செய்வதை மய்யப்படுத்தியுள்ளனர். நவீன இலக்கியப் படைப்புத் தளத்தில் பெண்மய்யப் படைப்புகளான சிறுகதை, கவிதை, புனைகதை அதிகம் உருவாகி வருகின்றன. ஆண் போக்குக் கூட்டுக்குள் அடங்காத பெண்நிலைத் தத்துவ மொழியாக படைப்புத் தளத்திலும், வாசிப்புத் தளத்திலும், ஆய்வுத்தளத்திலும் உருவாகி வரும் போக்கினை முன்னிறுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

பெண்ணியத்திற்கான அடிப்படையான சுதந்திரம், சமத்துவம் போன்ற கருத்துக்கள் முதன் முதலில் தோன்றியது பிரான்ஸ் நாட்டில்தான் ஆனால் அவை ஆதரிக்கப்பட்டு பெண்ணிய இயக்கமாக மிளிர்ந்தது அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஆகும். “எலிசபெத்கேடி ஸ்டான்டான், லுக்ரீஷாமாட் ஆகியோரால் கூட்டப்பட்ட 1848 ஆம் ஆண்டின் செனகாஃபால்ஸ் மாநாடு பெண்களுக்கான முழுமையான கல்வி வாய்ப்பு, சமமான இழப்பீடு போன்ற சட்டப்பூர்வ சமநிலையை ஆண்களுக்கு சமமாகக் கோரியது. இதன் பின்னர் வாக்குரிமை வேகம் பெற்றது. அமெரிக்காவிலிருந்து பெண்ணியம் ஐரோப்பாவுக்கு பரவியது. அரசமைப்புச் சட்டத்திருத்தம் வாயிலாக 1920-ஆம் ஆண்டு அமரிக்கப் பெண்கள் வாக்குரிமைப் பெற்றனர். இருப்பினும் பணியிடங்களில் பங்களிப்பு போன்றவை கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தன. சமூகத்தில் இருந்த எண்ணங்கள் பெண்களை வீட்டுக்குள் முடக்குவனவாகவே திகழ்ந்தன. சைமன்-டி-பௌவார் எழுதிய இரண்டாம் பாலினம், பெட்டி பிரிடன் எழுதிய திஃபெபினைன் மிஸ்டிக் ஆகிய நூல்களின் பதிப்பையும், 1966 -இல் தேசிய மகளிர் அமைப்பு நிறுவப்பட்டதையும்” நவீன பெண்ணிய எழுச்சியின் மைல்கற்கள் எனலாம் (பிரிட்டானிகா தகவல் களஞ்சியம்).

ஏஞ்சல்சின் கோட்பாட்டின் படி, கற்பு என்னும் மதிப்பு ஆணினம் பெண் இனத்தை அடிமை கொள்வதற்காக ஏற்படுத்திய சமூக நியதியாகும். “கற்பை பெண்களின் வாழ்க்கை நெறியாக்கி, பெண் இனத்தின் சுதந்திரத்தைப் பறித்து, அவர்களை வீட்டுக்குள் அடைத்து வைத்து சமூகத்தில் பெண்களின் தாழ்நிலைக்கும், நசுக்குதலுக்கும் சுரண்டலுக்கும் ஆதாரமாக செயல்படும்

மதிப்புகள் ஆண் மேலாண்மையின் கூறுகளாகும்” என்ற கருத்து பெண்ணியம் பல்வேறு பரிணாமங்களுடன் தோற்றம் பெற்றதை உணர்த்துகிறது (அன்னிதாமசு, 2000).

**மேற்கத்திய பெண்ணியத்திறனாய்வாளர்களின் கருத்தாக்கங்கள்:**

மரபு ரீதியாக விளங்கும் ஆணாதிக்க கோட்பாடுகளில் பெண்களுக்கான கருத்தியலை சொல்லாடலை வடிவமைக்க பெண்ணியத் திறனாய்வாளர்கள் அமைப்பியல்வாதம், உளப்பகுப்பாய்வு, நவீனத்துவம், பின் நவீனத்துவம் என பல்வேறு கோட்பாடுகளை முன்னிறுத்தி பெண்ணியத் திறனாய்வுகள் மேற்கொண்டதன் மூலம் பெண்ணியத்திறனாய்வாளர்களால் ஆணாதிக்கத்திற்கு எதிரான பெண் உணர்வுகளைப் பொருட்படுத்தும் உத்திமுறைகளை உருவாக்க முடிந்தது. இத்தகு பெண்ணியத் திறனாய்வுக்கு சிமோன் தெ பொவோரின் (Simon de Beaurior) பெண்ணெனும் இரண்டாமினம் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்நூலில் பெண் சார்ந்த உயிரியல் கூறு, தனி அனுபவம், மொழி, நனவிலி மனம், சமூகம், பொருளாதார சூழ்நிலைகளை முன்னிறுத்தி ஆய்வு நிகழ்த்தும் போது ஏற்படும் சிக்கல்களை முன் வைக்கின்றன.

டாலேஸ்பெண்டிர் (Dale Spender) என்பவரால் உருவாக்கப்பட்ட மொழியை ஆணாதிக்க மொழி என்று எடுத்துரைக்கின்றார். யாருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்பதை பொருத்து அமைகிறது என்ற கருத்தை முன்வைத்து மொழியை விளக்குகிறார். அதே போல பூக்கோ மொழியை அதிகாரத்தால் உருவாக்கப்பட்ட மொழி என்று விளக்குகிறார். எனவே அதிகாரத்தால் உருவாக்கப்பட்ட மொழியில் சிக்கிக் கொண்ட பெண் தனக்கான மொழியை வடிவமைக்க வேண்டியுள்ளது.

பெண்மொழி எழுத்து என்பதை பெண் அனுபவம் சார்ந்து பெண்ணியத் திறனாய்வு செய்தவர்களில் முதன்மையானவராக எலைன்ஷோ வால்டர் கருதப்படுகிறார். 1977 – A Literature of their own என்ற நூலில் ஆண் / பெண் எழுத்துக்களில் வேறுபாடுகள் உள்ளன என்று கருத்துரைக்கின்றார். இதேபோன்று வெர்ஜினியாவுல்ஃப் பெண் எழுத்தை சமூகவியல் சார்ந்தது என்று முன் வைக்கின்றார்.

மொழியில் ஆணாதிக்கம் நிறுவியுள்ள சொல்லாடலை உடைத்து உணர்வுமையக் கோட்பாட்டை, மொழியில் புகுத்திப் பார்த்த பெண்ணியத் திறனாய்வாளர்களாக சூலியா கிறித்தெவா, ஹெலன் சிக்சு Helan Cixous ஆகியோரைக் குறிப்பிடலாம். சந்தால் சவாப் Chantal chawaf சேவியர் காதியே Xaviere Gauthier லூாயி இரிகாரே Luee Irigary உள்ளிட்ட பிரெஞ்சு பெண்ணியவாதிகள் பெண்ணின் பாலியல் ஆழமான நிலவறைப் போன்றது என்ற கருத்தை முன் வைத்தனர். சுலாமித் ஃபயர்ஸ்டோனின் பாலியலின் இயங்கியல், சீக்ஸீயின் மெடுசாவின் புன்னகை எலைன்ஷோவால்டரின் Literature of their own போன்றவை பெண் எழுத்தாளர்களால் கொள்கை சாசனமாகக் கொண்டாடப்படுகிறது. இந்நூல் பெண்ணியவாதிகளால் மொழி அரசியலாக முன்னிறுத்தப்படுகிறது.

மொழியிலிருந்து விடுபட்டு பெரும்பாலும் சாத்தியப்படக் கூடிய வார்ப்புள்ள ஒரு மொழியை உருவாக்குவது. இது ஒரு விதத்தில் மௌனம் மட்டுமே ஆட்சி செலுத்தும் நனவிலி உலகிற்குப் பெண்களை இட்டுச்செல்லும் வாய்ப்பு இருக்கிறது. இதற்கு "ஆணாதிக்கம் நிலவுகின்ற ஒவ்வொன்றிலும் தப்பித்து அகதிகள் போல புகலிடம் தேடி ஓடுகின்றோம். அவ்வாறு ஓடி நீருக்குள்ளே வாழ்கின்ற உடம்பால் மௌனமாக நிற்குமாறு தள்ளப்படுகின்றோம். இதனால் மனித வரலாற்றில் எங்களை பதிவு செய்து கொள்ளும் உரிமையை இழந்து நிற்கிறோம்." என்ற சிக்சுவின் கருத்து அரண் சேர்க்கும் (பஞ்சாங்கம், 2012a). மேற்கத்திய பெண்ணியவாதிகளால் முன் வைக்கப்படும் பெண்நிலை நோக்கு திறனாய்வு பெண்ணை மய்யப்படுத்தி மொழி அரசியலை முன்னிறுத்துகிறது.

## இந்தியச்சூழலில் பெண்ணும் சமூகமும்

இந்தியச் சமூகத்தில் பெண் என்பவள் தாய், மனைவி என்ற நிலையில் பெரும்பாலும் அடையாளப்படுத்தப்படுகிறாள். எனவே குடும்பம் என்ற நிறுவனத்திலிருந்து பிரித்தறிய முடியாத ஒரு நிலையிலேயே பெண் வாழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்திய சமூகத்தில் பெரும் பகுதி தந்தை வழி சமூக அமைப்பாக இருப்பதால் தந்தை-குடும்பத்தலைவன் தாய் பொருளாதார சுதந்திரம் பெற்றிருந்தாலும் அவனை சார்ந்து அடங்கி நடக்க வேண்டியவள்

பெண் என்ற சமூக சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பண்பாட்டு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வழிமுறையாக இருபதாம் நூற்றாண்டில் பெண்கல்வி, பொருளாதார சுதந்திரம் முன் வைக்கப்பட்ட இலக்கியப் பதிவுகள், சிந்தனை மரபு இயக்கங்கள் தோற்றம் பெற்றன. சுதந்திர இந்தியாவில் பெண் விடுதலைக்கான முயற்சிகள் மேற்கொண்ட சூழ்நிலையிலும் முழுமையான பயன் ஏற்படவில்லை.

## தமிழ்ச்சூழலில் பெண்ணியத்திறனாய்வு

பெண்ணியம் சமூக மாற்றத்திற்கான அரசியல் இயக்கம் என்ற புரிதலோடு இலக்கியப் படைப்புகளை வாசிப்பு செய்ய வேண்டியத் தேவை உள்ளது. ஏனெனில் இலக்கியக் கருத்தாடல்களின் வீச்சும் பரப்பும் வெகு வேகமாக மாறியும் விரிந்தும் வருகிற சூழலில் பெண்ணியம் இன்றைய கல்வி அமைப்பில் பத்தோடு ஒன்றாக சேரும் சிந்தனை மரபுகளில் ஒன்றாக கொள்ளப்பட்டு ஜனநாயகத் தன்மையை நிலை நிறுத்தும் போலித்தனம் கொண்ட ஒரு முறையிலாக நீர்த்துப் போகக்கூடிய ஆபத்து உள்ளது. மீள் காணல் அடிப்படையில் படைப்பிலக்கியங்களில் கருத்தாடல்களை அணுக வேண்டியுள்ளது. இதற்கு பெண் தன்னிலைப்புரிதல் என்பதோடு பிற நிலைகளிலும் உள்ள புரிந்து கொள்ளும் முயற்சி மட்டுமே பெண்ணியத்தை நீர்த்துப் போகாத செயல்பாட்டு ஊக்கம் நிறைந்த கருத்து நிலையாகக் காட்டமுடியும்.

தமிழ்ச்சூழலில் பெண்ணியத்திறனாய்வுக்கு முன்னோடியாக பாரதியார், பெரியாரைக் குறிப்பிடலாம். பெண்களின் எழுத்து சார் எடுத்துரைப்புப் பற்றி திறனாய்வு செய்த கருத்துக்கள் நினைவில் கொள்ளத்தக்கன. பாரதியார், ஔவையாரின் மொழி சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல், பெண்ணின் பாடல்களில் பெண்கள் தங்களுக்கென பாட்டு சந்தங்கள் வைத்துள்ளமையை எடுத்துக்காட்டுகிறார். அதே போன்று பெரியாரின் சீர்திருத்த இயக்க புரட்சிப் பார்வையால் தமிழ் இலக்கிய மரபில் புனையப்பட்ட பெண் பற்றிய கருத்தாக்கங்களைத் தலைகீழாக்கிய பெண் மதிப்பீடுகள் பெண்ணியத் திறனாய்வுக்கு அடித்தளம் இட்டன என்பதை மறுக்க இயலாது.

தமிழில் பெண்ணியத் திறனாய்வில் குறிப்பிடத்தகுந்த சில முயற்சிகள்

மட்டுமே நிகழ்ந்துள்ளன. அம்பையின் Face Behind the Mask என்ற நூலும் இராஜம் கிருஷ்ணனின் ‘காலந்தோறும் பெண்’ சாந்தி சச்சிதானந்தத்தின் ‘பெண்களின் சுவடுகளில்’ சக்தி பெருமாளின் ‘பெண்’ பிரேமா அருணாசலத்தின் ‘பத்தினி தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்’, விஜயலட்சுமியின் ‘தமிழக மகளிர் தொடக்க காலம் முதல் ஆறாம் நுற்றாண்டு வரை’, பிரேமாவின ‘பெண்ணியம்’ க. பஞ்சாங்கத்தின் ‘பெண்ணெணும் படைப்பு’ நிறப்பிரிகை வெளியீடான ‘அரசு-குடும்பம்-பெண்ணியம்’ , அரங்க மல்லிகாவின் ‘தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்’ ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம்.

பெண்ணியத்தைத் தமிழ்ச்சூழலில் பரவலாக்கியதில் கல்வியாளர்களின் பங்கு என்று பார்க்கும் போது 1989- ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் வெளியான திறனாய்வுக் கட்டுரைகள், எம்.ஏ. சுசீலாவின் விடுதலைக்கு முன் வந்த தமிழ்ப் புதினங்களில் பெண்ணியம் சு. வேங்கடராமனின் எண்பதுகளில் வெளிவந்த புனைக்கதைகளில் பெண்ணியம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக வெளியீடான பெண்ணியக் கலைச்சொல் விளக்க கையேடு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஆக பெண்ணியத் திறனாய்வினை செறிவாக்குவதற்கு பெண்மய்ய திறனாய்வை அதிகப்படுத்துவதன் மூலமும், பெண் படைப்பாளர்களின் படைப்பை விரிவுபடுத்துவதன் மூலமும் பெண் இருப்பை பதிவு செய்ய இயலும். அவ்வகையில் பெண்ணியத் திறனாய்வின் செயல் தளங்களை உருவாக்குவது எவ்வாறு? என்ற கேள்விக்கு விடை காண்பது அவசியமாகிறது. பெண்ணியத் திறனாய்வில் பெண்மய்ய திறனாய்வு என்பது மற்றொரு அணுகுமுறையாகும். அதாவது பெண் எழுத்தை பெண்ணே எழுதுதல், பெண்ணே வாசித்தல், பெண்ணே ஆராய்தல் தமிழில் இத்தகு திறனாய்வு முறையில் குறிப்பிடத்தக்க முயற்சியை செய்தவர்களில் செல்வி திருச்சந்திரனின் ‘தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண் நிலை நோக்கு’, அ. மங்கையின் ‘பெண்ணிய அரசியல்’ ஆகிய நூல்களே அத்தகு அணுகுமுறையில் குறிப்பிட்டுக் கூறலாம்.

**பெண்ணியத்திறனாய்வு செயற்தளங்கள்**

இன்றைய தமிழ் இலக்கிய ஆய்வுலகில் பெண்ணிய நோக்கென்பது பெண்களது இருப்பை தவிர்த்தே மேற்கொள்ளப்படுகிறது. இந்த பின்புலத்தில்

இலக்கியத்தில் பெண்ணியத் திறனாய்வை செயல்படுத்தும் தளங்களாக பின்வரும் கருத்துருக்களால் அணுக இயலும்.

1.பெண் பங்களிப்பு, 2.பெண் அடையாளம், 3.பெண் மொழி, 4.பெண் கருத்தியல்களைப் படைப்பு வழி இனம் காணுதல், 5. பெண் நிலை நோக்கில் படைப்பும் வாசிப்பும், செயல் தளங்களை படைப்பு, வாசிப்பு நிலையில் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

## பெண் மொழி

பெண்ணால் எழுதப்படும் படைப்புகள் அனைத்தும் பெண்மொழி சார்ந்தது என்று கூற இயலுமா? பெண் படைப்பாளர்களில் எத்தனை பேர் பெண்மய்யவாதிகளாக இருக்கிறார்கள் பெண்மொழி பற்றிய புரிதல் அவசியமான ஒன்றாகும். சுருங்கக்கூறினால் படைப்பாளர்களை இனங்காண மொழி, எழுத்து பற்றிய தெளிவு அவசியம். சமூகத்தில் நிலவும் மதிப்பீடுகளை நிலை நிறுத்தவும், பிரதிபலிக்கவும், புதிய பார்வைகளை அறிமுகப்படுத்தவும் உதவும் கருத்துரு சாதனங்களில் ஒன்று இலக்கியம் எனில் அது மிகையாகாது. இலக்கியத்தில் இக்கருத்துக்களைப் பதிவு செய்ய மொழியே முதன்மைக் காரணமாய் அமைகிறது.

மொழி பற்றி ரௌபாத்தம் குறிப்பிடும் போது, “மொழி ஆள்பவர்களின் அரசியல் தத்துவார்த்த ஆதிக்கத்தின் ஒரு பகுதியாகும். பழக்கத்தில் இருக்கும் சொற்களை அப்படியே ஏற்க இயலாது. அச்சொற்களின் அர்த்தங்களை மாற்றிய பின்பே அவற்றை நம் கையில் எடுக்க வேண்டும்” (பஞ்சாங்கம், 2012b).

இந்த அடிப்படையில் தமிழில் பெண் எழுத்தாளர்கள் பயன்படுத்தும் மொழியைக்கொண்டு அவர்கள் வெளிப்படுத்தும் உலகியல் நோக்கை ஆய்ந்தறிய இயலும்.

## இன்றைய சூழலில் பெண் படைப்பாளர்களின் படைப்புப் போக்கு

பெண்ணுக்கேயுரிய தனிப்பட்ட உணர்வுகளே இன்றைய பெண் படைப்பாளர்களின் முக்கியப் பாடுபொருளாக உள்ளன. காரணம் இலக்கிய வடிவத்திற்குள் மொழிக்குள் செயல்படுத்தும்போது தன் ஆளுமையின்

எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ள இயலும் என பெண் விழைகிறாள். அண்மைக் காலத்தில் உடல் கூற்றியல் அடிப்படையிலும் பெண் கவிஞர்கள் கவிதைகளை படைத்துள்ளனர். நேர் எதிர் நிலைகளையும் தன்னை விளங்கிக் கொள்ளவும், விளங்கிக்கொள்ள முடியாத அர்த்தங்களையும் மொழியின் வாயிலாகத் தேடிச்செல்கிறாள்.

“தன்னைக்கவிதையாக முன் மொழிகிறாள். கவிதை அவளை முன் மொழிகிறது. அவள் இருப்பை முன் மொழிகிறது. கனவுகளை முன் மொழிகிறது. இயங்க விரும்பும் எதிர் உலகத்தை (அ) இவற்றையெல்லாம் உணர்த்தத் திராணியற்று மொழி அவள் முன் நிற்கிறது. அந்த கணங்கள் மட்டுமே கவிதையாக்கப்பட்டுள்ளன” (கிருஷாங்கினி, 2001).

## முடிவுரை

வரலாற்றின் போக்கில் தனது வலிகளை, வேதனைகளை, பெண் என்னும் அடையாளத்தை, பெண் விடுதலைக்கான அறைக்கூவலை, ஏமாற்றங்களை, ஏக்கங்களை, மொழி அரசியலை பதிவு செய்யும் இன்றைய பெண் படைப்பாளர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

## மேற்கோள்கள்

அன்னிதாமசு, ஈ., (2000) தமிழக மகளிரியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா.

கிருஷாங்கினி, (2001) பறத்தல் அதன் சுதந்திரம், காவ்யா பதிப்பகம், சென்னை, இந்தியா.

பஞ்சாங்கம், க., (2012a) பெண்மொழிப் படைப்பு, காவ்யா பதிப்பகம், சென்னை, இந்தியா.

பஞ்சாங்கம், க., (2012b) நவீன இலக்கியக் கோட்பாடுகள், காவ்யா பதிப்பகம், சென்னை, இந்தியா.

பிரிட்டானிகா தகவல் களஞ்சியம், தொகுதி-2 விகடன் பிரசுரம், சென்னை, இந்தியா

# சங்க காலப் பெண்களின் கல்வியும் செயல்பாடும்

# Education and functioning of Sangam period women

ஜா. அருள் சுனிலா [அ, *]

[அ] தமிழ்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம், தேனி – 625601, தமிழ் நாடு, இந்தியா.

J. Arul Sunila [a, *]

[a] Department of Tamil, Jayaraj Annapackiam College for Women Thamaraikulam, Theni District-625601, Periyakulam, Tamil Nadu

Email: srsunilatam@annejac.ac.in

DOI: https://doi.org/10.34256/fem18

## Abstract:

During the Sangam period women were inseparable part of social life and as a driving force in all aspects. The women were educated and the educated in the family were nominated for everything. The Government had also taken place in the way of the educated people. The king respected those who excelled in education. The highest in education were called as Savants. The women of the Sangam period had the skills to write and recite poems. Being eloquent and intelligent, they developed the qualities of evangelism, self-confidence, boldness, forgetfulness, romanticism, generosity in praising other poets and expressed the culture, social concern, and social misery. They created their own personalities and excelled in education, fame and valour as men were equal. They have been courageous in opposing the power forces in society, supporting, understanding, and giving importance to relations and friendship. This article elaborately explains the educational status of women in the Sangam period, the special status of women in education and the promising and creative work they have done for the benefit of society.

**Keywords:**

Education, Sangam Period, Women

## முன்னுரை

சங்க காலத்தில் பெண்கள் சமூக வாழ்வில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகவும், இயங்கும் சக்தியாகவும், இயக்கும் ஆற்றல் படைத்தவர்களாகவும் காணப்படுகின்றனர். பெண்கள் கல்வி கற்றிருந்தனர். குடும்பத்தில் கற்றவர்களே முன்நிறுத்தப்பட்டார்கள். கற்றவர்கள் வழியில் அரசும் நடைபெற்றுள்ளது. கல்வித்தரத்தில் உயர்ந்தோரை மன்னன் மதித்தான். கல்வித்தரத்தில் உயர்ந்தோர் சான்றோர் எனப்பட்டனர். சங்க காலப் பெண்கள் கல்வி கற்றதோடு, கவிபாடும் ஆற்றல் மிக்கவர்களாகவும் விளங்கினார்கள். சொல்வன்மையும், நுண்ணறிவுத் திறனும் உடையவர்களாக இருந்ததால் தூது உரைத்தல், தன்னம்பிக்கையை வெளிப்படுத்துதல், துணிவுடன் செயல்படுதல், மறப்பண்பை வெளிப்படுத்துதல், காதல் உணர்வை எடுத்துரைத்தல், பிற புலவர்களைப் புகழும் பெருந்தன்மை, சமூக அக்கறையுடன் செயல்படுதல், சமூக அவலத்தை எடுத்துரைத்தல் போன்ற பண்புகளைத் தாங்கள் கற்றக் கல்வியின் மூலம் வெளிப்படுத்தினார்கள். தங்களுக்கென்று ஒரு தனித்தன்மையை உருவாக்கிக் கொண்டு, ஆண்களுக்கு இணையாகக் கல்வியிலும், புகழிலும், வீரத்திலும் சிறந்து விளங்கினார்கள். தாங்கள் வாழ்ந்த சமூகப் பின்புலத்தை அறிந்து கொண்டு, சமூகத்தில் அதிகார சக்திகளை எதிர்க்கும் துணிச்சல் மிக்கவர்களாகவும், நல்லவற்றைச் செய்வதற்காக மன்னர்களை ஆதரிப்பவர்களாகவும், புரிந்து கொள்பவர்களாகவும், உறவுக்கும், நட்புக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவும் செயல்பட்டுள்ளனர். இக்கட்டுரையும் சங்க காலப் பெண்களின் கல்வி நிலையையும், கல்வியால் பெண்கள் கவிப்பாடும் சிறப்புத் தன்மையைப் பெற்றிருந்ததையும், சமூக நலனுக்காக, எழுச்சிமிக்க, ஆக்கப்பூர்வமான செயல்களைச் செய்துள்ளதையும் எடுத்துரைப்பதாக அமைகிறது.

## சங்க காலக் கல்வி

சங்க காலத்தில் கல்விக் கூடங்களும், மாணாக்கர்களும் இருந்தனர். பள்ளி போன்ற அமைப்புகளில் கற்ற பாடங்களை ஒருநாள் மன்றத்தில் ஏற்றி

உயர்வு கண்டுள்ளனர். மன்றத்தில் கல்விச்சிறப்பு, போர்ப்படைப் பயிற்சி, நாடகம் போன்றவை அரங்கேறியுள்ளன. குறுந்தொகையில் இம்மன்றத்தைப் பற்றிய குறிப்பைக் காணலாம்.

“அன்னாய் இவன் ஓர் இளம் மாணாக்கன்

தன் ஊர் மன்றத்து என்னன் கொல்லோ?

இரந்தூண் நிரம்பா மேனியொடு

விருந்தின் ஊரும் பெருஞ் செம்மலனே” (குறுந்தொகை - 32)

இப்பாடலில் ஒரு இளம்மாணக்கனைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

“தொல்லாணை நல்லாசிரியர்

புணர் கூட்டுண்ட புகழ் சால் சிறப்பின்

நிலந்தரு திருவின் நெடியோன் போல

வியப்பும் சால்பும் செம்மை சான்றோர்

பலர் வாய்ப்புகர் அறு சிறப்பின் தோன்றி

அரிய தந்து குடி அகற்றி

பெரிய கற்று இசை விளக்கி” (மதுரைக் காஞ்சி, 761-767)

என்ற இலக்கிய அடிகள் நல்லாசிரியரைச் சார்ந்து கற்கும் நடைமுறையை விளக்குவதாக உள்ளது. மதுரைக்காஞ்சியில் பௌத்தப் பள்ளி, அந்தணர் பள்ளி, சமணர் பள்ளி ஆகிய பள்ளிகள் இருந்துள்ளதை அறிய முடிகிறது. அவை பற்றிய விளக்கங்களையும் காணமுடிகின்றது.

“உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே

பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்

சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக வென்னா தவருள்

ஆறிவுடை யோனா றரசுஞ் செல்லும்

வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்

கீழ்ப்பா லொருவன் கற்பின்

மேற்பா லொருவனு மவன் கட்படுமே” (புறம் - 183)

என்ற ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய பாடல் கல்வியின் சிறப்பினையும், கற்றல் சிறப்பினையும், கற்பித்தல் சிறப்பினையும் எடுத்துரைப்பதோடு, தன் பிள்ளைகளுள் கற்றவனையே தாயும்கூட விரும்புவாள் என்ற தகவலிலிருந்து பெண்கள் கல்விக்குக் கொடுத்த முக்கியத்துவத்தையும் அறியலாம்.

“அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப” (தொல்காப்பியம், களவியல், நூற்.எ. 96)

எனச் சுட்டிக் காட்டுகிறார் தொல்காப்பியர், ஆயினும் சங்க காலப் பெண்களில் சிலர் இந்த இயல்பு நிலையில் இருந்து மாறி தனித்தன்மையுடன் விளங்கினர். இதற்குப் பெண்பாற்புலவர்களும், அவர் தம் பாடல்களும் சான்றுகளாகும். ஔவையார், ஆதிமந்தி, காக்கைப்பாடினியார், பாரிமகளிர், பொன்முடியார், வெள்ளிவீதியார், முள்ளியூர் பூதியார், பொத்தியார், நக்கண்ணையார், கூகைக்கோழியார், நச்செள்ளையார் போன்ற பெண்பாற்புலவர்கள் ஆணுக்குச் சமமாகக் கல்வி கற்றுச் சமூகத்தில் உயர்நிலையில் இருந்துள்ளதை அறிகின்ற போது, பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதையும் பெண்கள் அறிவும் புலமையும் பெற்றவர்களாகத் திகழ்ந்துள்ளதையும் அறியலாம்.

சங்க காலத்தில் பெண்கள் எழுத்தறிவு பெற்றிருந்ததுடன் கவிதைகளும் எழுதினர். “பெண்கவிஞர்களின் எண்ணிக்கைக் குறித்துத் தமிழறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. பெண் கவிஞர்களின் எண்ணிக்கையினை உ.வே.சா 38 எனவும், எஸ். வையாபுரிப்பிள்ளை 30 எனவும், ஔவைதுரைச்சாமிப்பிள்ளை 34 எனவும், புலவர் க. கோவிந்தன் 27

எனவும், அவ்வை நடராசன் 41 எனவும் ந. சஞ்சீவி 25 எனவும் தாயம்மாள் அறவாணன் 45 எனவும் குறிப்பிடுகின்றனர்."[1]

## சங்க காலப் பெண்களின் கல்விப் புலமை

சங்க காலப் பெண்களுக்கு இலக்கியம், இசை, நாடகம் போன்றவற்றில் நல்ல பயிற்சி வழங்கப்பட்டது. அக்காலத்தில் பல பெண்கள் இசையிலும், பிற கலைகளிலும் புகழ்பெற்று விளங்கியதைச் சங்க இலக்கியச் சான்றுகள் சுட்டுகின்றன. சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் தன்னந் தனியாகச் சென்று மன்னனைச் சந்தித்துப் பாடி பரிசில் பெற்றனர். மன்னரிடம் தம் வறுமையைப் பற்றிக் கூறாது, போர்ச் சிறப்புகள் கூறும் வீரக் கவிதைகளைப் பாடியுள்ளனர். மானுட ஒழுக்கலாறு, ஒழுக்கம், நன்னெறி வாழ்வை அரசனுக்கு எடுத்துரைத்துள்ளனர். சங்க காலப் பெண்கள் நிலை குறித்து பெ.சு. மணி குறிப்பிடுகையில், 'சமயங்கள், அமைப்புகள் வழியாகவும், தர்ம சாத்திரங்கள் மூலமாகவும், சங்க காலச் சமுதாயத்தில் பெண் வெறுப்புக்கொள்கை கால் கொள்ளாததால் பெண்ணடிமைத் தனம் போன்றவைகள் தோன்றவில்லை"[2] என்கிறார்.

டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள், தமிழ் கூறும் அகத்திணை இயலை, செம்மையுற ஆராய்ந்து 'தமிழ்க் காதல்' என்னும் தம் நூலில் சங்க காலப் பெண்ணுரிமை குறித்துக் கூறுகிறார், 'பண்டையத் தமிழ் சமுதாய அளவில் பெண் கற்கும் உரிமையும், கவிபாடும் உரிமையும், காதல் உரிமையும், காதல் களவு செய்யும் உரிமையும், காதலனை இடிந்துரைக்கும் உரிமையும், இல்லறத் தொழிலுரிமையும், பெருமையும், புகழும் எல்லாம் ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தார்"[3] எனக் குறிப்பிடுகிறார்.

மயிலாப்பூர் பெண்கள் சங்கத்தின் ஆதரவில் 'தமிழ்நாட்டுப் பெண்பாலார்' என்ற தலைப்பில் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் ஆற்றிய உரையில் சங்க காலத்துப் பெண்பாற் புலவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். 'ஆடவர் மகளிர் ஆகிய இருவர்களுக்கும், அறிவு பொதுவாகும். இப்பொழுது நமக்குக் கிடைப்பனவும், 1800 வருடங்களுக்கு முன் இயற்றப்பட்டனவுமாகிய புறநானூறு முதலிய தமிழ் நூல்களால் கடைச் சங்க காலத்தில் பல பெண்கள் நற்புலமை வாய்ந்தவர்களாக இருந்தனரென்பது

தெரியவரும். ஏறக்குறைய ஐம்பது பெண்பாலார் இயற்றிய செய்யுள்கள் இப்பொழுது கிடைக்கின்றன. மற்ற புலவர்களுடைய வாக்குக்கு எவ்வளவு சிறப்பு உண்டோ, அவ்வளவு சிறப்பு இவர்களுக்கும் உண்டு”[4] என்று பெண்பாற் புலவர்களின் புலமைத் திறத்தைப் பாராட்டிய செய்தியை பெ.சு. மணி தம் நூலில் எடுத்தாண்டுள்ளார். இக்கூற்றுகள் வழி பெண்பாற் புலவர்களின் அறிவுத்திறனை அறிய முடிகிறது.

## நுண்ணிய அறிவைப் புலப்படுத்துதல்

அக, புறப் பாடல்கள் பாடிய புலவர்களுள் பெண்பாற்புலவர்கள் கல்வி அறிவில் சிறந்து விளங்கியதோடு, கல்வியால் புலமையும் ஆற்றலும் பெற்றுத் திகழ்ந்தனர். கல்வியோடு, கவித்துவம் மிக்கவராகவும், அரசனுக்கு ஆலோசனை நல்குபவராகவும் இருந்தனர். மக்கள், மன்னர் போன்றவர்களுக்கு ஆலோசனை கூறும் உரிமையும் கொண்டிருந்தனர்.

“இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து
கடியுடை வியன்நக ரவ்வே; அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ” (புறம் - 95)

இப்பாடல் அதியனுக்கும் தொண்டை மானுக்கும் இடையே நடக்க இருக்கும் போரை நிறுத்த முயலும் நிலையில் ஔவை பாடிய பாடல் ஆகும். ஔவை அதியமானைப் பழிப்பது போல் புகழ்வதன் வழியாகவும், தொண்டைமானைப் புகழ்வது போல் பழிப்பதன் வாயிலாகவும் ஔவையின் நுண்ணிய அறிவை அறியமுடிகிறது. பெண்பாற் புலவராக இருப்பினும் யார்க்கும் அஞ்சாது அறிவுரை நல்கும் வீரப் பெண்ணாகச் செயல்படுகிறார். போர் நிகழ்ந்தால் உயிர்ச் சேதம் மற்றும் பொருட்சேதம் ஏற்படும். இயற்கைச் சிதைவுக்கு ஆளாக நேரும் என மன்னனுக்குப் புரிய வைப்பதன் வழி சிறந்த ஆலோசகராகவும் செயலாற்றுகிறார்.

### தன்னம்பிக்கையுடன் செயல்படுதல்

'கற்றவருக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு' என்று தன்னம்பிக்கையுடன் வாழ்ந்தவர் ஔவையார். அதியமான் நெடுமான் அஞ்சி ஔவையாருக்குப் பரிசில்தரக் காலம் நீட்டிக்கிறான். அந்நிலையில் ஔவையார்,

"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" (புறம் - 206)

என்கிறார். இப்பாடல் ஔவையின் தன்மான உணர்வைக் காட்டுகிறது. ஔவையிடம் திறமையும் தன்னம்பிக்கையும் இருந்ததால்தான் அவரால் தன் உணர்வை வெளிப்படையாக உணர்த்த முடிந்துள்ளது. இவ்வாறு பரிசில் நீட்டித்த அரசனிடம் கோபத்தை வெளிப்படையாக, ஆவேசமாகக் கூறுவதற்குக் காரணமாக அமைந்தது அவருடைய கல்வியும், கவிப்புலமையும் ஆகும். இக்கல்விச் செல்வமே அவருக்குத் தன்னம்பிக்கையைத் தந்துள்ளதை அறிய முடிகிறது. தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில்,

"கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்

சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே" (தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்.எ. 253)

என்ற நூற்பாவின் வழி ஒருவருக்குச் சமூகத்தால் கிடைக்கும் பெருமைக்குக் காரணமாய் அமைவது கல்வியே எனச் சுட்டுகிறார். கல்விச் செல்வமே பெண்களுக்குத் தன்னம்பிக்கையைத் தரும் என்ற செய்தியை இதன்மூலம் அறிய முடிகிறது.

### துணிவுடன் செயல்படுதல்

சங்ககாலப் பெண்பாற் புலவர்களிடம் அறிவும், ஆற்றலும் இருந்தது. வெற்றியின் களிப்பில் இறுமாந்திருந்த கரிகால்பெருவளத்தானிடம் சென்ற வெண்ணிக் குயத்தியார், நின்வெற்றியினும், புறப்புண் கொள்ளாத போதும் புறப்புண் எனக் கருதி வடக்கிருந்த சேரன்பெருஞ்சேரலாதனின் சிறப்பே பெருமைக்குரியது எனக் கூறுவதை,

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி

வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!

களிஇயல் யானைக் கரிகால் வளவ!

சென்று அமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற

வென்றோய்! நின்னினும் நல்லன அன்றே

கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை

மிகப்புகழ் உலகம் எய்திப்

புறப்புண் நாணி வடக்குஇருந் தோனே" (புறம் - 66)

எனும் பாடல் வரிகளில் காண முடிகிறது. சங்க காலப் பெண்பாற் புலவர்கள் கற்பனையாக வீரத்தைப் பாடவில்லை. மாறாகத் தாம் நேரில் கண்டு வியந்த உண்மை நிலையினைப் பாடுகின்றனர். நக்கண்ணையார், கோப்பெரு நற்கிள்ளி போரில் வெற்றி பெறுவான் எனச் சிலரும், வெற்றி பெற மாட்டான் எனச் சிலரும் கூறிய நன்மொழிகளைக் கேட்கிறார். அந்நிலையில்,

"அஞ்சிலம்பு ஒலிப்ப ஓடி, எம்இல்,

முழா அரைப் போந்தை பொருந்தி நின்று,

யான்கண் டனன் அவன் ஆடா குதலே" (புறம் - 85)

என்று போர்க்களத்திற்கு நேரில் சென்று நற்கிள்ளி, கிள்ளி ஆமூர் மல்லனோடு போரிட்டு வென்ற காட்சியைப் பாடலாகப் பதிவு செய்துள்ளமை, பெண்கள் கல்வியால் பெற்ற துணிச்சல் என்னும் பண்பை வெளிப்படுத்துகின்றது.

**வீரத்தை வெளிப்படுத்துதல்**

புறத்திணை பாடிய பெண்பாற் புலவர்கள் ஆண் குழந்தைகளின் வீரத்தைப் போற்றுகின்றனர். மீன் உண்ணும் கொக்கின் இறகைப் போன்ற நரைத்த கூந்தலை உடைய மூதாட்டி, அவளுடைய மகன் போர்க்களத்தில் ஆண் யானையைக் கொன்று தானும் மாண்டான் என்ற செய்தியைக் கேட்டவுடன் அவனைப் பெற்ற காலத்திலும் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறாள்.

"மீன்உண் கொக்கின் தூவிஅன்ன

வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்

களிறுஎறிந்து பட்டனன் என்னும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே; கண்ணீர்

நோன்கழை துயல்வரும் வெதிரத்து

வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே" (புறம் - 277)

என்று பூங்கண் உத்திரையார் குறிப்பிடுகின்றார். 'என் மகன் எங்குள்ளான் என்று அறியேன் புலி இருந்து போன புலிக் குகை போல அவனைச் சுமந்து பெற்ற வயிறு இதோ! அவன் போர்க்களத்தில் இருப்பான்' என்று இன்னொரு தாய் எடுத்துரைப்பதைப் புறம் - 86 ஆம் பாடல் மூலம் காவற்பெண்டு எனும் பெண்பாற் புலவர் சுட்டிக் காட்டுகிறார்.

முதியவள் ஒருவள் தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகிட்டான் எனக் கேட்டுக் கோபமடைந்து அவன் அவ்வாறு செய்திருப்பின் அவனுக்குப் பாலூட்டிய முலையை அறுப்பேன் என்று வஞ்சினம் கூறி வாளுடன் போர்க்களம் செல்கிறாள். அங்குச் சென்றவள் அவன் வீர மரணம் அடைந்தது அறிந்து அவன் பிறந்த நாளினும் மகிழ்வதாக, காக்கை பாடினியார் எனும் புலவர் புறம் - 278 ஆம் பாடல் மூலம் எடுத்துரைக்கின்றார்.

போர்க்களத்தில் போராடிய வீரனைப் பகைவர் தாக்கி அழித்தனர். அவனுடைய தாய் அவனுடைய வீரமரணம் குறித்து மகிழும்போது, அவளின் வாடிய முலைகள் பாலூறிச் சுரப்பதை, புறம் - 295 எனும் பாடல் மூலம் ஔவையார் எடுத்துரைக்கிறார். தொடர்ந்து நடந்த போர்களில் தனது நெருங்கிய உறவினர்களை இழந்தவள், போர்ப்பறை கேட்டவுடன், தன்னுடைய ஒரே மகனின் தலைக்கு எண்ணெய்த் தடவி, வெள்ளாடை உடுத்தி, கையில் வேலைத் தந்து, 'போருக்குப் போ' என்று அனுப்புவதை, புறம் – 279 பாடலில் ஒக்கூர் மாசாத்தியார் பதிவுசெய்திருக்கின்றார்.

ஈன்று புறந்தருதல் என்னுடைய முதற்கடமை என்று ஒரு தாய் கூறுவதாக, புறம் - 312 பாடல் மூலம் பொன்முடியார் எடுத்துரைக்கின்றார். இப்படித் தாங்கள் வாழும் சமூகத்தினரைக் காத்திடவும், குறுநில மன்னர்களின் நலனுக்காகப் போரில் ஈடுபடுவதற்காகவும், ஆண் குழந்தைகளைப் பெற்றுத்

தருவதுடன், அவர்கள் மரணமடையும் போது பெருமிதம் கொள்வதுதான் மறக்குடிப் பெண்களின் இயல்பாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**பாராட்டும் பண்புடையவர்**

சேரமான் மாரிவெண் கோவும், பாண்டியன் கானப்போர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஆகிய மூவேந்தரும் ஒரே இடத்தில் இருக்கின்றனர். அவர்களைக் கண்ட ஔவையார் அவர்கள் நல்லது செய்து நலமுடன் வாழ வேண்டும் என்று வாழ்த்திப் பாடுகிறார். மூவேந்தர்கள் ஒன்று கூடியிருந்த சூழ்நிலையைப் பாராட்டுவதன் வாயிலாக ஔவை பிறரைப் பாராட்டும் மனநிலையைப் பெற்றிருந்தார் என்பதை அறியலாம். பாராட்டுவதோடு மூவரையும் வாழ்வில் அறச் செயல்கள் புரிக என அறிவுறுத்துகின்றார். நிலையாமை, நல்வினை முதலிய கருத்துக்களை எடுத்துரைப்பதோடு, மூவேந்தர் ஒருங்கிணைந்த காட்சி அந்தணர் ஓம்பும் முத்தீக்கு உவமையாகக் குறிப்பிடுகின்றார்.

"நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினும் தம்மொடு செல்லா
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்" (புறம் - 367)

எனும் வரிகள் நிலையாமையைக் குறிப்பிடுகின்றன.

"இவண்வரைந்த வைகல்
வாழச்செய்த நல்வினை அல்லது
ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை" (புறம் - 367)

எனும் வரிகள் நல்வினை பற்றிக் குறிப்பைத் தருகின்றன.

"ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த" (புறம் - 367)

என்ற வரிகள் மூவேந்தர் ஒருங்கிணைந்த காட்சியைக் காட்சிப்படுத்துகின்றன.

"கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்தீர்;

யான்அறி அளவையோ இவ்வே; வானத்து

வயங்கித் தோன்றும் மீனினும் இம்மெனப்

பரந்து இயங்கும் மாமழை உறையினும்

உயர்ந்துசமந் தோன்றிப் பொலிக நும் நாளே" (புறம் - 367)

என்ற பாடல் வரிகள் வழி சேர சோழ பாண்டியரை வாழ்த்திய விதத்தை அறிய முடிகிறது. இதன் வழி ஔவை மக்கள் மீது கொண்ட அன்பையும், அரசனுக்கு அறிவுரை கூறும் விதத்தையும் அறியலாம். மலையமான் திருமுடிக்காரியை, நப்பசலையார் புகழ்ந்து பாடும் பாடலில் 'கபிலர்' உம்மைப் புகழ்ந்து பாடிவிட்டார். புதிதாக நாங்கள் என்ன பாடிவிடமுடியும்? என்கிறார்,

"தெறலரு மரபின் நின் கிளையொடும் பொலிய

நிலமிசைப் பரந்த மக்கட்கு எல்லாம்

புலன் அழுக்கற்ற அந்த ணாளன்

இரந்து சென் மாக்கட்கு இனி உடன் இன்றிப்

பரந்து இசை நிற்கப் பாடினன்" (புறம் - 126)

என்று நப்பசலையார் தம் வறுமை தீர்தற் பொருட்டே மலையமான் திருமுடிக்காரிகை கண்டு பாடச் செல்கிறார். அப்படிப்பட்ட நிலையிலும் கூடத் தன்னைப் போன்ற புலவனாகிய கபிலரின் கவித்திறனைப் பாராட்டுவதன் வழி 'மேன் மக்கள் மேன்மக்களே' எனும் நிலையில் உயர்ந்தவராகத் திகழ்கிறார் நப்பசலையார். அதியமான் மலை இடுக்கின் உச்சியில் உள்ள சிறியஇலையையுடைய நெல்லிக்கனியை உண்டு தான் நெடுநாள் வாழ நினைக்காது ஔவைக்குக் கொடுக்கிறார். அதனால் ஔவை அவனை,

"நீல மணி மிடற்று ஒருவன் போல

மன்னுக பெரும நீயே" (புறம் - 91)

என வாழ்த்துகிறார். இப்பாடல் அதியனின் பெருந்தன்மையை, பரந்த மனப்பான்மையைக் காட்டுவதோடு, ஔவையாரிடம் விளங்கிய பாராட்டும் பண்பையும் கண்டுணரலாம்.

**காதல் உணர்வை எடுத்துரைத்தல்**

சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் பாடல் இயற்றும் அளவுக்குப் புலமையும், கல்வியும் பெற்றிருந்தாலும், அதனுள் சில கட்டுபாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாகப் பெண் உவமை சொல்ல வேண்டியிருப்பின் அவளறிந்த பொருட்களை மட்டுமே உவமையாகக் கூற வேண்டுமென்பதை,

“கிழவி சொல்லின் அவளறி கிளவி” (தொல்.பொருள்: 297)

என்று தொல்காப்பியர் உவமையியலில் குறிப்பிடுகின்றார். இதேபோன்று தோழி முதலானோர்க்கும் உவமை கூறுவதற்குரிய இடம் வரையறை செய்யப்பட்டுள்ளது. பெண் தன் உணர்வை வெளிப்படுத்துவதாக ஔவையாரால் புனையப்படும் பாடல் ஆண் மரபுவழிப்பட்ட காதல் போக்கினைச் சித்திரிப்பதாக அமைகிறது. குறுந்தொகையில் தலைவியின் கூற்றாக இடம்பெறும் பாடலில் தலைவி, தன் காதல் நோய்க் கொடுமை அறியாது தென்றல்காற்று என்னை அலைக்கழிக்கிறது. என்மன உணர்வுகளை அறியாது இவ்வூர் உறங்குகிறது. இந்த ஊரார்க்கு என் நிலைமையை எவ்வாறு கூறுவேன் என்று புலம்புகிறாள். இதனை,

“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?

ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு

'ஆ அ ஒல்' எனக் கூவுவேன் கொல்?

அலமரல் அசைவளி அலைப்ப என்

உயவு நோய் அறியாது துஞ்சம் ஊர்க்கே” (குறுந்தொகை - 28)

என்னும் பாடல் உணர்த்தும் பிரிவுத் துயரில் தவிக்கும் தலைவி ஆவேசப்படுபவள் போல் சித்திரிக்கப்படுகிறாள். ‘முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல் ஓரேன்’ ஆ அ, ஒல் என்ற சொற்களின் வழியாகத் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறாள். தனக்கென சமூகம் வரையறை செய்த பெண்களுக்கான இலக்கண வரையறையை மீறித் தானும் சக உயிர், தனக்கும் காம உணர்வுகள் உண்டு, அதனை வெளிப்படுத்தும் உரிமையும் உண்டு எனும் நோக்கில் பெண்ணின் மன உணர்வை ஔவையின் இப்பாடல் பதிவு

செய்கிறது. அள்ளூர் நன்முல்லையாரால் பாடப்பட்டுள்ள குறுந்தொகைப் பாடல் பூப்பெய்திய தலைமகள் உரைத்தது என்னும் துறையில் அமைந்தது. இப்பாடல் தலைவி கூற்றாக இடம் பெறுகிறது. தலைவனைப் பிரிந்த தலைவி,

"குக்கூ' என்றது கோழி; அதன் எதிர்

துட்கென்றன்று என்தூஉ நெஞ்சம்

தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்

வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே" (குறுந்தொகை - 157)

என்கிறாள். கோழி குக்கூ என்று கூவ என்னை மறந்த தலைவரைப் பிரியச் செய்யும் வாளைப் போல விடியற்பொழுது வந்தது. என் மாசற்ற நெஞ்சம் தலைவரைப் பிரிய வேண்டும் என்ற அச்சத்தை அடைந்தது எனத் தலைவி தன் உணர்வை வெளிப்படுத்துகிறாள். காதல் கவிதைகளில் பெண்கள் தங்களுடைய எந்த உணர்வுகளையும் வெளிப்படையாகக் கூறக்கூடாது என்பது சங்க மரபாகும். இம்மரபினை, பெண் கவிஞர்கள் துணிச்சலுடன் மீறியுள்ள செயல்களை உய்த்துநோக்கும் போது அவர்கள் கல்விநிலையிலும், சமூக நிலையிலும் ஆண்களுக்கு இணையான உயரிய நிலையில் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

### தொழில் வளத்தை எடுத்துரைத்தல்

மன்னர், மக்கள் என்ற நிலையில் மட்டும் அல்லாது தொழிலாளர்களின் தொழிற்சிறப்பும் தொழிலின் மேன்மையும் எதிர்காலச் சமூகத்திற்கு எடுத்துக் கூறும் தனித்தன்மை வாய்ந்தவராகப் பெண்புலவர்கள் விளங்கியதை அறியமுடிகிறது. புலத்தி, தச்சன், கொல்லன், உழவன் எனப் பல தொழிலாளர்களின் சிறப்பைக் கூறியுள்ளனர்.

"களர்ப்படு கூவல் தோண்டி நாளும்

புலத்தி கழீஇய தூவெள் அறுவை

தாதுஎரு மறுகின் மாசுண இருந்து

பலர் குறை செய்த" (புறம் - 311)

என்னும் பாடலில் புலத்தியின் உழைப்பை உவமையாக்குகிறார் ஔவை. அதியனின் வலிமையை, வீரத்தை,

“எண் தேர்செய்யும் தச்சன்

திங்கள் வலித்த கால் அன்னோனே” (புறம் - 87)

எனத் தச்சனுக்கு உவமையாகக் கூறுகிறார்.

“வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லனுக்குக் கடனே” (புறம் - 312)

எனக் கொல்லனின் கடமையைப் பொன்முடியார் குறிப்பிடுகிறார்.

“நெடுங்கடை நின்று பகடுபல வாழ்த்தித்

தன்புகழ் ஏத்தினென்” (புறம் - 383)

என்று குறுநில மன்னனாகிய அவியனை மாறோக்கத்து நப்பசலையார் குறிப்பிடுகிறார், உழவுக்கு உதவும் எருதுகளுக்குச் சொந்தக்காரன் என அவியனை ஒப்புமைப்படுத்துவதன் வழியாக ‘உழவர்’ குறித்த புலவரின் கண்ணோட்டத்தை அறியலாம்.

**சமூக அக்கறையுடன் செயல்படுதல்**

தனி வாழ்விலும், அரசவாழ்விலும் வழிகாட்டும் இயல்பு புலவர்களுக்கு உண்டு அதனை,

“எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே” (புறம் - 187)

என்னும் ஔவையின் பாடல் வழி அறியலாம். நாட்டை ஆளும் மன்னன் நல்லாட்சி புரிவதற்குரிய தன்மையில் தன்னைத் தகுதி ஆக்கிக் கொள்ளவேண்டும். அப்போது தான் மக்களும் நன்றாக வாழமுடியும் என்ற சமூக அக்கறை பெண்பாற் புலவர்களின் பாடலில் வெளிப்படுகிறது.

**சமூக அவலத்தை எடுத்துரைத்தல்**

புறநானூற்றில் வளமை மிகுந்த ஊரைக் கண்ணுற்ற புலவர் தாயங்கண்ணியார் அவ்வூர் வறுமை அடைந்ததால் மனம் வருந்துகிறார்.

அவ்வூரின் செல்வச் செழிப்பை,

“கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவியோடு இனியே
புல் என்றனையால் வளங்கெழு திருநகர்” (புறம் - 250)

எனக் குறிப்பிடுகிறார். அவ்வூர் வளமையிழந்து காணப்படும் நிலையில், புல்லரிசி உணவுண்டு வாழும் தலைவியைப் போல அவ்வூர் வளத்தை ஒப்புமைப் படுத்துவதன் வழியாகக் கைம்பெண்களின் துயரை அறியமுடிகிறது. அதேபோல் பூதப் பாண்டியன் இறக்க, அவன் மனைவி உயிர்விடத் துணிகிறாள். அப்போது புலவர்கள் அவளைத் தடுக்கின்றனர். அப்போது அவள்,

“அணில் வரிக் கொடுங்காய் வாள் போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடைஇடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்எள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரல்பெய் பள்ளிப் பாய் இன்று வதியும்
உயவல் பெண்டிரே” (புறம் - 246)

என்று கூறுகிறாள். ஏனெனில் கணவனை இழந்தபின் உயிரோடு இருக்கும் பெண்ணின் நிலை துன்பமானது ஆகும். கணவனை இழந்த கைம்பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தன் பாடலில் பதிவு செய்வதன் மூலம், அன்றைய நாளில் கைம்பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் கண்டறிய முடிகிறது.

## முடிவுரை

சங்க காலத்தில் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கியதையும், கற்ற கல்வியால் சமூகத்தில் உயரிய இடத்திலும், மன்னர் அவையில் கவிபாடும் உரிமையும், அறிவுரை நல்கும் உரிமை பெற்றவர்களாகத் திகழ்ந்துள்ளதை

அறியலாம். தமக்கு வேண்டியதைக் குறிப்பாக உணர்த்த கூடிய நுட்பமான அறிவுத்திறனும், மன்னர்களின் செயல்பாடுகளை நேரடியாக உற்றுநோக்கிக் கருத்துரைக்கும் துணிவும் அக்காலப் பெண் கவிஞர்களிடம் மிகுந்திருந்ததையும் அறிய முடிகிறது. மன்னனை எதிர்த்துப் பேசும் துணிவும், மன்னர் - புலவரிடையே உள்ள உறவு நிலைகள் பெருமதிப்புமிக்கதாக இருந்துள்ளதையும் காண முடிகிறது. போர்ச் சமூகத்தில் பெண்களின் மனம் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் மட்டும் இயங்காமல் மன்னனின் வெற்றிக்குத் தங்களால் முடிந்த அளவில் உதவுவதைக் கடமையாகக் கருதிச் செயல்பட்டதை அறிந்துணர முடிகிறது. பெண்களின் வீரமும், துணிவும், மதிநுட்பமும், சமூக அக்கறையும், தெளிவும், ஆற்றலும் அவர்கள் கற்ற கல்வியின் மூலம் பெற்ற சிறப்புமிகு அடையாளங்களாகப் புலப்படுவதைக் கண்டுணர முடிகிறது.

**மேற்கோள்கள்**

தேவிபூமா, செம்மொழி இலக்கியங்களில் மகளிர், ஷன்லாவின் வெளியீடு, வசந்த் நகர், மதுரை – 3, ப. 56.

பெ.சு. மணி, சங்க கால ஔவையாரும் உலகப் பெண்பாற்புலவர்களும், ப.180.

பெ.சு. மணி, சங்ககால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும், மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு, சிதம்பரம் - 608 001, முதற்பதிப்பு – 2000, ப. 171.

மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001, ப. 152.

## References

Devipuma, Women in Classical Literature, Published by Shanla, Vasant Nagar, Madurai - 3, p. 56.

B.C. Mani, Sangakkala Olavaiyarum World Feminist Poets, Meyyappan Publishing, New Street, Chidambaram - 608 001, First Edition - 2000, p. 171.

Manikkam, V. Supa, Tamil Love, Meyyappan Publishing, 53, New Street, Chidambaram - 608 001, p. 152.

B.C. Mani, Sangakkala Olavaiyarum World Feminist Poets, Meyyappan Publishing, New Street, Chidambaram - 608 001, First Edition - 2000, p.180.

# சாதியத்தால் நொறுக்கப்படும் பெண் பாலினம்

# Female gender crushed by casteism

**ச. கல்பனா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோவை – 43, தமிழ்நாடு, இந்தியா.

**S. Kalpana** [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore – 43, Tamil Nadu, India.

Email: kalpanaabimanyu@gmail.com

DOI: https://doi.org/10.34256/fem19

## Abstract:

Casteism is an immoral structure that discriminates the humans to the superior and the inferior and enslaves the inferior to work for the superior. Casteism is masculine fundamentalism. Caste strongly embraces elements of gender discrimination. Patriarchy plays an important role in perpetuating caste today. Women are born into the upper and lower strata of the caste but are enslaved and oppressed by the caste men. Contemporary caste politics revives with a focus on women. Caste crushes women indirectly in the context of aesthetics and directly in dominant spaces. Indirectly in the Honour Killing and Female Infanticide, casteists have massacred self-caste women and established that caste is superior to women's lives. Directly the dominant castes are sexually exploiting marginalized caste women. Gender equality cannot be built without distorting caste. Caste emancipation and women's emancipation need to be considered together. Therefore, feminist ideas for TamilNadu should be in line with the principles of caste liberation.

## Key Words

Casteism, Dalit women, Female Infanticide, Gender, Honour killing.

**முன்னுரை:**

பெருவாரியான சமூகப் பண்பாட்டு வாழ்வியல்களில் பெண்கள் இரண்டாம் தரப் பாலினமாக நிறுவப்பட்டுள்ளதால் அனைத்துவகை மனித உரிமை மீறல்களிலும் முதலில் பாதிக்கப்படுவது பெண்களாக இருக்கின்றனர். சாதியம் என்பது பாகுபாட்டுடன் கூடிய ஆண்களுக்கான அதிகாரமட்டமாகும். பலதரப்பட்ட மனிதர்களில் ஒரு சில ஆண்களையும் பெண்களையும் உயர்ந்த சாதியென்றும் ஒரு சில ஆண்களையும் பெண்களையும் தாழ்ந்த சாதியென்றும் பொதுவாகப் பாகுபடுத்தி ஆண்டான் அடிமை உளவியலை விதைக்கும் சாதியம், ஒரே சாதியைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் தனித்த குடும்ப அமைப்புகளுக்குள் ஆண்சாதி பெண்சாதியென்று பிரித்து பாலினப் பாகுபாட்டு உளவியலை விதைக்கின்றது. தமிழகத்தின் பெண்ணியச் சிக்கல்கள் அனைத்தும் சாதியத்துடன் நெறுங்கிய தொடர்பு கொண்டவை. நிறப்பாகுபாட்டைக் கொண்டியங்கும் அமெரிக்க சமூகத்தில் வெள்ளையினப் பெண் மீதான ஒடுக்குமுறைகளும் கருப்பினப் பெண் மீதான ஒடுக்குமுறைகளும் வேறுபட்டு இருப்பதைப் போல அமெரிக்கப் பெண்ணிய செயல்பாடுகளிலிருந்து மிகவும் பின்தங்கியிருக்கும் சாதியப் பாகுபாட்டை மையமாகக் கொண்டியங்கும் இந்தய ஒன்றியத்திலும் தமிழ்ச் சமூகத்திலும் உள்ள பெண்கள் சந்திக்கின்ற ஒடுக்குமுறைகளும் சாதிக்கு சாதி வேறுபட்டு இருக்கின்றன. ஆதிக்க சாதிப் பெண் அனுபவிக்கின்ற வன்முறைகளுக்கும் விளிம்பு நிலை சாதிப் பெண் அனுபவிக்கின்ற வன்முறைகளுக்கும் நிறைய வேறுபாடுகள் நிலவுகின்றன. சாதியத்தில் மறைமுகமாகத் தாக்கப்படுவதால் ஆதிக்க சாதிப் பெண்களுக்கு சாதியத்தின் மீதானப் பற்று சிதையாமல் இருக்கின்றது. எனவே ஆதிக்க சாதிப் பெண்கள் விளிம்பு நிலைச் சாதிப் பெண்களை சாதிய ரீதியாக ஒடுக்கி இழிவுபடுத்தவும் தயங்குவதில்லை. பெண்களை ஒடுக்குவதில் ஆணாதிக்கம் எவ்வளவு பங்காற்றுகின்றதோ அதே அளவு பங்கை சாதி ஆதிக்கமும் ஆற்றிவருகின்றது. சாதியத்தால் நேர்முகமாக நொறுக்கப்படும் விளிம்பு நிலைச் சாதிப் பெண்களின் நீதிக்குரல்கள் ஆதிக்க சாதி ஆண்களாலும் பெண்களாலும் ஒன்றுபட்ட பொது உளவியலால் நசுக்கப்படுகின்றன. பெண்ணியம், சமூகவியல், தலித்தியம் போன்ற ஆய்வு அணுகுமுறைகளைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சாதியத்தால் நொறுக்கப்படும் பெண்களின் வலிகளையும் தீர்வுகளையும் இவ்வாய்வுக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

**சாதியக்கட்டமைப்பிற்காக மறைமுகமாக பலியாக்கப்படும் பெண்கள்**

தொடர்ந்து சாதியப் பாரம்பரியத்தை தலைமுறை தலைமுறைகளாகக் கடத்துவதற்கு பெண்களின் உடல் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. சாதி ஆதிக்கம் அல்லது அடையாளம் என்பது ஆண்களின் அசையாச்சொத்து; பெண்களை வைத்தே ஆண்கள் அச்சொத்தைத் தங்களுக்குள்ளாகக் கைமாற்றிக்

கொண்டு பயனடைகின்றனர். பெண்களுக்கு அச்சொத்தினால் கல்வி, பொருளாதார அந்தஸ்த்து, அதிகாரம் என எவ்விதப் பயனும் ஏற்படப்போவதில்லை. சாதிய நிறுவனத்தில் ஆண்களின் சுய அதிகாரங்களுக்காகப் பெண்கள் கடத்தியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளனர். சாதியத்தைக் கடத்துவதற்கானத் தகுதிகளைப் பெறாதப் பெண்களையும் கடத்துவதற்கு உடன்படாதப் பெண்களையும் சாதிய நிறுவனம் கொன்றுவிடுகின்றது அல்லது அப்பெண்களின் வாழ்க்கையையே முடக்கிப்போட்டு அடுத்து வரும் பெண்களுக்கு அப்பெண்களின் வாழ்க்கையைச் சுட்டிக்காட்டி அச்சுறுத்திப் பாடம் புகட்டுகின்றது. ஆணவப்படுகொலைகளாலும் பெண்சிசுக் கொலைகளாலும் கொலை செய்யப்பட்டப் பெண்களும் குழந்தைத் திருமணங்களால் இளமையை இருளில் கழிக்கின்றப் பெண்களும் சாதியால் சாதிக்காகப் பலியானவர்களாவர்.

**சாதிய ஆணவத்தால் படுகொலை செய்யப்படும் பெண்கள்**

சாதிய நிறுவனங்கள் தொடர்ந்து வெளிப்படையாகப் பெண்களிடம் சுயசாதி ஆண்களை மட்டுமே திருமணம் செய்துகொள்ளும்படி கட்டாயப்படுத்திவருகின்றன. மேலும் புலி புலியோடு இணைவதைப் போல இனம் இனத்தோடு சேருவதைப்போல குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண் அதே குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த ஆணுடன் சேர்வதுதான் இயற்கை நியதியென்றும் தமிழர் மரபென்றும் பொய்யானக் கருத்துக்களை தமிழ் என்ற அடையாளத்துடன் பரப்புரை செய்து வருகின்றனர். தமிழர்களின் சமூக மரபென்பது **'யாதும் ஊரே யாவரும் கேளிர்**"(புறம்-192(1)) என்று அனைத்து மனிதர்களையும் சமத்துவ அறத்துடன் நடத்துவதாகும். தமிழர்களின் காதல் மரபென்பதும் பெற்றோர் வழிப்பெறும் சாதி, மதம், இனம், மொழி, வர்க்கம் போன்ற பின்னணிகளை அறியாது மழையைப்போலப் பாகுபாடன்றி இயற்கையாக இருவருள் தோன்றக்கூடியது என்பதை,

**'யாயும் ஞாயும் யாரா கியரோ**

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**

**யானும் நீயும் எவ்வழி அறிதும்**

**செம்புலப் பெயல்நீர் போல**

**அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"** (குறுந்தொகை – 40)

இச்செய்யுள் உணர்த்துகின்றது. அறிவியல் பூர்வமாகக் காதலை பார்த்தாலும் விருப்பத்திற்குரிய ஆணை நோக்குகின்ற பொழுது

டெஸ்டோஸ்டிரோன் (Testosterone), ஈஸ்ட்ரோஜன் (Estrogen), டோப்பமைன் (Dopamine), நோரேபினிஃப்ரைன் (Norepineperine), செரேட்டோனின் (Serotonin), ஆக்ஸிடோசின் (oxytocin), வஸோப்ரஸின் (Vasopressin) ஆகிய ஹார்மோன்கள் பெண் உடலில் தூண்டப்பட்டு இயற்கையாக ஏற்படுவதே காதலாகும். காதல் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் ஏற்படுகன்ற சமூகக் கட்டமைப்பிலேயே பாலின இடைவெளிகள் இல்லாமல் இருக்கும். பெண்களின் காதல் உரிமைகளையும் தேர்வுச் சுதந்திரத்தையும் சாதிய நிறுவனங்கள் அபகரித்துக் கொண்டு சில நூற்றாண்டு காலமாக சுயசாதித் திருமணங்களை மட்டுமே காதலென அங்கீகரித்து சாதியத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கின்ற சமூகம் பாலின சமத்துவத்தைக் கடைபிடிப்பதில் உலக அளவில் மிக மோசமாகச் செயலாற்றி வருகின்றது. உலகப் பொருளாதாரக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள பாலின இடைவெளிக் குறியீட்டில் 153 நாடுகளைக் கொண்ட தரவரிசைப் பட்டியலில் இந்திய ஒன்றியம் 112-ஆவது இடத்தில் உள்ளது. பெண்களின் உரிமைகள், காதல் விருப்பங்கள் போன்றவற்றிற்கெல்லாம் சாதியம் துளிகூட முக்கியத்துவம் அளிப்பதில்லை என்பதை ஆணவப்படுகொலைகள் எடுத்துக்காட்டுகின்றன.

சாதிய நிறுவனத்தின் அளவீட்டில் மெய்யானக் காதலென்பது சாதியக் கட்டமைப்பைக் காப்பாற்றிச் சாதிய சமூகத்தை வளர்த்தெடுப்பதற்கான உற்பத்தி படிநிலையாகும். பிற்படுத்தப்பட்ட வகுப்பின் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண் அதே சாதியைச் சேர்ந்த ஆண் ஒருவனைத் திருமணம் செய்வதும் முன்னேரிய வகுப்பின் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண் அதே சாதியைச் சேர்ந்த ஆண் ஒருவனைத் திருமணம் செய்வதும் பட்டியலினத்தின் அல்லது பழங்குடியினத்தின் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண் அதே சாதியைச் சேர்ந்த ஆண் ஒருவனைத் திருமணம் செய்வதும் சாதியக் கட்டமைப்பின் அளவீட்டில் காதலின் புனிதமென பண்பாட்டு ரீதியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அறிவியலுடன் பொருந்தாத இத்தகைய போலிக் காதல் அளவீடுகளைப் புறந்தள்ளியும் அனைவரும் சமமென்ற இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சாசனத்தின் சனநாயகப் பண்புகளின்படியும் சாதிப் பாகுபாடுகளைப் புறந்தள்ளியும் இயற்கையில் காதல்வயப்படுகின்ற பெண்களை சாதிய சமூகம் பலிதீர்க்கத் துடிக்கின்றது. விரட்டி அச்சுறுத்துகின்றது. அப்பெண்களைக் கொலையும் செய்கின்றது. சாதி ஆதிக்கவாதிகளின் பெண்கள் பிற சாதி ஆண்களை விரும்பிக் காதலிப்பதையும் கரம்பிடிப்பதையும் தங்கள் சாதிக்கு நேர்ந்த அவலமெனக் கருதும் பொது உளவியல் நிலவுகின்றது. மானுட நெறியிலும் அரசியலமைப்புச் சட்டத்தின்படியும் சாதியென்பதே மாபெரும் அவலம் என்பதை உணராத சாதிவெறிப் பிடித்த பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், ஊரார், உறவினர்கள்

என அனைவரும் வேறு சாதி ஆண்களைக் காதலிக்கின்றப் பெண்களைக் கொலை செய்வதன் மூலம் தங்கள் சாதிப் புனிதம் பேணப்படுவதாகக் கருதுகின்றனர். பாலூட்டி வகையில் சில விலங்குகள் பல குட்டிகளைப் பிரசவிக்கையில் ஏற்படும் கடும் வலியையும் பசியையும் தணித்துக்கொள்ள குட்டிகளில் பலவீனமானக் குட்டிகளைத் தின்னும் வழக்கமுடையவை. மனித விலங்கு பிற விலங்குகளிடமிருந்து வேறுபட்டுத் தனித்துவிளங்கப் பண்பட்டக் குழந்தை வளர்ப்பு முறைமையும் முக்கிய பங்காற்றுகின்றது. சாதிய மனநிலையில் ஊரிப்போய் வேறு சாதி ஆண்களைக் காதலித்துவிட்ட ஒரே காரணத்திற்காக பெற்று வளர்த்த மகள்களையே கொலை செய்கின்ற சாதியப் பெற்றோர்கள் பண்பட்ட மனித இனத்தை மீண்டும் பண்படாத மிருக நிலைக்கே பின்னோக்கி இழுத்துச் செல்கின்றனர்.

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தைச் சேர்ந்த பிரியா என்ற பெண் காளி என்ற வேறு சாதி இளைஞனைக் காதலித்துக் கரம்பிடித்ததால் ஆத்திரமடைந்த பிரியாவின் தந்தை சீனிவாசன் தன் மகளைக் கொலை செய்துவிடுகிறார். சீனிவாசனும் மகளை பாசத்தோடு வளர்த்த சராசரி தந்தைதான். ஆனால் எப்படி மகளைக் கொலை செய்யத் துணிந்தார் என்பதை அறியும் விதத்தில் 'உங்கள் மகளைவிட சாதிப் பெரிதா என்று கள செயல்பாட்டாளர் கேட்டபொழுது சீனிவாசன் சாமியைவிடச் சாதி பெரிது" (சாதி தேசத்தின் சாம்பல் பறவை-78) என்று பதிலளித்துள்ளார் என்பதில் சாதியப் பெற்றோர்களின் உளவியல் தென்படுகின்றது. சாதியவாதிகள் தொடர்ந்து பெண்களை சாமியாக மதிப்பதாகக் கூறினாலும் மெய்யாய் அவர்கள் பெண்களை சக மனிசியாய்க் கூட மதிப்பதில்லை. சாதியைக் கடத்தும் முக்கியக் கடத்தி என்பதாலேயேப் பெண்களை மதிப்பதாய் அடையாளப்படுத்திக்கொள்கின்றனர். சாதியத்தைக் கடத்த முரண்படுகின்றப் பெண்களை முடித்துக்கட்டிவிட்டு சாதியத்தை பெண்களின் உயிரைவிட உயர்வானதென நிறுவுகின்றனர். தேனி மாவட்டம் கம்பம் பகுதியிலுள்ள முத்தாலம்மனும் கம்பை நல்லூரிலுள்ள செல்லியம்மனும் வேறு சாதியைச் சேர்ந்த இளைஞர்களைக் காதலித்ததற்காகக் கொல்லப்பட்டவர்கள்தான். சுயசிந்தனைகள் துறந்து சாதியத்தைக் கடத்தி விதைத்த சாதியத்தை வளர்த்தெடுக்கும் பணியில் ஈடுபடும் வரை உயிருள்ளப் பண்டமாகச் சாதிய நிறுவனங்கள் பெண்களை நடத்துகின்றன. ஈடுபடாத சூழல்களில் அப்பெண்களைக் கொலை செய்து சாமியாக்கிவிடுகின்றன. சாதிக்கோட்பாடுகளின்படி சுயசாதி ஆண்களைத் திருமணம்புரிந்து சாதியப் புனிதத்தை முதல் கட்டமாகக் கடைபிடித்து பெண்கள் வாழ்க்கை நடத்தினாலும் சாதி விதைகளை(விந்தணு) சாதி வாரிசுகளாக(குழந்தை) கருவாக்க இயலாதப் பெண்களைச் சாதிய சமூகம் மலடியென்னும் முத்திரை பொறித்து செல்லாக் காசென்று வீசிவிடுகின்றது. அப்பெண்களைத் திருமணம் புரிந்த ஆண்கள் தங்கள் சாதியின் வாரிசுகளை விதைக்க மற்றுமொருப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு சாதியத்தையும் சாதி வழிவந்த சொத்துக்களையும்

அப்பெண்ணின் வழியாகக் கடத்தி சாதியத்தின் மதிப்புமிகு நாணயமாகிவிடுகின்றனர். எனவே சாதியம் ஆண்களின் பலதார மணத்தையும் ஆதரிக்கின்றது. சாதிக் குடும்ப அமைப்புகள் பெண்களைத் திருமணத்தின் மூலம் குழந்தைப் பெற்றெடுக்கும் இயந்திரங்களாக மட்டுமே முன்னிலைப்படுத்துகின்றன. சாதியக் குடும்பங்களில் மனைவியாக்கப்படும் பெண்கள் பிறந்த வீட்டின் நிரந்தர வாரிசுரிமை, கல்வி, பணி, பொருளாதார அந்தஸ்த்து போன்ற அடிப்படை உரிமைகளையும் கனவுகளையும் இழக்கின்றனர். அடிப்படை உரிமைகள் பறிபோன பொழுது மனமுடையாத அப்பெண்களை சாதியக் குடும்பங்கள் குழந்தைப் பெறுவதில் சற்றுத் தாமதம் ஏற்படின் மனமுடைந்து சோர்ந்திடும்படியும் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டும்படியும் ஒடுக்குகின்றன.

சாதியவாதிகளின் மகன்கள் வேறு சாதிப் பெண்களைக் காதலித்தால் மகள்களைக் கொல்வது போன்ற எதிர்வினைகளாற்றி மகன்களைக் கொல்வதில்லை. மாறாக மகன் மணமுடித்த வேறு சாதிப் பெண்ணைத் தரக்குறைவாக சாதி ரீதியில் இழிவுபடுத்துவது, தற்கொலை செய்துகொள்ளும்படி வற்புருத்துவது போன்ற வன்முறைகளை அப்பெண்ணின் மீதே கட்டவிழ்த்துவிடுகின்றனர். புனிதம், தீட்டு, அவமானம் என அனைத்திலும் பெண்களின் உடலே சாதியத்தால் துண்டாடப்படுகின்றது. பெண்களின் உடலைச் சாதியவாதிகள் சாதியின் தூய்மை நிறுவனமாகக் கருதுகின்றனர். பெண்களின் கருப்பை சாதி விளையும் நிலமாகவும் அந்நிலத்தின் உரிமை அப்பெண்கள் சார்ந்திருக்கும் சாதியைச்சேர்ந்த ஆண்களுக்கு மட்டுமே உரியதாகவும் வலியுறுத்தி ஆதிக்கம் செலுத்துகின்றனர். சாதியத்தின் விதை (விந்தணு) சுய சாதி ஆண்களால் பெண்களின் கருப்பை என்னும் நிலத்தில் விதைக்கப்பட்டு சாதியம்(சாதியின் வாரிசுகள்) பாரம்பரியமாக வளர்வதாக சாதிவாதிகள் கருதுகின்றனர். கருப்பையை சாதி விளையும் நிலமாகக் கருதும் சாதியம் ஆண்களுக்கு நில உடமையாளனுக்குரிய அதிகாரங்களை அளிக்கின்றது. அதிகாரமானது தங்கள் சாதிப் பெண்களின் நிலத்தில் (கருப்பை) தங்களது விதைகள்தான் (விந்துக்கள்) விளைய வேண்டுமென ஆதிக்கமடைகின்றது. வேறு சாதி ஆண்களின் விதைகள் தங்கள் சாதிக்குச் மட்டுமே சொந்தமெனக் கருதும் நிலமென்னும் பெண்களின் கருப்பையில் விளைவதை விரும்பாத சாதியவாதிகள் தங்கள் சாதிப் பெண்கள் வேறு சாதி ஆண்களைக் காதலித்து சட்டப்படி மணமுடிப்பதை ஏற்றுக்கொள்வதில்லை. பெண்கள் விரும்பி சாதி மாறித் திருமணம் செய்து கொள்வது தொடர்ந்தால் சாதியம் என்ற அடித்தளப் பாகுபாட்டுக் கட்டமைப்பு உடைந்துவிடும் என்பதாலும் ஆதிக்க சாதியினரைக் கையெடுத்துக் கும்பிடும் விளிம்பு நிலைச் சாதியினர் தங்கள் சாதிப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதன் மூலம் தங்களுக்கு நிகராக நின்றுவிடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகவும் பெற்ற மகள்களைக் கூட சாதி ஆணவத்திற்காக முன்னேரிய மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த சாதிய உணர்வாளர்கள்

கொலை செய்கின்றனர். தெரிந்தோ தெரியாமலே சுய சாதி உணர்வை கடத்த மறுத்து வேறு சாதி ஆண்களைக் காதலிக்கும் பெண்கள் சாதியப் பெற்றோர்களால் கொள்ளப்படுகின்றனர். அல்லது அப்பெண்களைக் காதலிக்கும் விளிம்பு நிலைச் சாதியைச் சேர்ந்த ஆண்களைக் கொலை செய்துவிட்டு அப்பெண்களின் எதிர்காலத்தை நொறுக்கிவிடுகின்றனர். சுய சாதி மறுத்த காதல் விவகாரங்களால் மட்டும் தமிழகத்தில் முறையே 2014-ல் 239; 2015-ல் 175; 2016-ல் 180; 2017-ல் 123; 2018-ல் 130 ஆணவப்படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. 2019 ஆம் ஆண்டு மட்டும் சாதியத்தால் 53 பெண்கள் ஆணவப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சாதியம் பெண்களை கருணையின்றி நொறுக்குவதற்கான சான்றுகளாக ஆணவப்படுகொலைகள் அமைந்திருக்கின்றன.

**சாதியமும் பெண் சிசுக்கொலைகளும்**

மேலோட்டமாகப் பார்க்கின்ற பொழுது பெண் சிசுக்கொலையென்பது பாலினம் சார்ர்ந்த சிக்கலாகவும் பெண் மீதான வெறுப்பரசியலாகவும் தோன்றும். ஆழமாக ஆய்கையில் அதன் சாதிய வக்கிரம் வெளிப்படும். கருவில் வளர்வது பெண் என்று தெரிந்தால் கருக்கலைப்பிலும் பெண் சிசுவாகப் பிறந்தால் சிசுக் கொலைகளிலும் சாதியப் பெற்றோர்கள் ஈடுபடுகின்றனர். மானுட இனப்பெருக்க நிகழ்வில் பெண்ணின் கருப்பையில் X – என்ற பெண் பாலின குரோமோசோமும்(X- நிலையான குரோமோசோம் ஆகும்) ஆணின் விந்தணுவில் வரும் பெண் பாலினத்தைத் தீர்மானிக்கின்ற X-குரோமோசோமோ அல்லது ஆண் பாலினத்தைத் தீர்மானிக்கின்ற Y-குரோமோசோமோ இணைந்து கரு உருவாகின்றது. கரு வளர்ச்சியின் தொடக்கப் பகுதியில் கரு பெண் கருவாகவே வளரும். எனவேதான் ஆண்களுக்கும் சில உடல் உறுப்புகள் பெண்களின் வடிவத்தை மட்டும் பெற்று பயனற்றதாய்த் திகழ்கின்றன. விந்தணுவின் Y- குரோமோசோம் நிலையான குரோமோசோமுடன் இணைந்தால் ஆண் பாலினமாகவும் X- குரோமோசோம் நிலையான குரோமோசோமுடன் இணைந்தால் பெண் பாலினமாகவும் கரு வளர்வது இயற்கை. பெண்ணாகப் பிறந்த குற்றத்திற்காகச் சிசுக்களைக் கொலை செய்வதாக கொலை செய்தப் பெற்றோர்கள் குறிப்பிடுகின்றனர். பெண்ணாகப் பிறந்தது சிசு செய்த குற்றமல்ல. X- குரோமோசோமைக் கொடுத்த தந்தைதான் குற்றவாளியாக்கப்பட வேண்டும் என்ற அறிவியல் பின்னணிகளையெல்லாம் அறியாமல் பெண் குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்மார்களைப் பொட்டையாப் பெத்துப்போடுகிறாளென்று வசைபாடியும் சாதியம் பெண்சிசுக்கொலைகளைச் சடங்கு போல் நடத்திவருகின்றது. பெண் பாலினமாகப் பிறந்த காரணத்தினால் மட்டும் பெற்றோர்கள் பெண் சிசுக்களைக் கொலை செய்வதில்லை. பெண் சிசுவை வளர்த்து ஆளாக்கி சுய

சாதி ஆணுக்கு கேட்கின்ற வரதட்சணைகளைக் கொடுத்துத் திருமணம் செய்துவைப்பதில்தான் சாதியப் புனிதம் பேணப்படுவதாக சாதிப் பெற்றோர்கள் கருதுகின்றனர். பெற்றோர்களால் வரதட்சணைக் கொடுக்க இயலாமல் போனால் சுய சாதி ஆண்கள் மகளைத் திருமணம் செய்து கொள்ளாமல் புறக்கணித்துவிடுவார்கள் என்பதாலேயே வரதட்சணைத்தர வாய்ப்பில்லாத பெற்றோர்கள் பெண் சிசுக்கள் பிறந்ததுமேயே கொன்றுவிட்டுக் காரியத்தை முடித்துக் கொள்கின்றனர். கொலை செய்யாமல் விட்டுவிட்டால் சுய சாதி ஆண்களின் புறக்கணிப்பினால் இயற்கையின் நியதிகளால் பெண்கள் வேறு சாதி ஆண்களைக் காதலித்துவிட வாய்ப்புகளுண்டு. காதலித்துவிட்டால் உயர்ந்தவன் தீண்டத்தகாதவன் என்ற உழைப்புச் சுரண்டலை மையமிட்ட சாதியக்கட்டமைப்பு உடைந்துபோய்விடும் என்பதனாலேயே பெண்சிசுக் கொலைகளை வரதட்சணைக் கொடுக்க வசதி வாய்பற்றவர்கள் செய்கின்றனர். வரதட்சணை தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு அரசு சீரான நடவடிக்கைகளை எடுத்த பின் பெண்சிசுக் கொலைகளின் வீதம் சற்றுக் குறையத் தொடங்கியது. ஆனால் சாதிய சமூக வாழ்வியலில் வரதட்சணை என்றக் கொடுங்குற்றம் சீர் என்ற புனிதப்படுத்தப்பட்ட அழகியலுக்குள் கொண்டுவரப்பட்ட பின் 50 சவரன் நகையும் மாப்பிள்ளைக்கு மகிழுந்தும் குடித்தனம் நடத்த பாத்திரங்களும் பண்டிகைகளுக்குப் பரிசுப் பொருட்களும் கொடுத்து சிறப்பாகச் சீர் செய்யும் மணமகளின் பெற்றோர்களே சாதியின் கௌரவத்திற்குரியவர்களென்ற பொது உளவியல் உருவாகியுள்ளது. சாதியக் குடும்பங்கள் மணமகளை மணமகன் வீட்டிற்கு அழைத்து வருகையில் மகாலட்சுமி வந்துவிட்டால் என்று வரவேற்கிறதே தவிற மணமகள் முது முனைவர் பட்டம் வரையிலான உயரியப் படிப்புக்களையெல்லாம் படித்திருந்தாலும் சரஸ்வதி வந்துவிட்டாலென அழைப்பதில்லை. தொடக்கத்திலிருந்து இன்று வரை சாதியம் சீர்வரிசை சுமந்து வரும் பொருளாதார அடிமையாகவே பெண்களை வைத்திருக்கின்றது. வரதட்சணை என்பது பெண்களை நிராயுதபாணியாக நிற்க வைத்து நொறுக்கும் சாதியத்தின் வன்ம வழக்காறுகளுள் ஒன்றாகும். Nஊசுடீ (NயுவுஐழுNயுடு ஊசுஐஆநு சுநுஊழுசுனுளு டீருசுநுயுரு) தரவுகளின்படி 1998 முதல் 2018 வரை தமிழகத்தில் பதிவான வரதட்சணை வழக்குகளின் எண்ணிக்கை முறையே 1998-ல் 176; 1999-ல் 196; 2000-ல் 191; 2016-ல் 58; 2017-ல் 48; 2018-ல் 55 வழக்குகளும் பதிவாகியுள்ளன. வரதட்சணையென்ற சாதிக்குள்ளான குடும்ப வன்முறைகள் உள்ளவரை பெண்சிசுக் கொலைகளும் நிகழ்ந்து கொண்டே இருக்கும் என்பதை தமிழகத்திலும் இந்திய ஒன்றியத்தலும் பதிவாகியுள்ள பெண்சிசுக் கொலைகளின் வழக்குகள் பறைசாற்றுகின்றன. 2015 முதல் 2019 வரை தமிழகத்தலும் இந்திய ஒன்றியத்திலும் பதிவான பெண் சிசுக் கொலை வழக்குகளின் எண்ணிக்கைகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| ஆண்டு | தமிழகம் | இந்திய ஒன்றியம் |
|---|---|---|
| 2015 | 2 | 91 |
| 2016 | 2 | 93 |
| 2017 | - | 73 |
| 2018 | 2 | 56 |
| 2019 | 2 | 73 |

இவையல்லாமல் மேலும் எண்ணற்றப் பெண் சிசுக் கொலைகள் அரசாங்கத்திற்கு தெரியாமல் மறைமுகமாகவும் தந்திரமாகவும் நடத்தப்படுகின்றன.

**சாதியமும் குழந்தைத் திருமணங்களும்**

காதலென்ற உளவியல் மனித எண்ணங்களைச் சமநிலைப்படுத்தக் கூடிய சமூக உறவுநிலையாகும். உயர்ந்தவர் ↔ தாழ்ந்தவர்; கருப்பினத்தவர் ↔ வெள்ளையினத்தவர்; ஆண் ↔ பெண் போன்ற பாகுபாட்டுக் கூறுகளைத் தகர்த்து சமத்துவத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் காதலுக்குண்டு. சாதியம் காதலை எதிர்ப்பதற்கு முதன்மைக் காரணமும் இதுதான். காதல் சாதியத்தை உடைத்து ஆதிக்க சாதியினரையும் விளிம்பு நிலைச் சாதியினரையும் ஒரே நேர்க்கோட்டில் நிறுத்திவிடக் கூடியது. சாதியை கடத்தும் கடத்திகளாகக் கருதப்படும் பெண்கள் வளர்ந்து இளமைப் பருவத்தில் இயற்கையாக ஏற்படும் காதலினால் வேறு சாதி ஆண்களைத் திருமணம் செய்து கொண்டால் சாதியம் சிதைந்து சுரண்டலால் வந்த சாதியச் சொத்துக்கள் பல சாதியினராலும் பகிர்ந்து கொள்ளப்படும்; சாதியின் வழிவந்த மரியாதைகளும் ஆதிக்க உணர்வுகளும் அதிகாரக் கனவுகளும் தரைமட்டமாகிவடும் என்பதால் வளரும் பயிரை முளையிலேயே கிள்ளி வைப்பது போல பெண்களை குழந்தைகளாக இருக்கும் பொழுதே சிந்திக்கத் தொடங்குவதற்கு முன்பே சுய சாதி ஆண்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் நிரலை சாதியம் இயக்கி வருகின்றது. இதனால் பெண் குழந்தைகளின் எதிர்காலமே பாலடைகின்றது. சாதியம் உடையாமல் இருக்க பெண்களின் வாழ்க்கை சாதியவாதிகளால் நொறுக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் காமம் பற்றி அறிவதற்கு முன்பே பெண்கள் கருவுருவதை சாதியம் அனுமதித்திருந்தது. பிஞ்சுக் குழந்தைகளின் விதவைக் கோலத்தை சாதியம் வேடிக்கை பார்த்திருந்தது. குழந்தைத் திருமண ஒழிப்புச் சட்டம் (CHILD MARRIAGE RESTRAINT ACT 1929) ஆங்கிலேய அரசால் 1929-ல் கொண்வரப்பட்ட பொழுது சாதியவாதிகளின் கடுமையான எதிர்ப்பிற்கு இச்சட்டம் உள்ளானது. இன்றளவும் சட்டத்திற்குப் புறம்பான வகையில் சாதியத்தைப் பேணுவதற்காக பெண் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொள்ளாமல் சாதியக் குடும்பங்கள் பெண் குழந்தைத் திருமணங்களை நிகழ்த்தி

வருகின்றன. தமிழகத்தில் சமீபத்திய ஆண்டுகளில் பதிவான குழந்தைத் திருமணங்களின் எண்ணிக்கைகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **தமிழகம்** |
|---|---|
| 2015 | 77 |
| 2016 | 55 |
| 2017 | 55 |
| 2018 | 67 |
| 2019 | 66 |

காதல் எதிர்ப்பு என்ற போர்வையில் ஆணவப்படுகொலைகளும் பெண் வெறுப்பு என்ற போர்வையில் பெண்சிசுக் கொலைகளும் பெண் குழந்தைப் பாதுகாப்பு என்ற போர்வையில் குழந்தைத் திருமணங்களும் மறைமுகமாக சாதியக் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்காக நடத்தப்படுகின்ற பெண்களுக்கெதிரான வன்முறைகளாகும். பெருமளவில் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த பெண்களே ஆணவப்படுகொலைகளாலும் பெண்சிசுக் கொலைகளாலும் குழந்தைத் திருமணங்களாலும் பாதிக்கப்படுகின்றனர்.

### சாதிய ஆதிக்கத்தால் நேரிடையாக நொறுக்கப்படும் தலித் பெண்கள்

தலித் பெண்களென்று வழங்கப்படும் விளிம்பு நிலை சாதிகளை சேர்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்குள் பட்டியல்படுத்தப்பட்டுள்ள பட்டியலின(SC) மற்றும் பட்டியல் பழங்குடியினப்(ST) பெண்கள் இரட்டைப் பாகுபாட்டை அனுபவித்துவருகின்றனர். சுய சாதிக்குள் நிலவும் ஆணாதிக்கத்தாலும் ஆதிக்க சாதியினரின் சாதிய ஆதிக்கத்தினாலும் தலித் பெண்கள் நொறுக்கப்படுகின்றனர். ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த ஆண்களால் மட்டுமல்லாமல் ஆதிக்கச் சாதிகளைச் சேர்ந்த பெண்களாலும் சாதி ரீதியாகத் தலித் பெண்கள் இழிவுபடுத்தப்படுகின்றனர். சாதியம் தலித் பெண்களை ஒடுகப்பட்டவர்களிலும் ஒடுக்கப்பட்டவர்களாக வைத்திருக்கின்றது.

#### பாலியல் ரீதியாக சுரண்டப்படும் தலித் பெண்கள்

ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த ஆண்கள் காதலிப்தாகக் கூறி ஏமாற்றி தலித் பெண்களைப் பாலியல் ரீதியாக சுரண்டுகின்றனர். ஏமாற்றும் ஆதிக்க சாதி ஆண்களுக்குச் சாதகமாகவே அதிகாரமட்டங்கள் இயங்குவதால் பாதிக்கப்படும் தலித் பெண்களுக்கான நீதி கட்டப்பஞ்சாயத்துகளாலும் ஆதிக்க சாதியினரின் அச்சுறுத்தல்களாலும் மறுக்கப்படுகின்றது. ஆதிக்க சாதியினர் தலித் பெண்களை பாலியல் ரீதியாகச் சுரண்டும் சம்பவங்களில் ஒரு சில குற்றங்களே காவல் நிலையங்களில் வழக்குகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. 24.5.2020 அன்று உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மதுரை

மாவட்டம் எருவார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட தலித் பெண் சீதாலட்சுமி என்பவரை ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த போதுராஜா என்பவர் பாலியல் வன்புணர்ச்சி செய்துள்ள வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 13.5.2020 அன்று ஒசூர் காவல் நிலையத்தல் கிருஷ்ணமிரி மாவட்டம் ஒசூர் சூளகிரி தியாகரசனபள்ளியை சேர்ந்த தலித் பெண் ராஜேஸ்வரியை (29) ஆதிக்க சாதி ஆண்களான ரமேஷ் (25), மது (23), ராஜா (23) ஆகியோர் கடத்திச் சென்று கூட்டு பாலியல் வன்புணர்ச்சிக்குள்ளாக்கிய வழக்குப் பதிவாகியுள்ளது. 13.5.2020 அன்று வெள்ளித்திருப்பூர் காவல் நிலையத்தில் திருப்பூர் மாவட்டம் அந்தியூர் அருகே உள்ள வாகைமரத்து கொடிக்கால் கிராமத்தில் வசித்து வந்த தலித் மாணவி கார்த்திகாவை அப்பகுதியைச் சேர்ந்த ஆதிக்க சாதி ஆண் புகழேந்தி (24) காதலித்து ஏமாற்றி அவரது புகைப்படங்களைச் சமூக வளைதளங்களில் வெளியிடுவதாக மிரட்டியதால் மனமுடைந்த கார்த்திகா தற்கொலை செய்துள்ள வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தலித் பெண்களுக்கு எதிராக ஆதிக்க சாதி ஆண்கள் நடத்துகின்ற பாலியல் ரீதியிலான வன்முறைகள் இதுபோன்று தினம் தினமும் இயல்பாக நடந்துகொண்டேதான் இருக்கின்றன. 2021 ஆம் ஆண்டை உலகமே வரவேற்ற உற்சாக நாளான ஜனவரி ஒன்றிலும் ஒரு தலித் பெண் ஆதிக்க சாதி ஆணால் பாலியல் ரீதியாகச் சுரண்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளாள். வடமதுரைக்கு அருகில் உள்ள தென்னம்பட்டி கிராமத்தில் வசித்து வந்த ஜெயஸ்ரீ என்ற தலித் பெண் பி.ஏ., பட்டம் படித்துவிட்டு குடும்ப வறுமையின் காரணமாக வேடசந்தூரில் உள்ள மில்லில் 3 ஆண்டுகளாக வேலை பார்த்து வந்துள்ளார். உடன் பணிபுரிந்த ஆதிக்க சாதியைச் சேர்ந்த தங்கதுரையும் ஜெயஸ்ரீயும் காதலித்துள்ளனர். தங்கதுரைக்கு திருமணம் செய்து வைக்க அவரது வீட்டில் முடிவெடுத்துள்ளதை அறிந்த ஜெயஸ்ரீ என்னைக் காதலித்துவிட்டு வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள எப்படி சம்மதிக்கலாமென கேள்வியெழுப்பி அழுது புலம்பியிருக்கிறார். அதற்கு தங்கதுரை, நீ கீழ்சாதி உன்னை திருமணம் செய்து கொள்ள முடியாது. உன்னை திருமணம் செய்துகொண்டால் எங்கள் குடும்பத்தின் கௌரவம் பாதிக்கும் என்று கூற, அதற்கு ஜெயஸ்ரீ இப்படி நெருங்கிப் பழகிவிட்டு சாதியைக் கூறி என்னை ஒதுக்குவது நியாயமா என்று ஆற்றாமையில் வெடித்திருக்கிறார். தன்னுடைய திருமணத்திற்கு ஜெயஸ்ரீ தடையாக இருப்பதை உணர்ந்த தங்கதுரை ஜெயஸ்ரீயை கொலை செய்யத்திட்டமிட்டு தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வது போல் வாகரை கிராமத்திற்கு அழைத்துவந்து தன்னுடைய நண்பன் ஜெகநாதனுடன் சேர்ந்து ஜெயஸ்ரீயை அடித்துச் சித்திரவதை செய்து வாயில் விஷத்தை ஊற்றி கழுத்தை நெறித்துக் கொடூரமாகக் கொலை செய்துள்ளனர். ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுவதை வெளிச்சமிட்டுக் காட்டும் செய்தி ஊடகங்கள் தலித் பெண்கள் பாதிக்கப்படும் பொழுது

பெரும்பாலும் அமைதிகாக்கின்றன. பாதிக்கப்பட்ட தலித் பெண்களுக்காக பெரும்திரளான மக்கள் இணைந்து போராடுகையிலேயே ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. ஊடகங்கள், சாதி உளவியலில் ஊரிப்போனப் பொது மக்கள் போன்றோர் பாதிக்கப்படும் தலித் பெண்களின் பக்கம் நிற்காமல் வன்முறையாளர்களான ஆதிக்க சாதி ஆண்களின் குற்றங்களை மறைக்கக் கண்டும் காணாதது போல் கடந்துவிடுகின்றனர். கடந்துவிடும் பொது உளவியலில்தான் சாதியம் இறுகப்பற்றி இருக்கின்றது. சாதிய ஆதிக்கம்தான் தலித் பெண்கள் பாலியல் ரீதியாகச் சுரண்டப்படுவதற்கு முக்கியக் காரணமாக அமைகின்றது. சாதி உடையாமல் தலித் பெண்களுக்கான பாலின விடுதலையென்பது சாத்தியமற்றது.

**ஜனநாயக அரசியல் மட்டத்திலும் இழிவுபடுத்தப்படும் தலித் பெண்கள்**

உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்காக ஒதுக்கப்படும் தொகுதிகளில் பஞ்சாயத்துத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் பெண்களை அலுவல் கையொப்பங்களுக்கு மட்டுமே உரியவர்களாக நடத்தும் கிராமப் பஞ்சாயத்துகள் அனைத்தும் பாலியல் வன்முறை செய்தவனுக்கே பாதிக்கப்பட்டப் பெண்ணை கட்டிக்கொடுக்கும் கட்டப் பஞ்சாயத்து காலத்திலேயே இன்றும் இருக்கின்றன. சாதியம் நிறைந்த பஞ்சாயத்துகள் பெண்கள் அதிகாரத்திற்கு வருவதை ஒருபோதும் விரும்புவதில்லை. அதிலும் குறிப்பாக தலித் பெண்கள் அதிகாரத்திற்கு வருவதை வெறுக்கின்றன. கடந்த உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலித் பெண் பஞ்சாயத்துத் தலைவர்களை ஆதிக்க சாதியினர் சாதிய ரீதியில் வன்கொடுமை செய்து பலவாறு இழிவுபடுத்திவருகின்றனர்.

2020-ல் திருவள்ளூர், ஆத்துப்பாக்கம் தலித் பஞ்சாயத்துத் தலைவர் அமிர்தம்மாளை தேசியக் கொடியை ஏற்றவிடாமல் ஆதிக்க சாதியினர் தடுத்து இழிவுபடுத்தியுள்ளனர். கடலூர் தெற்குத்திட்டை தலித் பஞ்சாயத்துத் தலைவர் ராஜேஸ்வரியை பஞ்சாயத்துக்கூட்டத்தில் தரையில் அமரவைத்து ஆதிக்க சாதியினர் இழிவுபடுத்தியுள்ளனர். இவ்விரண்டு சம்பவங்களும் சமூக ஊடகங்களில் பெரும் விவாதத்ததை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. மேலும் திருப்பூர் மாவட்டம் கவுண்டச்சி புதூர் தலித் பஞ்சாயத்துத் தலைவரான செல்வி என்பவரை கடந்த 4.5.2020 அன்று ஆதிக்க சாதியைச் சேர்ந்த குப்புசாமி என்பவர் பணி செய்ய விடாமல் சாதி ரீதியாக இழிவுபடுத்தியுள்ளார். இதுகுறித்து தாராபுரம் காவர் சிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் கோனகபாடி தலித் பஞ்சாயத்துத் தலைவரான அம்சவள்ளி என்பவரை கடந்த 22.4.2020 அன்று ஆதிக்க சாதியைச் சேர்ந்த மோகன் என்பவர் பணி செய்ய விடாமல் தடுத்து சாதி ரீதியாக இழிவுபடுத்தியுள்ளார். இதுகுறித்து தாராமங்கலம் காவல்நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அரசுப் பணிகளில் ஈடுபடும் தலித் பெண்களும் ஆதிக்க சாதியினரால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். கடந்த 2018-ல் அவிநாசி அருகில் உள்ள திருமலைக்கவுண்டன்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் சத்துணவு சமயலாளராகத் தலித் பெண் பாப்பாள் பணியாற்றுவதைத் தடுக்க ஆதிக்க சாதியினர் பள்ளி வளாகத்தில் கடும் தகராறில் ஈடுபட்ட செயல் தமிழகத்தில் கடும் பரபரப்புக்குள்ளானது. மேட்டூர், கொளத்தூர் அருகில் உள்ள மூலக்காடு சத்துணவு அமைப்பாளர்களாக ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த சந்திராவும் தலித் சமூகத்தைச் சேர்ந்த செம்பாயும் பணியாற்றி வந்துள்ளனர். சத்துணவு அமைப்பாளர்களுக்காகப் போடப்பட்டிருக்கும் நாற்காலியை ஆதிக்க சாதி அமைப்பாளரான சந்திரா உதைத்துத் தள்ளி பறச்சி எனக்கு சரிசமமாக நீ உட்காரலாமா என்று செம்பாயியை சாதிய ரீதியாக இழிவுபடுத்தியுள்ளார். இதுபோல் அனைத்துத் தளங்களிலுமே தலித் பெண்கள் ஆதிக்க சாதியினரால் நொறுக்கப்படுகின்றனர். சாதிய ஒழிப்பில்லாத பாலின சமத்துவத்தில் தலித் பெண்களின் நிலையென்பது சந்திராவைப் போன்ற ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த பெண்களுக்கு அடிமையாய் இருக்கும் சாதிய ஒடுக்குதலுக்குட்பட்ட ஆண் பெண் சமத்துவத்தை மட்டுமே கொண்டதாய் இருக்கும். பெண்ணியம் என்பது பெண்களின் மீது நடத்தப்படும் அனைத்துவித தாக்குதல்களிலிருந்தும் ஒடுக்குமுறைகளிலிருந்தும் முழுமையாக அனைத்துத் தரப்புப் பெண்களையும் விடுவிக்கும் சிந்தனைகளைக் கொண்ட ஆற்றல்மிகு தத்துவமாகும். எனவே தமிழ்; சமூகத்திற்கானப் பெண்ணியம் சாதி ஒழிப்புச் சித்தாந்தங்களையும் கொண்டியங்க வேண்டும்.

## முடிவுரை

சாதியத்தின் அடிநாதமாகத் திகழும் பாகுபாட்டு சமூக அமைப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஆணவப்படுகொலை, பெண்சிசுக் கொலை, குழந்தைத் திருமணம் போன்றவற்றால் பெண்களை சாதியம் நொறுக்குகின்றது. விளிம்பு நிலைத் தலித் பெண்களை சாதியம் ஒடுக்கப்பட்டவர்களிலும் ஒடுக்கப்பட்டவர்களாக ஒடுக்குகின்றது. சாதியத்தை ஒழிக்காமல் சுதந்திரமான அனைத்துத் தரப்புப் பெண்களுக்கும் மாண்பை நல்கும் பெண்ணிய விடுதலையை தழிழகத்தில் கட்டமைத்திட முடியாது. சாதிய ஒழிப்பை பெண்ணியம் வெளிப்படையாகக் கொண்டியங்க வேண்டும். சாதியத்தைக் கடத்தும் கடத்தியாகப் பெண்ணுடல் இதுவரை இயக்கப்பட்டு வந்துள்ளது. அதே சாதியத்தை சிதைத்தொழிக்கும் ஆயுதமாகப் பெண்களின் மூளை மாற்றப்பட வேண்டும். பெண்கள் ஆணாதிக்கத்திற்கெதிராக சிந்திப்பது போல செயலாற்றுவது போல ஆணாதிக்கத்தை ஆதரிக்கும் சாதிய ஆதிக்கத்திற்கு எதிராகவும் சிந்திக்க வேண்டும். செயலாற்ற வேண்டும். சமூகத்தில் நடக்கக் கூடிய பெண்களுக்கெதிரான அனைத்து வகைச் சுரண்டல்களையும் அழித்தொழிக்க நினைக்கும் பெண்கள் முதலில் சுய சாதிப் பற்றுகளைத் தூக்கியெறிந்துவிட்டு அறிவியல் பூர்வமான சிந்தனைகளுக்குள் தங்களை

ஆட்படுத்திக்கொண்டு பெண் என்ற பாலின அடையாள அரசியலுடன் அனைத்து தரப்பு பெண்களும் ஒரே நேர்க்கோட்டில் சமத்துவமாய் இணைய வேண்டும். புதிது புதிதாக பெண்ணியக் கருத்தாக்கங்கள் நாள்தோறும் ஏற்பட வேண்டும். தமிழ் பெண்கள் ஒடுக்கப்படும் அனைத்து தரப்பு மக்களுக்காகவும் சிந்திக்கப் பழக வேண்டும். எல்லா வகையிலும் ஒடுக்கப்பட்ட பெண்ணுக்குத்தான் அமைதியின் அர்த்தம் புரியும் என்பதால் பெண்கள் சிந்திக்கையில்தான் அடக்குமுறைகளும் ஒடுக்குமறைகளும் இவ்வுலகில் குறையும்.

**மேற்கோள்கள்**

எவிடன்ஸ் கதிர், (2016) சாதி தேசத்தின் சாம்பல் பறவை, முதல் பதிப்பு, விகடன் பிரசுரம், சென்னை.

சாமிநாதையர், உ.வே., (1950) புறநானூறு மூலமும் உரையும், ஆறாம் பதிப்பு, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை.

சோமசுந்தரனார், போ.வே.இ., (1961) குறுந்தொகை, மூன்றாம் பதிப்பு, கழக வெளியீடு, சென்னை.

## References

Evidence Kathir, First Edition-2016, Sathi Desathin Sambal Paravai, Vikadan prasuram, 757, Anna Salai, Chennai – 600 002.

Saminathaiyyer, U.V., (1950) Purananooru Molamum Uraium, Sixth Edition, Sri Thiyaharasa Vilasha Velyeedu, Chennai.

SomaSundaranar.P.V., Third Edition-1961, Kurundhogai, Kazhga Velyeedu, Chennai.

# சித்தர் பாடல்களில் பெண்ணுடல்

# Femininity in Siddhar Songs

**தோ. நிஷா [அ, *]**

[அ] தமிழாய்வு மையம், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில்-3, தமிழ்நாடு, இந்தியா.

**T. Nisha [a, *]**

[a] Department of Tamil, Scott Christian College, (Autonomous), Nagercoil -3, Tamil Nadu, India.

Email: nishat@scottchristian.org

DOI: https://doi.org/10.34256/fem110

## Abstract:

The world is concentrating on the energy of their research. Those who recorded the necessary residues are the Siddhars who embraced the siddhar tradition and the siddhars lived as common to all human beings. They gave priority to family, community and social justice. The purpose of this study is to examine the female genital mutilation in songs such as Sivavakkiar, Pampatisiddhar, Kuthampai Siddhar, and Pathrakiriyar. The Siddhars who portrayed the female body as degrading have revealed the superiority of the female body in the poems that degrade the female body parts are sung with a view to humiliation. In poems praising the female body, the origin of the human race is said to be similar to that of the menstrual cycle. They have also recorded the changes that the young female body gets in old age.

## Key Words :

Siddhar,Pennudal, Sivavakiar, Pampattisiddhar.

## முன்னுரை:

சித்தர்கள் சமூகம் நலம்பெற விரும்பி கலகக்குரல் எழுப்பியவர்கள். சாதி வேறுபாட்டைக் கடுமையாகச் சாடியவர்கள். இத்தகைய சித்தர் பாடல்களை

முன் வைத்து பல ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. பெ.கண்ணதாஸ், மீ.ப.சோ.மு, ச.மாடசாமி போன்றோரின் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவையாகும். ஆயினும் பெண்ணுடல் குறித்த சித்தர்களின் சிந்தனைகள் விரிவாக ஆராயப்படவில்லை எனலாம். பெண்ணியவாதிகள் சித்தர்களின் பெண் குறித்த சிந்தனைகளைக் கடுமையாகச் சாடியுள்ளனர். எனவே சித்தர்களின் பாடல்களில் வெளிப்படும் கருத்துக்களின் உண்மைத்தன்மையை ஆய்வுலகிற்கு வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும். சித்தர்கள் பெண்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களா? சித்தர்கள் பெண் வெறுப்பாளர்களா? பெண்ணுடலை இழிவுபடுத்தினாரெனில் காரணம் என்ன என்பதே ஆய்வுச்சிக்கலாகும். சித்தர்களின் தொகை எண்ணிக்கையிலடங்காதது என்பதால் சிவவாக்கியர், குதம்பைச் சித்தர், பத்திரகிரியார், பாம்பாட்டிச்சித்தர் ஆகிய நால்வருடைய பாடல்கள் மட்டுமே ஆய்வு எல்லையாக அமைகின்றது. ஆய்வு நூல்கள், கட்டுரைகள், இதழ்கள் போன்றவை ஆய்வு மூலங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**சித்தர் அறிமுகம்**

சித்–சித்து-சித்தம் என்ற சொற்களிலிருந்து சித்தர் என்னும் சொல் தோன்றியது. "சித்தர்கள் என்றால் அறிஞர்கள், மேதைகள், பேரறிவு படைத்தவர்கள், விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகள் என்று பொருள் சொல்லுவதே பொருத்தமானதாகும்". (சாமி. சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் ப.23) மேலும் புரட்சியாளர்களாகவும், பகுத்தறிவுவாதிகளாகவும் தோன்றிய சித்தர்கள் மறைஞானிகளாகவும் விளங்குகிறார்கள். "சித்தர்களென்பார் பண்டைக்காலத்து அறிவருள் ஒரு சாரார்; அவர்க்கு அறிவரென்றே பெயரே அமைந்திருந்தது”. (கா.சு பிள்ளை, இலக்கிய வரலாறு (இரண்டாம் பாகம்) ப. 305) சித்தர் காலம் குறித்து தெளிவான முடிவை ஆய்வாளர்களால் தரமுடியவில்லை. பதினெண் சித்தர் என்று கூறும் மரபு இருந்தாலும் சித்தர்களின் எண்ணிக்கை வரையறைக்கு உட்படாததாகவே உள்ளது. இவர்கள் அட்டமாசித்தி போன்ற பல்வேறு ஆற்றல்களைக் கொண்டவர்களாகவும் விளங்கினர்.

**சித்தர் பாடல்களில் பெண்கள்**

சித்தர்கள் ஆத்தாள், கண்ணம்மா, வாலைப்பெண்ணே என அழைத்தும் தாய், கடவுள் நிலையில் பெண்ணைப் போற்றியும், பாடியுள்ளனர். பெண்ணுடலை இகழ்ந்தும் பாடியுள்ளனர். உடலின் நிலையாமைப் பேசும் சித்தர்கள் உடலைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளனர். இவ்வாறு முரண்பட்ட சித்தர் பாடல்களின் பெண்ணுடல் குறித்தச் சிந்தனைகள் சிறப்பானதாகும்.

பெண் எல்லா ஆற்றலும் நிறைந்தவள். அவளைத் தாயாகப் போற்ற வேண்டுமெனக் கூறியுள்ளனர். "பெண் தலைமைச் சமூகத்தில் தாந்திரிக நெறி வளர்ந்திருக்கிறது. தாந்திரிக நெறியின் ஒரு இழையே தமிழ்ச் சித்தர் நெறியாக விளங்குகிறது. யோகப் பயிற்சியில் உடலில் உள்ள ஆற்றலை உணர்ந்து அதன் மூலம் ஞான நிலையை எய்துவதையே சித்தர்நெறி கூறுகின்றது. அவ்வாற்றலையே சித்தர் பாடல்கள் 'குண்டலினி' என்றும் 'வாலை' என்றும் கூறுகின்றன. அவ்வாலையாகிய தாயைப் போற்றி வணங்குகின்ற நெறியாக அமைந்திருப்பதே சித்தர்நெறி". (பெ. கண்ணதாஸ், நட்ட கல்லும் பேசுமோ, ப.228) தாய்வழிச் சமூகத்தில் சித்தர் நெறி உருவாகி உள்ளது. ஆனால் அது தீவிரமாக பரவத் தொடங்கியது, பிற சமயக் கோட்பாடுகள் உருவான காலத்திலாகும். இக்காலம் ஆணாதிக்கம் மிகுந்த காலமாக இருந்தது. சித்தர் பாடல்கள் குலமகளிரைப் போற்றுபவையாகவும் பரத்தையரைப் பழிப்பவையாகவும், பெண்ணைப் போற்றுபவையாகவும் அமைந்திருக்கின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**உடல் பற்றிய சித்தர் கருத்தியல்**

பெண்ணுடலை இழிவாகச் சித்திரிக்கும் சித்தர் பாடல்களை ஆராயுமுன் மனித உடல் குறித்த சித்தர்கள் பார்வையை விளக்குவது நலம். உடலின் நிலையாமையைக் கூறும் சித்தர்கள் உடலைப் பராமரிக்க வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளனர். சித்தர்கள் உடலை இழிவுக்குரிய ஒன்றாகக் கருதவில்லை. மாறாக வெறும் புலன் சார்ந்த புறநிலைப் பொருளாகக் கருதாமல் உடலின் அளப்பரிய ஆற்றலை உணர வேண்டும் என்பதைக் கூறியுள்ளனர். எனவேதான் திருமந்திரத்தின் பல பாடல்கள் உடலைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்

உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்

உடம்பினுள் உத்தமன் கோயில்கொண் டானென்

உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே" (திருமந்திரம் பா. 725)

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே

உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே" (திருமந்திரம் பா. 724)

உடம்பினைப் பேணாமல் இருந்தேன். ஆனால் உடல் இருந்தால்தான்

மெய்ஞ்ஞானத்தை அறிய முடியும் என்ற திருமூலரின் வாக்கு "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" என்றப் பழமொழியை நினைவுபடுத்துகிறது.

**இளமை முதுமை**

சித்தர்கள் சிற்றின்பத்தை வெறுத்தவர்கள். எனவே பேரின்பத்தை அடைய வேண்டுமெனில் காமம், பொய், களவு, தீது, போதை போன்றவற்றை வெறுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர். காமத்தை அறவே ஒழிக்க வேண்டுமெனவும் பெண்களின் இயல்பான உடல் உறுப்புகளை காமக் கண் கொண்டு பார்த்து மயங்கித் திரிவது தீமையையே தரும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர். இளமையில் வனப்புடன் திகழும் உடல் உறுப்புகள் முதுமையில் தளர்ந்து விடும் என்பதைப் பல்வேறு பாடல்களில் தெளிவுபடுத்துகின்றனர். இளமையில் கனத்திருக்கும் மார்பகம் முதுமையில் தளர்ந்து விடும். முத்துப் போன்ற பற்கள் உதிர்ந்து விடும், சொற்கள் தடுமாறும், கண்களின் ஒளி மங்கும், கருப்பு நிறக் கூந்தல் பஞ்சைப் போன்று வெள்ளையாகும்; கன்னத்தில் குழி விழும், வேகமாக நடக்க முடியாது; குழந்தை போன்று உடல் மறுபடியும் மாறி விடும் என குதம்பைச் சித்தர் கூறுகிறார். இதனை;

“முதிர்ந்த சுடுகாட்டில் முல்லையை ஒத்தபல்
உதிர்ந்து கிடக்குமடி குதம்பாய்
உதிர்ந்து கிடக்கு மடி”

“வளர்ந்து முறுக்காய் வயதில் எழுந்த தனம்
தளர்ந்து விழுந்திடுமே குதம்பாய்
தளர்ந்து விழுந்திடுமே”

“மஞ்சு போலாகி வளர்ந்திடும் கூந்தலும்
பஞ்சுபோல் ஆகிவிடுமே குதம்பாய்
பஞ்சுபோல் ஆகிவிடுமே”

“நல்லாய் உன்அங்கமும் நன்கு நிமிர்ந்தாலும்
வில்லாயப் பின் கூனிவிடும் குதம்பாய்
வில்லாய்ப் பின் கூனிவிடும்” (குதம்பைச் சித்தர், பா. 73,75,76,80)

இவ்வாறு இளமையின் நிலையாமையை உணரவேண்டுமென உரைக்கின்ற குதம்பைச் சித்தரின் பாடல்கள் விவிலியத்தின் சபை உரையாளர்

கூறும் செய்தியோடு தொடர்புடையது. இளமைப் பருவம் மறையக் கூடியது என்று கூறும் சபையாளர், "குழந்தைப் பருவமும் இளமையும் மறையக் கூடியவையே" (சபை உரையாளர் 11:10) மேலும் சபை உரையாளர் 12-ஆம் அதிகாரம் முழுமையும் குதம்பைச் சித்தர் பாடல்களோடு ஒத்து போகின்றது.

**பெண்ணின் உடலைப் பழித்தல்**

சித்தர் பாடல்களில் பெண்ணுடலைப் பழிக்கும் பாடல்களும் பெண்ணைப் போற்றும் பாடல்களும் அமைந்திருக்கின்றன. காமத்திற்காகப் பெண் கருதப்படும் நிலையில் பழிக்கப்படுகிறாள். இது ஆணாதிக்கத்தைக் காட்டுவதாக உள்ளது. "மோசடிகள் மூலம் பொறுக்கித் தின்ற பார்ப்பனர்களின் சில செயல்களை எதிர்த்துக் கொண்டு உருவான சித்தர்கள் ஆணாதிக்கவாதிகளாகவும், பெண் மீது வெறுப்புக் கொண்டோராகவும் இருந்தனர். (பி. இரயாகரன், ஆணாதிக்கமும் பெண்ணியமும், ப. 234) என்று பி.இரயாகரன் கூறுகிறார். எல்லாச் சித்தர் பாடல்களும் பெண்ணை, பெண்ணுடலைப் பழிப்பவையாக இல்லை. பாம்பாட்டிச் சித்தர், பட்டினத்தார், பத்திரகிரியார், குதம்பைச்சித்தர், சிவவாக்கியர் ஆகியோர் பாடல்களிலே இவை மிகுதியாக அமைந்துள்ளன. பெண்ணின் உடல் உறுப்புகளை மிகவும் இழி தன்மையானதாக இவர்களின் பாடல்கள் காட்சிப்படுத்துகின்றன.

சித்தர்கள் பெண்ணாசை கூடாது என்பதை ஆணாதிக்க மன நிலையில் பதிவு செய்துள்ளனர். பெண்ணுடல் மட்டுமே எல்லா தீமைக்கும் காரணம் எனக், கூறியுள்ளனர். பாம்பாட்டிச் சித்தர் பெண்ணாசை விலக்கல் என்னும் தலைப்பில் பத்துப் பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றில் பெண்களின் அழகு, கவர்ச்சி அனைத்தும் நிலையற்றது என இயலாமையை வெளிப்படுத்தியுள்ளார். மஞ்சள் போன்ற மாதர் அழகை விரும்பி, மேலும் மேலும் ஆசை கொள்ளும் மனிதர், இலவம் பஞ்சைப் பழமென்று எண்ணிக் காத்திருந்து ஏமாந்த கிளி போல உடல் தளர்ந்து ஆசையைக் கைவிட்டு ஓடுவர் என்பதை,

"வெயில் கண்ட மஞ்சள்போன்ற மாத ரழகை
விரும்பியே மேல்விழுந்து மேவும் மாந்தர்
ஒயில்கண்ட இலவுகாத் தோடுங் கிளிபோல்
உடல்போனால் ஓடுவாரென் றாடாய் பாம்பே "

(பாம்பாட்டிச் சித்தர், பா. 50)

என்ற பாடலில் விளக்குகிறார்.

பெண்ணின் மார்பை பூச்செண்டு, வட்டமார்பு, கலசத்துக்கு ஒப்பான மார்பு என இழிவையும் வருணணையோடு கூறும் பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள் ஆணாதிக்கத்தின் உச்சத்தைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. பெண்களின் பிறப்புறுப்பை மிகவும் கேவலமாகவும், பெண்ணின் அங்கங்கள் ஒவ்வொன்றையும் அழுக்கு, நாற்றம் என்னும் பார்வையிலும் கூறியுள்ளார். பெண்ணுடலைக் கேவலமானதாகச் கூறும் பாம்பாட்டிச் சித்தர் ஆணுடலை ஏன் அவ்வாறாக எழுதவில்லை என்பது கேள்விக்குரியதாகும். "சித்தர்கள் பொதுவாகப் பெண்ணையோ, உடலையோ, பழித்துப் பேசாதவர்கள், பாம்பாட்டிச் சித்தர் மட்டும் வரிந்து கட்டிக் கொண்டு பெண் பழிப்பிலும் உடல் பழிப்பிலும் இறங்கி விடுகிறார்." (ச. மாடசாமி, பாம்பாட்டிச்சித்தர், ப.50) என்று ச. மாடசாமி கூறுகிறார். இதனை பாம்பாட்டிச் சித்தர்,

"செண்டு முலைவண்டு வழிகொண்ட தோகையை"

"வட்டமுலை யென்று மிகவற்றுந் தோலை"

"சிக்கு நாறுங் கூந்தலைச் செழுமை மேகமாய்ச்

செப்புவார்கள் கொங்கைதனைச் செப்புக்கு ஒப்பதாய்"

"மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்

மல்கும் புழுக் கூட்டின்மேல் வண்ணத்தோலென்றும்

சலக்குழிக் குள்ளேநாற்றஞ் சார்ந்த சேறென்றும்

தானறிந்து தள்ளினோமென் றாடாய் பாம்பே"

(பாம்பாட்டிச் சித்தர் 51,52,54,59)

என்னும் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

பாம்பாட்டிச் சித்தரைப் போலவே, குதம்பைச் சித்தரும் பெண் உடலைப் பழித்துப் பேசுகிறார். நாற்றம் உண்டாகும் உடலுக்கு வாசனைப் பொருட்கள் தேவையில்லை எனவும், பூ வைக்கும் பெண்களையும் மிகவும் மோசமாகச் சித்திரித்தும் பாடியுள்ளார்.

"பேசறுநாற்றம் பெருகும் உடலுக்கு

வாசனை ஏதுக்கடி குதம்பாய்

வாசனை ஏதுக்கடி"

"பீவாச முள்ளவள் பீறல் உடம்புக்குப்

பூவாச மேதுக்கடி குதம்பாய்

பூவாச மேதுக்கடி" (குதம்பைச் சித்தர், பா. 62,66)

இப்பாடல்களில் ஒருவித நிலையாமை வெளிப்பட்டாலும் பெண்ணுடலை இழிவுபடுத்த வேண்டும் என்னும் நோக்கமும் இங்கு வெளிப்படுவதைக் காணலாம். "பெண்ணுடல் பாவத்தின் இருப்பிடம். பெண்வழிச்சேறல் என்பதும் பெண்ணிடம் உடலுறவு கொள்வதும் நரகத்திற்குச் செல்லும் வழியில் செல்வதற்கு ஒப்பானதாகும். இப்புரிதல் வள்ளுவர் முதல் பக்தி இலக்கியம், சித்தர் இலக்கியம் என நீளுவதைக் காணலாம். (த. விஜயலட்சுமி, பெண் பெண்ணியம் பெண்நிலை பக்.85,86) இக்கருத்தை உறுதிசெய்யும் வகையில் பத்திரகிரியார் பாடல்கள் விளங்குகின்றன.

"வெட்டுண்ட புண்போல் விரிந்த அல்குல் பைதனிலே

தட்டுண்டு நிற்கை தவிர்வதுவு மெக்காலம்"

"ஆறாத புண்ணி லழுந்திக் கிடவாமற்

தேறாத சிந்தைதனைத் தேற்றுவது மெக்காலம்"

(பத்திரகிரியார், பா.12,13)

என பாவத்தின் இருப்பிடமாக பெண்ணுடல் இருப்பதால் அச்சிந்தனையைத் தவிர்த்து வாழுவது எந்தக் காலத்தில் எனக் கேள்வி கேட்கிறார் பத்திரகிரியார்.

**பெண்ணுடலைப் போற்றல் :**

மாதவிலக்கு காலங்களில் பெண்ணிற்கு இயல்பாய் வெளிப்படும் தூமையே அவர்கள் ஒளிப்பெற்று வாழ முதற்காரணியாய் அமைகிறது. மேலும் குழந்தைப்பேறு முடிந்த பின்பு பெண்கள், தீட்டு என்ற காரணத்தினால் வீட்டில் முடங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆதிகாலத்தில் தலைமை தாங்கியப் பெண் தாழ்நிலையை அடைவதற்கும், அடங்கிப் போவதற்கும் இதுவும் காரணமாக அமைகிறது. த.விஜயலட்சுமி "தீட்டு, விலக்கு போன்றவையும் பெண்ணின் நிலையை மேலும் தாழ்த்துவதாக அமைகின்றன." (த. விஜயலட்சுமி, பெண் பெண்ணியம், பெண்நிலை, ப.84) என்று இக்கருத்தை உறுதிப்படுத்துகிறார்.

குழந்தை பிறந்திருக்கும் நேரங்களில் பெண்களில் இரத்தவாடையும், பால் வாடையும் வருவதால் விலங்குகள் முகர்ந்தறிந்து இவர்களின் வசிப்பிடத்தைக் கண்டறிந்து துன்புறுத்தின. இதன் காரணமாக பெண்கள் வீட்டில் முடங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இயற்கையில் உணவுக்காகப் போராடிய மனிதன் இரத்தத்தை இழக்கும் போது மரணம் அடைவது கண்டு பயந்தான். அதையொட்டி, மாதவிடாயைப் பார்க்க, விளக்க முற்பட்டான். இதனால், பெண்ணின் உடலில் இருந்து வெளியேறும் இரத்தத்தை இட்டும், குழந்தை பற்றிய தொடர்புகளும் இயற்கை மீதான அறியாமையில் இருந்து, பொதுவாக இரத்தம் மீதான அச்சத்தில் இருந்து சிந்தித்தான். இதனால் இந்த முதல் நிகழ்வை அச்சத்தின் மீதான ஒரு சடங்காக மாற்றினான். இது பெண்ணின் மீதான அடக்குமுறையை நிறுவுவதற்கான ஊடகமாக மாதவிடாய் வெளியேற்றம் ‘தீட்டாக’ மாற்றம் கண்டது. (பி. இரயாகரன், ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும், (ப.53) தாய்த் தலைமைச் சமூகம், தந்தை தலைமைச் சமூகமாக மாறியதற்கும், இதுவே காரணமாக அமைந்தது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நற்குலத்தில் பிறந்தவராகக் கருதப்படும் ஆண்கள் யாவரும் இந்தத் தீட்டிலிருந்து பிறந்தவர்களே என்பதை சிவவாக்கியர் புலப்படுத்துகிறார்.

"ஊறிநின்ற தூமையை உறைந்துநின்ற சீவனை
வேறுபேசி மூடரே விளைந்தவாறது ஏதடா
நாறுகின்ற தூமையல்லோ நற்குலங்க ளாவன
சீறுகின்ற மூடனேஅத் தூமைநின்ற கோலமே"

"தூமைகண்டு நின்றபெண்ணின் தூமைதானும் ஊறியே
சீமையெங்கும் ஆணும்பெண்ணும் சேர்ந்துலகங் கண்டதே
தூமைதானும் ஆசையாய்த் துறந்திருந்த சீவனை
தூமையற்று கொண்டிருந்த தேசமேது தேசமே"

(சிவவாக்கியர், பா 138,139)

பெண்ணின் மாதவிலக்கை, தீட்டு என்று இகழ்வது தவறு இது, இயற்கையாக உடலில் ஊறிவருவது. அத்தீட்டிலிருந்து குழந்தை உயிர் பெறுகிறது. இதையறியாமல் இகழ்ந்து பேசுபவர்களை 'மூடரே' என அழைக்கிறார் சிவவாக்கியர். தீட்டிலிருந்துதான் ஆணும் பெண்ணும் உருப்பெற்று உயிர் பெறுகின்றனர் என்பதை சிவவாக்கியர் மொழியில்

படிப்பது பெண்ணுடலைப் போற்றும் நற்செய்தியாகும்.

வைதிக சமயங்களால் வெறுத்தும், அசுத்தமானதென்றும் கருதப்பட்ட பெண்களுடன் தொடர்புடைய பல சடங்குகள் சித்தர்களால் ஏற்கப்பட்டுள்ளன. "பூப்படையும் போதும், மாதவிலக்கு ஏற்படும் காலங்களிலும் பெண்களை விலக்கி வைக்க வேண்டுமென்பது வைதிக மரபு. ஆயின் அத்தகைய நிகழ்வுகள் பெண்களின் வளமான வாழ்வின் தொடக்கமென்பதால் அவற்றை அவர்கள் விலக்க வேண்டியதில்லை என்றும், பெண்கள் உலகியல் வாழ்க்கை சிறப்படைய உதவுபவர்கள் என்றும் சித்தர்கள் வாதிட்டுள்ளனர். வைதீகத்தில் தீட்டு என்று விலக்கப்பட்ட மாதவிலக்கு, எச்சில் முதலியவை வாழ்க்கையோடு தொடர்புடையவை என்று சித்தர்கள் உணர்ந்துள்ளனர். இன்னொரு விதமாகக் கூறின், சித்தர்கள் பெண்களின் உலகியல் வாழ்வையும் மதிப்பையும் உணர்ந்து இவ்வாறு செயற்பட்டனரென்று கூறலாம்" (செல்வி திருச்சந்திரன், மதப்பண்பாட்டின் கோலங்களையும் கருத்தியலையும் கட்டவிழ்க்கும் ஒரு பால்நிலை நோக்கு, ப.126) மாதவிலக்கு காலங்களில் பெண்ணை வீட்டை விட்டு விலக்கி வைக்கும் போக்கு இன்றும் காணப்படுகின்றது. அவர்களுக்குத் தனி இடம்,உடை கொடுத்து அவர்கள் தொடுவது யாவும் தீட்டு என்ற கருத்தியலுக்குள் பெண்ணை வைத்திருக்கின்றனர். இவ்வாறு வீட்டை விட்டுத் தனியே அமர வைத்ததால் விலங்குகள், மரம் விழுதல் மூலம் இறந்து போன பெண்களும் உண்டு. பெண்ணுடலின் வளமைக்குக் காரணமான மாதவிலக்கைப் போற்றுவதும், பெண்ணுக்கு உதவி செய்வதும் ஆணின் கடமையாகும் என்பதை சிவவாக்கியர் கூறுவது போற்றுதலுக்குரியதாகும்.

**கருக்கலைப்பை எதிர்த்தல்**

கருக்கலைப்பு என்பது சமூகத்தின் தீமையாகும். பெண்ணுடலுக்கு தீமை விளைவிக்கும். கருக்கலைப்பு தடை செய்யப்பட வேண்டிய ஒன்று. மனித இனத்தின் தோற்றுவாயாகிய கருவை அழிப்பவர்கள் நற்கதியை இழந்து விடுவர் என்பதைச் சித்தர்கள் அறிவுறுத்துகின்றனர். கருக்கலைப்பு அநீதி என்பதை குதம்பைச் சித்தரின்,

"கருவை அழித்துக்கன் மத்தொழில் செய்குதல்
திருவை அழிக்குமடி குதம்பாய்
திருவைஅழிக்குமடி" (குதம்பைச்சித்தர்.208)

என்ற பாடல் தெளிவுபடுத்துகிறது .

குழந்தை கருவிலிருக்கும் போது அக்குழந்தை ஆணா, பெண்ணா என்பதை எந்தத் தாயும் அறிய முடியாது.

"அருவமாயிருந்த போது அன்னையங்கு அறிந்திலை “

(சிவவாக்கியர்.239)

பெண்ணுடலில் குழந்தை உருவாகும் திறத்தை சிவவாக்கியர் கூறுவது சிறப்பானது. ஆண் விந்துவுடன் கலந்து பத்து மாதமாய் அடங்கி நின்ற மாதவிடாய் மூலமாகத்தான் கை, கால், கண், பெற்று சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் ஆகியவற்றைப் பெறுகிறோம் என்பதைப் பின்வரும் பாடலில் கூறுகிறார்.

"ஐயிரண்டு திங்களாய் அடங்கிநின்ற தூமைதான்
கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டும் ஆகியே
மெய்திரண்டு சத்தமாய் விளங்குஇரச கந்தமும்
துய்யகாயம் ஆனதும் சொல்லுகின்ற தூமையே"

(சிவவாக்கியர், பா.207)

**முடிவுரை:**

உடலை முற்றிலும் புறக்கணித்து வாழும்படி சித்தர்கள் கூறவில்லை. மாறாக உடலோம்பும் வழிமுறைகளைக் கூறியுள்ளனர். பெண்ணுடல் குறித்த சித்தர் சிந்தனைகளில் சில பெண்ணுடலை அருவருப்பதாகவும், கேலி பேசுவதாகவும் அமைந்துள்ளதை மறுக்க முடியாது. பெண்ணின் உருவுக்கு பெண் குற்றவாளி ஆகிவிட முடியாது. எனவே குலமகளிரைக் கூறவில்லை, பரத்தையரைதான் அவ்வாறு பழித்திருக்கிறார்கள் என்று கூறுவது தவறான முடிபாகும். மேலும் பெண்ணின் மாதவிடாய் குழந்தைப்பேறு ஆகியவற்றைப் பாராட்டி உரைத்திருப்பது சிறப்பானதாகும். பெண்ணிற்கு வலுசேர்ப்பதுமாகும். உடலின் நிலையாமையை சித்தர்கள் பெரிதும் வலியுறுத்தியதால் இவ்வாறு பழித்துப் பேசினார் என எண்ணுவதற்கும் வாய்ப்பு உள்ளது.

## மேற்கோள்கள்

அறிவொளி.ஆ., (உ.ஆ) (2009), சித்தர் பாடல்கள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 600017, தமிழ்நாடு, இந்தியா

இரயாகரன்.பி, (2001) ஆணாதிக்கமும் பெண்ணியமும், கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை - 02, தமிழ்நாடு, இந்தியா.

இரயாகரன், பி., (2002) ஆணாதிக்கமும் சமூக ஒடுக்கு முறைகளும், கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை- 02.

கண்ணதாஸ்.பெ., (2013), நட்ட கல்லும் பேசுமோ, தமிழினி, சென்னை - 51, தமிழ்நாடு, இந்தியா.

சிதம்பரனார், சாமி., (1988), பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், சிவகாமி சாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம், சென்னை - 600094, தமிழ்நாடு, இந்தியா.

சுப்பிரமணிய பிள்ளை, கா., (1970), இலக்கிய வரலாறு இரண்டாம் பாகம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1.

செல்வி திருச்சந்திரன், (1997), மதப்பண்பாட்டின் கோலங்- களையும் கருத்தியல்களையும் கட்டவிழ்க்கும் ஒரு பால்நிலை நோக்கு, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், கொழும்பு - 06, இலங்கை.

திருவிவிலியம், இந்தியா வேதாகமச் சங்கம், பெங்களூர் - 560 001, கர்நாடகா, இந்தியா.

மாடசாமி, ச., (2018), பாம்பாட்டிச் சித்தர் பாரதி புத்தகாலயம், சென்னை - 600018, தமிழ்நாடு, இந்தியா.

வரதராஜன், இ., (உ.ஆ), (1988), திருமந்திரம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 8, தமிழ்நாடு, இந்தியா.

விஜயலட்சுமி, த., (2020), பெண் பெண்ணியம் பெண்நிலை, காலசகம், நாகர்கோவில் - 629002, தமிழ்நாடு, இந்தியா.

# யேசு காவியத்தில் பெண்கள்

# Yesukaviyathil penkal

**இ.அல்போன்சாள் [அ,*]**

[அ] தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம்-625601, தேனி, தமிழ்நாடு, இந்தியா.

**I. Alphonsal [a,*]**

[a] Department of Tamil, Jayaraj Annapackiam College For Women (Autonomous) Periyakulam -625601, Theni, Tamilnadu, India.

Email: sisteralphonse2020@gmail.com

DOI: https://doi.org/10.34256/fem111

## Abstract :

Love is the source and summit of all the existed and existing religions of the world. It is all about sharing and spreading love. This premise is quite true in Christianity also as Jesus Christ reflected all his life, the joy of sharing love. In the present times, of all the things that threaten the world, suppression of women and their rights is the most obvious one. Female slavery leads to deterioration of social order and at present times it has become a wakeup call. Jesus has pointed out the gender inequality in the Jewish community where Jewish women were treated as inferior beings. He always took stand in favour of women's rights and never failed to voice out for them whenever they faced adversaries. Despite the antagonism, in recent times women are evolving as higher than ever. The set norms are disappearing slowly and a new order has been created. It calls for peaceful coexistence. This research article is aimed to put forth how women can dispel darkness and brighten up the path to humanity. Considering the necessity of women's role for the Renaissance of humanity, they should be given all opportunities, equality and support to meet the ends.

## முன்னுரை

விவிலியம் மானிடரின் நற்செய்தி. தூய ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்ட அற்புத சக்தி வாய்ந்ததும், எல்லா காலத்திற்கும் சூழலுக்கும், எல்லோருடைய ஏக்கங்களுக்கும் பதிலளிக்கும் தனித்தன்மை வாய்ந்ததுமாகும். இயேசு காவியம், பெண்களை இயேசு எவ்வாறு மேன்மையாக வழிநடத்தினார், உடன் நடந்தார் என்பதையும் இறைமகன் இயேசுவின் மனித நேயத்தையும் கடவுள் விரும்பிய ஆண் பெண் சமத்துவம் நிலைத்திருப்பதையும் அறிய முடிகின்றது. இயேசு ஈடுபாடுகொண்ட இறையாட்சி பணிகளில் பெண்களின் பங்கு மிகச் சிறப்பாக உள்ளதையும் விளக்கி நிற்கின்றது. ஆண்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் பெண்களும் பெற்றுள்ளதை ஆய்வின் வழி காண்போம். சுமார் இருபதுக்கும் மேற்பட்ட பெண்கள் இயேசுவின் பணி வாழ்வில் ஈடுபாடு கொண்டு உள்ளதை காண்கிறோம். பெண்களுக்கே உரித்தான அன்பு, இரக்கம், தாராள குணம், தியாக மனப்பான்மை போன்ற நற்பண்புகளையும் சுட்டிக்காட்டியுள்ளார் என்பதனை இதன் வழி அறிய முடிகிறது.

## இன்றைய பெண்கள்

பெண்கள் என்பதற்கு புதுப் பொருள் தந்து சமூக பொலிவினை மாற்றி சமூக கட்டமைப்புகளை மாற்றி மீள் உருவாக்கம் செய்கின்றார்கள். "வாழப் பிறந்தவர்கள் உலகை ஆளப் பிறந்தவர்கள்" என்பதனை உறுதி செய்து வருகின்றனர் பெண்மையின் வரலாறு உலகை மாற்றும் வரலாறு என்பது எல்லா துறைகளிலும் சாதனை படைப்பதால் எண்பித்து வருகிறார்கள். இத்தகு நோக்கில் இயேசு காவியத்தில் இயேசுவின் பார்வையில் பெண்கள் எவ்வாறு சமத்துவம் பெறுகின்றனர் ,சிறப்பிடம் பெறுகின்றனர் என்பதனை இதன் வழி ஆய்வோம்.

### சமயம்

அன்பே கடவுள். பரம்பொருள் ஒன்றே. புனிதம் நிறைந்த இறையாற்றல் வெவ்வேறு பரிமாணங்களில் வெளிப்பட்டுள்ளது. நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு திசையிலிருந்து பரம்பொருளாகிய மையத்தை நோக்கி முன்னேறிச் செல்கிறோம்.

இணக்கம் என்ற நூலில் ஆசிரியர் வின்சென்ட் சேகர், "கிருட்டிண பக்தனுக்கும் கிறித்தவனுக்கும் உலக சமயம் ஒரே ஒளிlயைக் கொடுக்கும். இந்து, கிறித்தவன், இசுலாமியன், பௌத்தம் என்பதெல்லாம் மாறி, இவை எல்லாம் சேர்ந்த ஒரு முழுமையாக அது தோன்றும். ஆனாலும் அது மேலும் வளர்வதாகவும் வளர்ச்சிக்கு இடமளிப்பதாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு

மனிதனையும் மனித வர்க்கம் அனைத்தையும் இருகரம் நீட்டி வரவேற்று அன்போடு அரவணைப்பதாக இருக்க வேண்டும். ஆறாம் அறிவின் ஆற்றலைத் தாண்டி மனித அறிவின் எல்லையைத் தொட்ட மகா ஞானிகளுக்கும், விலங்கிலிருந்து விடுபடாத அறிவற்ற முழுமூடனுக்கும் அங்கே சரிநிகர் சமானமாக இடமிருக்க வேண்டும்.அந்த சமயத்தில் பகையில்லை, பழியில்லை, சினமில்லை, சிறையுமில்லை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இறைவனைக்கண்டு, உணர்ந்து, மகிழ்ந்து, போற்றுதல் செய்யும். இறையாற்றலைக் கண்டுணரச் செய்யும்"(ப.13) உண்மையாக இறைவனைத் தேடுபவர்கள் என்றால் எப்படி இருப்பார்கள்,எப்படி இருக்க வேண்டும் என்பதனைச் சுட்டுகிறார் எனலாம்.

இயேசு சொல்வது போல "நான் தந்தையுள்ளும் தந்தை என்னுள்ளும் நிலைத்திருப்பது போல,நீங்களும் என்னுள் நிலைத்திருந்தால் மிகுந்த கனி தருவீர்கள்." என்கிறார்.

கவியரசு கண்ணதாசன் கூறுகையில், உலகின் அனைத்து உயிர்களிலும் ஆண்டவன் நிறைந்திருக்கிறான். இறைவன் பூச்சியம் போன்றவன். பூச்சியத்திலிருந்து எத்தனை பூச்சியத்தைக் கூட்டினாலும் கழித்தாலும் வகுத்தாலும் பெருக்கினாலும்கூட அதன் மதிப்பு மாறுவதில்லை என்பதனை,

"பூச்சியத்துக் குள்ளேயொரு

இராச்சியத்தை ஆண்டுகொண்டு

புரியாமலே இருப்பான் ஒருவன்-அவனைப்

புரிந்துகொண்டால் அவன்தான் இறைவன்" (இணக்கம்:பக் 14)

என்று கடவுளின் கடந்து, நிறைந்து நீக்கமற நிறைந்திருக்கும் நிலையைப் பாடுகிறார் எனலாம்.

சமயம் என்பது, அன்பிலே பிறந்து, வாழ்ந்து, வளர்ந்து அன்பையே பகிர்ந்து கொள்ளும் அன்பு நெறியே சமயம்.

இயேசு, இதனை, "உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பார் மீதும் அன்பு கூர்வாயாக" என்பார். (லூக்கா நற்செய்தி 10ஃ27)

இதன் நீட்சியாக இவ்வாறு வாழ்பவரகளுக்கான கடமையைச் சொல்கிறார்.

“பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே” 5 ( மத்தேயு 7ஃ12)

ஆக சமயம் என்பது அன்பு,மற்றும் அதன் விளைவுகள் எனலாம். உள்ளத்தில் உறையும் இறைவனும் உலகில் செயல்படும் இறைவனும் அனைவருக்குள்ளும் இருக்கும் இறைவனே ஒருவனே எனக் காணச் செய்யும் அருள் ஒளியே சமயம் எனலாம்.

**யூத சட்டமும் பெண்களும்:**

எந்த யூதனும் ஒரு பெண்ணோடு அதிகம் பேசக்கூடாது. அவள் தன் மனைவியாக இருந்தாலும் கூட, அவன் பேசக் கூடாது என்ற சட்டம் உண்டு. பொது இடங்கள் யாவும் ஆண்களுக்கு உரியவை .வீட்டில் இருப்பதே பெண்களுக்கு நல்லது. பெண்ணின் சாட்சியம் செல்லாது - சமய வாழ்வில் பெண்கள் இரண்டாம் தரமாகவே பார்க்கப்பட்டனர்.

**இயேசுவின் காலம்**

அடிப்படையில் யூத சமுதாயம் தந்தை வழி சமூகமே. ஆணாதிக்கமே எல்லா துறைகளிலும் மேலோங்கியிருந்தது. இரண்டாந்தர குடி மக்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளை இந்த சமுதாயம் வரவேற்றது. தன்னை ஒரு பெண்ணாகப் படைக்காததற்காக ஒவ்வொரு யூதரும் கடவுளுக்கு தனது தினசரி செபத்தில் நன்றி கூயதிலிருந்து பெண்களாக இருப்பதை எவ்வளவு வெறுத்தனர் என்பது தெளிவாகிறது. இச்சூழலில் இயேசு பெண்களை மதித்துப் பேசுகிறார், பாராட்டுகிறார், உடன் பணிபுரிய சீடர்களாகக் கொள்கின்றார். இயேசுவின் தோழமை அழைப்பில் சுய விழிப்புணர்வும் சமுதாய விழிப்புணர்வும் இணைகின்றன.

**மரி எனும் கன்னித்தாய்**

இயேசுவின் தாயாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கன்னி மரியம்மையிடம் கபிரியேல் வானதூதர் தோன்றி,

"அம்மையே நல்ல செய்தி

ஆண்டவர் குமாரன் உந்தன்

செம்மைசேர் மகனாய்த் தோன்றும்

சிறப்பினை அடையக் காண்பாய்

--------

இம்மையில் மறுமை காட்டும்

இறையவர் குமாரன் தன்னைத்

தம்மரும் மகனாய்க் காணும்

தவம்உந்தன் தவமே அன்றோ”

என்று வாழ்த்துகிறார் ( இயே .கா. ப.11 )

கன்னி தாயானது அன்றைய சூழலில் யூத சமுதாயத்தில், பெண்ணையே இறைவனது தாயாக தெரிந்து கொண்டது பெண்மைக்குரிய சிறப்பாகும்.

மரி எனும் புரட்சிப்பெண் :

வானவன் சொல்லைக் கேட்டவள் அவரிடமே வினா எழுப்புகின்றார்.

------------- கன்னி

எழுமூச்சில் கனலைக் சிந்தி

நன்றுநீர் சொன்ன சேதி !

நான் ஒரு விளக்கம் கேட்பேன்

இன்னும் நான் கணவ ரேற்று

இல்லறம் அடைந்தே னில்லை

என்னணம் மகனைக் காண்பேன்

ஏன் இந்த வார்த்தை ?" (இயேசு.கா.பக் - 4)

என்று மிகத் துணிவாக வானவரிடமே வினா எழுப்புகிறார். வினாவிற்கு விடையாக ஆதாரம் பெறுகிறாள்.எலிசபெத்து என்ற உறவினள் முதிர் வயதில் கருத்தரித்து இருக்கின்றார் என்று அடையாளம் சொல்லி மறைகிறார் .

கவிஞர் சிறப்பாக மரி அன்னை பற்றிக் கூறுகையில்,

“சுடர்விளக் கனைய கன்னி

மாபெரும் மணியே அன்றோ

-----------------------------------

மானத்தில் உயர்த்த கன்னி" (இயேசு.கா.பக் - 4)

என்று அன்னை மரியாளின் மேன்மையைச் சுட்டுகிறார். பிறரன்பில் மரியாளும் பாராட்டும் எலிசபெத் அம்மையாரும். இறைவன் வாக்கு தனக்கு அருளப்பட்டவுடனேயே பிறரன்புச் செயலைச் செய்ய மலைக் காட்டில் வாழ்ந்த முதிர் வயதில் கருவுற்ற எலிசபெத்தம்மைக்கு உதவிட விரைகிறார் .

இதனை ,

''காவலிலே தேவனருள் பெற்றோ ரெல்லாம்

கருணையுடை மானிடராய்த் திகழ்வா ரன்றோ !

நாவினிலும் மெய்யினிலும் நலமே காணும்

நன்மரியாள் தன்வாழ்க்கை நலத்தை விட்டு

ஆவலுடன் எலிசபெத்தின் இல்லம் நாடி

அருள்வாழ்த்துச் சொல்லிவிடச் சென்றாள் ஆங்கே!"

மரி அன்னையைக் கண்டவுடன் எலிசபெத் அம்மையார் மட்டில்லா உவகையுடன்,

"கருணையில் பெரியோரே தருணம் பார்த்து

காவலுக்கு வருவார்கள் மரியே! தாயே

-----------------------------

மனைத்தேடி வந்ததற்கு நன்றி!"

என்று மரியம்மையை மனமாரப் பாராட்டுகின்றார் எலிசபெத் அம்மையார்.

**புரட்சிப் பாடல்**

வானவா, ஏசு மனுவாக தன்னிடம் பிறப்பார் என்று அறிவிக்கப்பட்டு இசைவு தெரிவித்த அன்னை மரி இறைவனைப் புகழ்ந்து புரட்சிப் பண் இசைக்கிறார். மக்களின் தாழ்நிலை நீங்கப் பாடுகிறார்.

"ஆண்டவரை எந்நாளும் போற்றி வாழ்வேன்

எப்போதும் அவர் நமக்கு நன்மை செய்தார்

ஏழைகளுக் கவர்பெயரே புனிதமாமே

கைப்பாடு படுவோர்க்குக் கைகொடுத்தார்

காத்திருந்த செல்வர்களைக் கலங்க விட்டார்

இறவாத புகழ் தந்தாய் நீயே என்றாள்" (இயே.கா.பக் - 15)

இதனை லூக்கா நற்செய்தியில் நோக்கும் போது,

"ஏனெனில் அவர் தம் அடிமையின்

தாழ்நிலையைக் கண்ணோக்கினார்

இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப்

பேறுபெற்றவர் என்பர்

------------------

உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரை

சிதறடித்து வருகிறார்

வலியோரை அரியணையினின்று

தூக்கி எறிந்துள்ளார்

தாழ்நிலையில் இருப்போரை

உயர்த்துகிறார். பசித்தோரை

நலன்களால் நிரப்பியுள்ளார்

செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்" (லூக்கா நற்செய்தி 1ஃ48-53)

என்று கடவுள் கண்ணோக்கி வறியோர்க்கு நலன்களைப் அளித்து ஆணவம் மிக்கவரை சிதறடிக்கின்றார் என்று பாடுகிறார்.

"அன்னை மரியாவின் பாடல்தான் உலகிலேயே மிகச் சிறந்த புரட்சி ஆவணம் என்று ஸ்டான்லி ஜோன்ஸ் என்பவர் குறிப்பிடுகின்றார்" (லூக். ந. பெ. பக்:.36)

செல்வச் செழிப்பில் வாழ்வோர் பிறருடன் பகிர்ந்து வாழ வேண்டியதன் அவசியத்தை அன்னைமரியம்மை அன்றே பாடியுள்ளார். தொட்டதும் பட்டென எழுந்தார். அனைவரும் நலமாக வாழ விரும்பிய இயேசு தன் ஆற்றலால் பேதுருவின் மாமியாரைத் தொட்டு குணமாக்குகிறார்.

"சாயப்போம் உடல்போலக் கிடந்த அந்தத்

தள்ளாத மூதாட்டி தம்மைப் பார்த்து

மாயப் பொய் நோயே நீ விலகு”   (இயேசு.கா.பக் - 84)

என்று முதுமையைக் காப்பாற்றிப் போற்றுகின்றார்.

“இந்த உலகில் இறைவன் படைத்த இயற்கையை அழித்து வருவதால் மனிதர்கள் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு பல்வேறு நோய்களின் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர் அறிவியலின் வேகத்தைவிட நோய்களின் அணிவகுப்பு அதிகரித்து வருகின்றது”.(லூ. ந. பெ. பக் 61)

கடவுளை நம்புவோம். இயற்கையைப் பேணுவோம். நோய் நொடி இன்றி வாழ்வோம். இயேசுவால் குணமடைந்த பேதுருவின் மாமியார் உடனே எழுந்து தனது அன்பு பாசம் பாராட்டு மகிழ்ச்சி மன்னிப்பு என அனைத்தையும் பகிர்ந்து பணிவிடை செய்கிறார்.

“வாழ்வு இனிமையானது என்று தூங்கிக்கொண்டே கனவு கண்டேன், விழித்துப் பார்த்த பொழுது வாழ்வு சேவைதான் என்றுறுணர்ந்தேன” (லூ. ந. பெ. பக் 61)

என்று ரவீந்திரநாத் தாகூர் கூறுவார். பிறரன்புச் சேவையே வாழ்வு மகிழ்ச்சி என்று செயலாக்கி வாழ அழைக்கின்றார் எனலாம்.

தாய்ப்பாசம் வென்றது: இயேசு வழியில் செல்கையில் எதிரே ஒரு சோக ஊர்வலம். கைம்பெண்ணின் ஒரே மகன் இறந்து புதைக்கக் கொண்டு செல்கிறார்கள். அந்தத் தாயின் நம்பிக்கை, எதிர்காலம் அனைத்தும் இருண்டு விட்ட பிடிப்பற்ற சோகம் அழுது புலம்பி மாரடிக்கிறாள்.

இயேசு தாமாக முன்வந்து கரங்களை நீட்டி

“உளமார வாலிபனே எழுவாய்”   (இயேசு.கா.பக் - 114)

என்று சொல்லவே உறங்கிப் பின் எழுபவன் போல அவன் எழுந்தான். நன்றியின் மகிழ்வில் திளைத்து கண்கள் குளமாக தாய் இயேசுவை பார்க்கிறாள். தாயின் கதறலை மகிழ்வாக மாற்றிய இயேசுபிரான் தன்னலமில்லா தாய் அன்பிற்கு கொடுத்த பரிசு எனலாம்.

இறந்த யாயிரின் ஒரேமகளையும்

“வாடிய சிறிய பெண்ணே எழுந்துவா!” (இயேசு.கா.பக் - 147)

என்றதும் சிறுமி எழுந்துவந்தாள்.பெற்றோரிடம் ஒப்படைக்க,அவர்கள் மகிழ்ச்சியை என்னென்பது.

**நறுமணமான பேரன்பு**

பெண்கள் அடிமைப்பட்டு கொடுமைப்பட்டிருந்த யூத சமுதாயத்தில்

ஆண்களுக்கு நிகரானவர் பெண்கள் என்பதை இயேசு முன்னெடுக்கிறார். பாவியான ஒரு பெண் இயேசுவின் பார்வையில் மன்னிப்பும் மாண்பும் பெறுகிறார் என்பதை நாம் நோக்குவோம்.

பொது இடங்களில் அன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு அனுமதி இல்லை அப்படியிருக்க ஆண்கள் நிறைந்திருந்த வீட்டிற்குள் கூட்டத்தினரை விலக்கித் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்தவள் துணிச்சலை என்னென்பது !

யூதப் பெண் கூந்தலை பொது இடங்களில் அவிழ்ப்பது அப்போது அவமானமாகக் கருதப்பட்டது ஆயினும் அவர் இயேசுவின் காலடியில்

“மண்டியிட் டமர்ந்து மெல்ல

செந்திருக் கையால் ஐயன்

திருவடி தொட்டு மேலும்

சிந்திய கண்ணீ ராலே

சிறப்புறக் கழுவி”

கூந்தலால் துடைத்து பின்னர்

“கெழுமிய வாசத் தைலம்

சிறப்புறத் தேய்த்தாள்”

இச்செய்கை அவளது மன மாற்றத்தை காண்பிக்க இயேசு உடனே,

“இளமக ளேஉன் பாவம்

எல்லாம் தீர்த்து விட்டோம்

வளமிகும் வாழ்க்கை வாழ்வாய்

வாழ்க! என்று போகச் சொன்னார்” (இயேசு.கா.பக் - 118)

தீமை செய்பவர்கள் குற்றங்களை மன்னித்தது மட்டுமல்ல அவருக்கு நல்லது செய்ய வேண்டும் என்று எண்ணிய இயேசு வளமுடன் அமைதியில் வாழ்வாயாக என்று வாழ்த்தி அனுப்புகிறார் எனலாம்.

“வாழ்வில் அன்பும் இரக்கமும் தேவை. இவை எல்லா சமயத்துக்கும் இரண்டு கண்களைப் போல அடிப்படையானவை,இருபெரும் வாழ்வியல் வழிகாட்டிகளாகவே விளங்குகின்றன.மக்கள் வாழ்வில் நம்பிக்கையை ஊட்டி,எதிர் காலத்தை வழங்குவதே சமயங்கள் என்கிறார் டாக்டர்.மிக்கேல் அமலதாசு” (இ:ப:85) இயேசுவில் இவரின் வார்த்தைகள் இங்கு வாழ்வாவதைக் காண்கிறோம்.

## துணையாய் பெண்கள் இறையாட்சியில்

இயேசுவின் இறையாட்சிப் பணியில் பங்கேற்ற பெண்களை இயேசு சமநிலையில் வைத்து நோக்குகின்றார் .ஆண்களைவிட பெண்களின் குணங்கள் இறையாட்சிக்கு மிகவும் தேவை என்று யூத சமுதாயத்தில் பிறந்த இயேசு காண்கிறார்.

"சமுதாயத்தில் பெண்களும் குழந்தைகளும் ஒரு பொருட்டாக மதிக்கப்பட்டதே இல்லை. அப்பொழுது எந்த இயக்கத்திலும், அமைப்பு முறைகளிலும் மற்றும் பொதுப் பணிகளிலும் பெண்களுக்குப் பங்கில்லை தொழுகைக் கூட்டங்களில் அவர்களுக்கு இடமில்லை எந்த ராபியும் பெண்களைச் சீடராக ஏற்றதில்லை. சட்டங்களாலும் சம்பிரதாயங்களும் அடக்கப்பட்டு அடிமையாக்கப்பட்ட பெண்ணினத்துக்குச் சீடத்துவம் அளித்து சமத்துவ சமுதாயத்தை உருவாக்க அடித்தளமிட்டார் இயேசு. இது யூத வழக்கத்திற்கு மாறானது. இப்படிப்பட்ட இவரது செயல் புரட்சிகரமானது" ( லூ. ந. பெ. பக். 80)

என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை எனலாம். சூதகக் கோளாறாலே பன்னிரண்டு ஆண்டுகள் வாதைப்பட்ட மங்கை இயேசுவின் மேலங்கியைத் தொட்டாலே நலமாவேன் என்று நம்பித் தொட்டார் கூட்டம் அலைமோதும் நேரம் இப்பெண் மலையளவு நம்பிக்கையுடன் இயேசுவின் மேலங்கி தொட்டதும் நலம் அடைந்தார்கள்.

"நாட்டத்தில் தொட்ட பெண்ணோ

நடுக்கத்தில் வந்து நின்றாள்

இளங்காற்றே! இந்த நேரம்

இறைவனை விசுவ சித்தாய்!

உளமாரச் சொல்லு கின்றேன்

உனக்கொரு நோயும் இல்லை

வளமாகப் போய்வா"21 என்றார். (இயேசு.கா.பக் - 149)

பெரும்பாடுள்ள பெண் பொது இடத்திற்கு வந்து கூட்டத்தில் நுழைந்து இயேசுவின் ஆடைகளை தொட்டது மரபு மீறிய புதிய செயல் இது.

இயேசு அப்பெண்ணைப் பாராட்டி கூட்டத்திற்கு வெளிப்படுத்த விரும்பினார். எனவே அவர் மக்கள் கூட்டத்தைப் பார்த்து உங்கள் நடுவில் இருக்கும் யாரோஒருவர் என்னைத் தொட்டார்கள் என்றார். உடனே அப்பெண் இயேசுவின் முகம் பார்த்து பேசுவதற்கு இயேசுவே வாய்ப்பு அளிக்கின்றார் நம்பிக்கை இருந்தால் நாரில் கூட பூ வந்து ஒட்டிக்கொள்ளும் எனலாம்.

நம்பிக்கையே வாழ்க்கை

நடுவரும் கைம்பெண்ணும் நிகழ்வில் பொல்லாத நடுவர் என்று குறிப்பிடப்படுகிறார். பலமுறை கைம்பெண் நியாயம் வழங்கக் கேட்கும் நிலை. பொல்லாத நடுவர் என்றாலும் கைம்பெண்ணின் குரலைக் கேட்கின்றார். அங்ஙனமாயின் கடவுள் நிச்சயம் கேட்பார் என்பதனை,

“அபலை மக்கள் அழைக்கும் நாளில்

ஆண்டவர் அவரை அறியாதிருப்பாரோ?

மண்டும் குரலை மதியாதிருப்பாரோ?

காது கொடுத்துக் கடவுள் கேட்டு

நீதி வழங்க நிதமும் வருவார்” (இயேசு.கா.பக் - 149)

முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார் அபலை மக்கள் அழைக்க ஆண்டவர் அவர் குரலைக் கேட்பார் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது என்றால் மிகையாகா எனலாம்.

**விருந்தோம்பி சிறந்த பெண்களிருவர்**

மார்த்தாள், மரியாள் என்ற பெத்தானியப் பெண்கள் இருவர் வீட்டில் இயேசு அடிக்கடி சென்று தன் மனம் திறந்து உரையாடுவதும், விருந்து உண்ணுவதும் வழக்கம்.

“மார்த்தா ளும்ஓர் மாபெரும் பணியில்

பரபரப் போடும் பறந்து திரிந்தனள்

விருந்து படைக்கும் வேலைதான் அஃது

மரியாள் அந்த மன்னனின் முன்னே

காலடி யருகே கனிவுடன் அமர்ந்து

சொல்லும் மொழிகளைச் சுவையுடன் கேட்டனள்!” (இயேசு.கா.பக் - 149)

மார்த்தா அவரை எதிர்கொண்டு உபசரிக்கிறார் அறுசுவை உணவுகளை தயாரிக்கிறார்கள். விருந்தினர்களோடு கலந்துரையாடுகிறார் முடிவில் அவர்களுக்கு அன்பாக உணவு பரிமாறி மகிழ்ச்சியுடன் அனுப்பி வைக்கிறார். ஆழமான உறவு மகிழ்ச்சிக்கு எப்படி பெண்கள் நடந்து கொள்ள வேண்டும் என்பதை மார்த்தா, மரியா உறவு நமக்கு எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

## மனித நேயமும் நலமும்

பெண்கள் சமுதாயத்தில் புறக்கணிக்கப்படும் போதெல்லாம் இயேசு அவர்களுக்காக உரிமைக் குரல் கொடுக்கிறார். புறக்கணிக்கப்பட்டு கூனியாக 18 ஆண்டுகளாக இருளில் வாழ்ந்த பெண்ணைத் தானாகத் தேடி வந்து நலம் அளித்தார். ஓய்வுநாளில் குணப்படுத்துவது குற்றம் என்று கருதியவர்கள் நடுவில் அப்பெண்ணை ஓய்வு நாளில்தான் குணப்படுத்தினார். குற்றம் சுமத்திய அவர்களுக்கு மனித நேயத்தையும் மனித மதிப்பீடுகளையும் கற்றுக் கொடுக்கும் வகையில் விளக்கமளித்தார்.

இயேசுவின் பார்வையும் தொடுதலும் அவருக்கு ஒரு புது வாழ்வைக் கொடுத்தது. இனி புதிய உறவுகள் மலரும் இவர் வாழ்வில் பொன்னாளே.

பெறுவதிலும் தருவதே இன்பம்:

கைம்பெண்கள் யூத சமுதாயத்தில் மிகவும் சுரண்டப்பட்டவராக ஓரங்கட்டப்பட்டவராக நடத்தப்பட்டார். இயேசு கோயிலில் ,

“உண்டியல் எதிர மர்ந்து

உத்தமர் கூர்ந்து பார்த்தார்

அண்டிய பணக்கா ரர்கள்

ஆயிரக் கணக்கில் போட்டார்

நெருங்கிய விதவைப் பெண்ணாள்

நிலையிலா தாடும் கையால்

வருந்தியே உழைத்துச் சேர்த்த

வடிவான காசைப் போட்டாள்

வெள்ளத்தில் சிதறிக் கீழே

விழுந்ததைச் செல்வர் போட்டார்”.

உள்ளதே குறைவென் றாலும்

உத்தமி முழுதும் போட்டாள்” (இயேசு.கா.பக் -287)

பெண்கள் கொடுப்பதில் மேலானவர்களாக தாராள மனதுடன் தியாக மனதுடன் திகழ்ந்ததை இயேசு பாராட்டுகிறார்.

அருள்பணி. ப. ரஸல்ராஜ் நாயகன் தேவசகாயம் என்ற தனது புத்தகத்தில் கூறுவது போல “இழந்ததை மீட்பது என்னுடைய இலக்காக இருக்க முடியாது. இருப்பதைப் பிறர்க்காக இழப்பதையே எனக்கு ஆதாயமாகக்

காண்கிறேன்.நான் எதைச் சம்பாதித்தாலும் அவை கொடுப்பதற்குத் தானே.மரணம் எனக்கு எதிரி அல்ல.வாழ்க்கை எனக்கு நண்பனும் அல்ல.மரணத்தை நேசிக்கிறேன்.என்னைப் புதைப்போரிடம் ஒரு வேண்டுகோள்:எனது கல்லறையில் பலன் தரும் ஒரு செடியை நடுங்கள்.இறந்த பிறகும் என்னைப் பகைத்தோர் உட்பட அனைவர்க்கும் நற்கனிகளைக் கொடுக்கவே ஆசிக்கிறேன்." (பக்:16,26) இந்த வார்த்தைகள் ஏழையான விதவைப் பெண்ணின் வாழ்வில் காண்கிறோம் எனில் மிகையல்ல எனலாம்.

## பெண்களின் தோழமையோடு

பெண்கள் நிலையை அருள் சகோதரி.இனிகோ சொல்லும் போது, "பொது வாழ்வில் யூதப் பெண்களுக்கு இடமே இல்லை என்றால் அது மிகையாகாது! சமுதாயத்தில் அவர்களுக்கு அந்தஸ்து கிடையாது.அரசியலில் சுத்தமாக இடமே இல்லை.சமய வாழ்வில் இரண்டாம் நிலைதான் தரப்பட்டது.மதச்சட்டங்களைக் கற்க அவர்களுக்கு உரிமையில்லை.இப்படிப்பட்ட சூழலில் இயேசு மரபுப் பார்வையை விடுத்து மாற்றுக் கண்ணோட்டத்தினின்று அரும்பிய புதுமைச் சிந்தனையோடு புரட்சிகரமான செயல்முறையைத் தொடங்கி வைத்தார்.

"விபச்சாரி" என்று மட்டுமே கேட்டுப் பழகிப் போயிருந்த யூத சமுதாயத்தில் "விபச்சாரன்" என்ற மாற்று சிந்தனையைத் தருகிறார்" ( 21-ம் நூ. வி. ப.98) இயேசுவின் வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்த பெண்களும் ஏராளம்.

மரியாள், பேதுருவின் மாமியார், நயின் ஊர் கைம்பெண், பாவிப்பெண, விருந்தோம்பலில் சிறந்த, மார்த்தா, மரியா, இயேசுவுக்குப் பணிவிடை செய்த பெண்கள், இயேசுவைப் புகழ்ந்த பெண், இயேசுவின் பின்னால் சென்று நலம் பெற்ற கூனிப்பெண்,ஏழைப்பெண், கல்லறைக்குச் சென்ற பெண்கள்,,என பட்டியலிடுகிறார்.லூக்கா (24.ஃ1-11)

## முடிவுரை

இவ்வாறு பெண் விடுதலையை அன்றே தனது இறையாட்சிப்பணியில் தொடங்கி வைத்தார் எனலாம். தொடர்ந்து நாமும் மறுக்கப்பட்ட நம் உரிமைகளுக்காகப் போராட அழைக்கப்படுகிறோம் எனலாம். மரபுகளை உடைத்து மனிதம் வாழ்வு பெற தன்னைக் கையளித்தவர்களில் முதலிடம் பெற வேண்டியவள் அன்னை மரியா. பாராட்டும் பெருமனம் படைத்தவர் எலிசபெத் இழப்பையும் சவாலாக ஏற்று கண்ணியமாய் வாழ்ந்து நம்பிக்கையூட்டிய அன்னா. பணிவிடை செய்யும் தன்னலமில்லாத பேதுருவின் மாமியார், தாய்ப்பாசத்தால் மகனை உயிர்பிக்க வைத்த கைம்பெண், தன்னை உணர்ந்து

துணிச்சலோடு சென்று மன்னிப்புப் பெற்று ஆழ்ந்த அன்புறவை இயேசுவின் மேல் கொண்ட பாவியான பெண். இயேசுவுக்குத் துணையாய் நின்ற பெண் சீடர்கள், நம்பிக்கையால் மகளை உயிர்ப்பிக்கச் செய்ய வைத்த யாயிர் மகள், மலையளவு நம்பிக்கை கொண்ட பெரும்பாடுள்ள பெண், உள்ளதை உள்ளன்போடு கொடுத்த கைம்பெண் என புரட்சிப் பெண்களின் குணநலன்களை வாழ்வைக் கண்டோம். மேதா பட்கர், அன்னைத் தெரசா, ராணிமேரி, சகுந்தலா மைதிலி சிவராமன், வந்தன சிவா, கல்பனா சாவ்லா, இரோன் ஷர்மிளா, மற்றும் சாதனைப் பெண்கள் சின்னப்பிள்ளை, பிரேமலதா, லதா இது போன்ற பல பெண்கள் இன்று பல்வேறு துறைகளில் சமுதாய நலனுக்காக உழைத்தும் முன்னேறியும் வருகின்றார்கள் என்பது கண்கூடு. இன்னும் ஆண்களுக்கு சமமாக பல துறைகளில் பெண்களின் பங்கேற்பு உறுதிப்படுத்தப்படும்போது பெண்கள் நிலை உயரும் எனலாம். அன்பு தான் உண்மையைக் காண்கிறது. அன்பு தான் பிறரன்புச் சேவையைத் தூண்டுகிறது. அன்பு தான் ஆன்மிகம் அன்பு தான் இறைவன். அன்பு தான் சமயம். அன்பு தான் விடுதலை என்பதனை இயேசு காவியம் வாழ அழைக்கிறது எனில் மிகையல்ல எனலாம்.

## மேற்கோள்கள்


கண்ணதாசன், இயேசு காவியம்

டிஎன்பிசிஎல்சி, திரு விவிலியம், திண்டிவனம், தமிழ்நாடு, இந்தியா

அ. அலோசியஸ் சேவியர், அ.பீட்டர் அபீர். (தொகுப்பு) 21-ம் நூற்றாண்டில் விவிலியம்

சகாய நித்யா அருட்சகோதரி, லூக்கா நற்செய்தியில் பெண்கள், புனித அன்னாள் சபை, சென்னை

ப. ரஸல்ராஜ், நாயகன் தேவசகாயம், முதன்மைச் செயலர் நீத்துறைப் பதிலாள், ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை

வின்சென்ட் சேகர், இணக்கம், வைகறைப்பதிப்பகம், திண்டுக்கல், அருளானந்தர் கல்லூரி, மதுரை.